தனதுநாள் முன்னும் பின்னும்
தான்குறை பாவ நாளில்
வனிதையே ! அணைவார் கேடாம்
வாழ்மனை ஏகில் அன்றே. 512

*(886a : 186)*

*(இ. ள்)* ஞாயிற்றுக்கிழமையிலும் செவ்வாய்க் கிழமையிலும், குடிபுக அலையவைத்துத் துன்பத்தைத் தரும். திங்கட்கிழமையிலும், வெள்ளிக் கிழமையிலும், வியாழக் கிழமையிலும், புதன்கிழமையிலும் குடிபுக நன்மைகள் உண்டாகும். சனிக்கிழமையில் குடிபுக அழிவைத்தரும். மனைக்குரியவன் பிறந்த நாளுக்கு முன்னும் பின்னும் உள்ள நாட்களிலும் குறையுடைய நாட்களிலும் பாவ நாட்களிலும் மனையில் குடிபுக கேடுண்டாகும்.

### மனையில் குடிபுக ஆகாத நாட்கள்

தத்தும் கதிர்சேய் இவையாகா
சனிபொன் புந்தி மதிவாரம்
அத்தம் சித்திரை புனர்பூசம்
அனுஷம் சோதி அசுபதியும்
உத்த ரங்கள் ஒரு மூன்று
வோணம் ரேவதி இவைநன்றாம்
ஏத்தும் குடந்தேள் சதுர்த்தியுவா
இருத்தை நீக்கிக் குடிபுகுமே. 513

*(இ. ள்)* வாரங்களில் ஞாயிறு, செவ்வாய் ஆகாது. சனி, வியாழன், திங்கள், புதன் நன்று. நட்சத்திரங்களில் அஸ்தம், சித்திரை, புனர்பூசம், அனுஷம், விசாகம், அசுபதி, உத்திரம், உத்திரட்டாதி, திருவோணம், இரேவதி நன்று. இராசிகளில் கும்பம், விருச்சிகம் ஆகாது. பட்சங்களில் சதுர்த்தி, உவா, இருத்தை ஆகாது. இவை நீக்கி குடிபுக வேண்டும். *(சி. நூ. பா. : 464)*

## இதுவுமது

அட்டமி உவாஇ ருத்தை
அருக்கன்சேய் மூலை மாதம்
விட்டிலும் விஷக்கடி கையோடு
வெள்ளியே எதிரில் மூடம்
சுட்டிய வலக்கண் சுங்கன்
சூலமும் நேரே யாதல்
நட்டமா மனைபு குந்தால்
நாசமென் றுரைக்க லாமே. 514

*(இ. ள்)* உவா, இருத்தை, ஞாயிறு, செவ்வாயும், மூலை மாதங்களாகிய பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழியும், விட்டியும், விஷகடிகையும், வெள்ளி எதிரும் மூடம், பாடு, வலக்கண் வெள்ளியும், சூலம் எதிரும் குடிபுகுவாராகில் நஷ்டமாம். *(சி. நூ. பா. : 465)*

## சுக்கிரன் பலன்

சுக்கிரன் எதிரே யாகிற்
தொல்குடி உயிர்க்குக் கேடாம்
சுக்கிரன் வலமே யாகில்
வான்பொருள் சேதம் காணும்
சுக்கிரன் பின்னே யாகில்
சுகமுடன் வாழ்வ தாகும்
சுக்கிரன் இடக்கண் ணாகில்
துக்கமே இல்லை கண்டாய். 515
(1005 a)

*(இ. ள்)* சுக்கிரனுக் கெதிராக மனையெடுக்கில் மரணம் கேடு உண்டாகும். சுக்கிரன் வலக்கண்ணாகிற் பொருள் சேதமாம். சுக்கிரனுக்குப் பின்னேயாகில் சுபம் உண்டு. சுக்கிரனுக்கு இடக்கண்ணாகில் மகா உத்தமம். வெள்ளியின் பாடும், மூடமும் ஆகாது. புதுமனை கோலவும், குடி புகவும் நாள் பார்க்க நன்றாம்.

குறிப்பு: 1. சுக்கிரன் எதிரே யாகில்
தொல்குடி சாவு கேடாம்
சுக்கிரன் வலக்கண் ணாகிற்
தோன்றிய பொருளும் சேதம்

2. துக்க மொன் றில்லை யென்னே.

## மனைக்குப் புகும்போது செய்ய வேண்டியவை

மறையொலி ஓமம் ஓங்க
மங்கள முழக்கம் ஆர்ப்ப
நிறைமணி விளக்கி னோடு
நீழலங் கார மென்ன
மறைமய மதனு வோரில்
அடுத்தநற் பொருட்கள் கொண்டு
குறையறத் திருவை யுண்ணிக்
குடிமனை புகுத நன்றாம். 516

*(886 a : 191)*

*(இ. ள்)* மனையில் குடிபுகும்பொழுது, வேதவொலி எழ, யாக பூசை செய்து, மங்கள ஒலிகள் முழங்க, நிறைந்த நெல்மணிகளை நாழியில் வைத்து, விளக்கேற்றி, அலங்காரம் செய்து, அந்தணர், சிற்பன் ஆகியோருக்கு நல்ல பொருள்களை கொடுத்துத் திருமகளை மனதில் நினைத்து வணங்கி, மனைக்குள்ளே புகுதல் நன்மையைத் தரும்.

----- ✿ -----

## 14. முகூர்த்தக் கால் நாட்ட நல்ல நாள்

மதிதனில் காலை நட்டு
வன்புதன் கையை ஏத்தி
விதிதனில் வெள்ளி வேய்ந்து
வியாழத்தில் குடியே புக்கில்
சதிருடன் பகைவர் வந்தே
தனலெரி முட்டி னாலும்
பதிதனில் இந்தி ரன்போல்
பயன்பெற வாழ லாமே. 517

*(886 a : 189)*

*(இ. ள்)* முகூர்த்தம் வைத்து திங்கட்கிழமை உதயத்தில் காலை நட்டு, புதன்கிழமை உதயத்தில் வீட்டை உயர்த்திக்கட்டி வெள்ளிக்கிழமை உதயத்தில் கூரை வேய்ந்து, வியாழக்கிழமை உதயத்தில் குடி புகுந்தால், பகைவர்கள் நெருப்பிலிட்டுக் கொளுத்தினாலும் அந்த வீடு வெந்து போகாது. அந்த வீட்டில் குடியிருந்தவர்கள் இந்திரனைப் போல போக போக்கியத்தை அடைவார்கள்.

### இதுவுமது

மதியுதிக்கக் கால்நாட்டி மாலுதிக்கக் கைவைத்து
மிதிவெள்ளி தானுதிக்க மேய்ந்து - கதிர்பெறவே
மந்திரிமார் தானுதிக்க மாடம் புகுவீரேல்
இந்திரன்போல் வாழ்வீர் இசைந்து. 518

*(சி. நூ. பா. : 261)*

*(இ. ள்)* சந்திரனுதிக்க ஸ்தம்பம் முதலியவை நாட்டி, புதனுதிக்கப் பரப்புப் பூட்டி, வெள்ளியுதிக்க தளம் அல்லது ஓடு இசைந்து, வியாழம் உதிக்க கிரகப் பிரவேசம் செய்தால் தேவசம்பத்துடன் வாழ்வார்கள்.

## இதுவுமது

மதியுதிக்கக் கால்நாட்டி மாலுதிக்கக் கையேத்தி
விதியுதிக்க வெள்ளியினால் வேய்ந்து - பதிதோறும்
மந்திரியே முன்னாக மாடமனை புகுந்தால்
இந்திரன்போல் வாழ்ந்துண் டிரு. 519

*(886 a : 188)*

## முகூர்த்தக் காலின் அளவு

நாயகன் மனைக்கு முன்னே
நலமதாய் வரும்ம னைக்கு
நாயகன் மனைக்கு முக்கால்
கால்பாதி நாட்ட நன்றாம்
நாயகன் மனைக்கு ஒப்பாய்
நன்மனை தன்னைச் செய்தால்
நாயகன் தனக்குக் குத்தம்
நகரியும் அழியு மன்றே. 520

*(886 a : 106)*

*(இ. ள்)* கோவிலுக்கு முன்னால் மனை எடுக்க முகூர்த்தக்கால் நடும்பொழுது, கோயிலுக்கு முக்கால் அல்லது பாதி அளவு இருக்கும் வண்ணம் முகூர்த்தக்காலை நடவேண்டும். நாயகனுடைய மனைக்குச் சமமாக முகூர்த்தக்காலை நாட்டினாலும், வீட்டினைக் கட்டினாலும் குற்றமாகும். ஊரும் அழிந்துபோகும்.

குறிப்பு: 1. நாயகன் என்பதற்கு அரசன் எனவும் பொருள் கொள்ளலாம்.

## முகூர்ததக் கால் நாட்டும்போது செய்ய வேண்டியது

தென்மேலை மூலைக் காலைச்
சிறப்புடன் பால்நெய் தோய்த்து
மென்மையாம் அணியும் பொன்னும்
மாரத்தின மணியும் இட்டு

மென்மையாம் பால்நீர் விட்டு
விநாயக பூசை பண்ணி
நன்மையாய் முகூர்த்தங் கொண்டு
நாட்டிடுங் கால்கள் தானே. 521
*(1005 b)*

*(இ. ள்)* மனையின் தென் மேற்கு மூலையில் முகூர்த்தக் காலை, பால், நெய் ஆகியவற்றில் நனைத்து, குழியில் அணி, இரத்தின மணிகள் முதலானவற்றைப் போட்டு, பால், நீர், இவற்றை விட்டு, விநாயகருக்குப் பூசை செய்து, பின்னர் காலை நாட்ட வேண்டும்.

முன்னிய முகூர்த்தம் தன்னில்
முதல்வனைப் பூசை செய்து
பொன்னொடு மணியும் பாலும்
பொலிவுடன் குழியிற் சேர்த்து
தென்மூலை மூலைக் காலை
சிறப்புடன் எழுந்து நாட்டி
தென்கீழும் வடக்கீ ழும்மேல்
மூலையும் தெரிந்து நாட்டே. 522
*(886 a : 249)*

*(இ. ள்)* நல்ல முகூர்த்தத்தில் வினாயக பூசைப் பண்ணி, பொன், நவமணி, பால் ஆகியவற்றைக் குழியிலே விட்டு, முதலில் தென்மேல் மூலையில் காலை நாட்டி, தென்கீழ் மூலை, வடகீழ் மூலை, வடமேல் மூலை அடரவே சேர நாட்ட வேண்டும்.

### கூரைக்கால் நாட்டுதல்

பரப்பினை ஒன்பதாக்கி
பண்புடன் ஒன்று நீக்கி
இருப்பதோர் எட்டும் காலாம்
இரண்டுகீழ் மேலே தானும்

குருத்துடன் கவரத் தானும்
கொள்வது மிச்ச மாகும்
திருத்தமாய் முகூர்த்தம் கொண்டு
தென்மேலை மூலை நாட்டிடே. 523
*(1005 b)*

(இ. ள்) பரப்பினை ஒன்பது கூறு செய்து ஒரு கூறு தணியக் காலளவாம். இரண்டு கூறு குழி நட்டு, மற்ற ஆறு கூறு செய்து மேலே கவர்வதற்கு ஒரு கூறு. ஐந்து கூறு மிச்சம் கொள்ளவும். தென்மேல் மூலையில் கால் நாட்டுவது.

**இதுவுமது**

அகலத்தை ஒன்ப தாக்கி
அதிலொன்று குறைக்கக் காலாம்
புகலுற்ற கழிக்கு ரெண்டு
போக்குமேல் ஆறு கூறின்
மிகலுற்றே கவர்வ தற்கு
மேலது ஒன்று போக்கிச்
சகலர்க்கும் நடுவோர் ஐந்து
கூறெனச் சாற்றி னாரே. 524
*(சி. நூ. பா. : 474)*

## 14. முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்

முடிபருத்து வட்டமிடிற் றிருவே சேரும்
மூன்றில்ஒரு பங்குடைந்தால் செயசந்தோஷம்
நெடியஐந் திரண்டிற்குத் தொலையாச் செல்வம்
நீங்கிநரம் பேபிடித்தால் நீடு வாழ்வாம்
கடுகுதனை உள்ளானால் இரத்தினம் சேரும்
கனகவந்து இரண்டிற்கும் கருது பூசல்
வடிவமெனும் தமிழோதும் மயனார் சொன்ன
வளமைதேங் காய்ச்சகுன வண்மை கேளே.525
*(742 : 54)*

*(இ. ள்)* மனைக்கு முகூர்த்தம் செய்து தேங்காய் உடைக்கும் போது முடி பருத்து அடி சிறுத்துக் காணப்பட்டால் செல்வம் சேரும். மூன்று பங்கு சிரசிலும் ஒரு பங்கு பாதத்திலுமானால் சந்தோஷம் உண்டாகும். ஐந்து பங்கு சிரசு, மூன்று பங்கு பாதத்திலுமானாலும் ஐந்து பங்கு சிரசு, மூன்று பங்கு பாதத்திலுமானாலும் ஐந்து பங்கு சிரசு இரண்டு பங்கு பாதத்திலுமானாலும் செல்வம் உண்டாகும். நரம்பு பிடித்தால் மனைக்குரியவன் நீண்ட ஆயுளைப் பெற்று விளங்குவான். கடுகளவு சிதழ் உள்ளே விழுந்தால் ஒன்பது வகையான இரத்தினங்களும் மனைக்குரியவனுக்கு வந்து சேரும். நடுவில் பிளந்தால் மிகுந்த துயரம் உண்டாகும்.

### முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்

ஒன்றிரண்டு தனக்குநன்மை ஆறு நாலாய்
உடையவெகு துன்பமது ஓதக் கேளு
அண்டிமெய்யிற் கண்தெறித்தால் மரண மாவான்
ஆகவும்நல் ஓடுவிட்டால் அசனம் இல்லை
விண்டுஒடு தெறித்திடுமேல் பிணியாம் மெய்யில்
மேதினியில் வீடுவாசல் விலையு மாவன்
பண்டுதமிழ் அறிந்துஓதும் மயனார் சொன்ன
பாடல்தேங் காய்ச்சகுனம் பகரக் கேளே. 526
*(742 : 55)*

(இ. ள்) மனை முகூர்த்தம் செய்து தேங்காய் உடைக்கும் பொழுது, நடுமத்தியில் உடைந்தால் நன்மை. ஆறு சுக்கல், நான்கு சுக்குகளாய் உடைந்தால், மிகுந்த துன்பம் உண்டாகும். உடலில் தேங்காய்சில் தெறித்தால், அந்த மனைக்கு உரியவன் இறந்து போவான். ஓடு விட்டால், உணவு கிடைக்காது. ஓடு தெறித்தால், உடலில் நோய் உண்டாகும். பூமியில் விழுந்தால், அம்மனைக்கு உரியவன் வீடுவாசலை விற்று துக்கமடைவான் என்று மயனார் சொன்னதைக் கேட்பாயாக!

**முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்**

அடித்ததோர் தேங்காய் தானும்
அகலவே சிதறி விட்டால்
முடித்ததோர் மனைவிக் காகா
முகிலுடன் ஓடு மாகில்
எடுத்ததோர் சிற்பன் கையில்
இடறியே விழுவ தாகில்
வடித்தது சிவாச கங்கள்
வாழ்வில்பா ழாகும் என்றே. 527

*(ம. நூ. பா. : 63)*

(இ. ள்) மனைகோல முகூர்த்தம் செய்யும் பொழுது, தேங்காய் பலவாறாகச் சிதறிவிட்டால், மனைக்கு உரியவனின் மனைவிக்குத் தீங்கு உண்டாகும். உள்ளே ஒன்றும் இல்லாது ஓடாக இருந்தாலும், தேங்காயை எடுக்கும் பொழுது அது சிற்பன் கையிலிருந்து நழுவி விழுந்தாலும் அம்மனைக்குரியவனின் வாழ்வு பாழாகிவிடும்.

**முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்**

வாங்கிய தேங்காய் தன்னை
மகிழ்வோடு சிற்பன் தானும்
தாங்கியே உடைக்கும் போது
தவறியே வீழ மாகிற்

பூங்கொடி மரண மாவாள்
பூமகள் தானும் நில்லாள்
பாங்கொடு மயனார் சொன்ன
பண்டுநூல் இதுவு மாமே. 528

*(சி. நூ. பா. : 314)*

*(இ. ள்)* மனை முகூர்த்தத்திற்கான தேங்காயைச் சிற்பன் உடைக்கும்பொழுது, கையிலிருந்து தேங்காயானது தவறி விழுமானால், அந்த மனைக்கு உரியவனின் மனைவி மரணமடைவாள். செல்வம் அம்மனையை விட்டுச் சென்றுவிடும் என்று பழமையான நூல்களில் மயனார் கூறியுள்ளார்.

**முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்**

உற்றிடு முகூர்த்தத் தேங்காய்
உடைத்திடும் பலனைக் கேளு
மற்றது தெரிக்கச் சாவன்
வளரும்பெண் முடிபெ ருக்கில்
கற்றறி புதல்வ ருண்டாங்
கண்விடில் வாழ்வு குன்றும்
சற்றதி லழுக லாகிற்
தான்செய்யும் கருமம் தீதே. 529

*(சி. நூ. பா. : 315)*

*(இ. ள்)* மனை முகூர்த்தத்திற்காகத் தேங்காயைச் சிற்பன் உடைக்கும்பொழுது, தேங்காய் சுக்குநூறாக உடையுமானால் அம்மனைக்கு உரியவன் மரணம் அடைவான். குடுமி உடைய மூடிப்பக்கம் பெரியதாகவும் அடிப்பக்கம் சிறியதாகவும் இருக்கில், புதல்வர் தோன்றுவர். தேங்காய்க் கண் உள்ள பகுதி உடைந்து போனால், ஆயுள் குறையும். தேங்காய் அழுகலாக இருந்தால், அம்மனையைக் கட்டினால் தீமையாகும்.

**முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்**

மூடிஇரண் டாக உடைந்திடில் தனமெய்தும்
மூடிபெருத் தாலும் நன்மை
முக்கியம தாகவே கீழ்மூடி தன்னில்
ஓடுமுடனில் மெத்த நன்மை
கூடிவளர் கீழ்மூடி தன்னிலொரு கூறாவது
சமதாகும் கொப்பறை இனங்கள்
கழன்றாலும் வெகு நன்மை யாகும்
குருத்துடன் முளையும் நன்மை
ஊடலுட னேகுறுக் காகிலது திண்மையாம்
உதிரியாய்ச் சிதறு மாகில்
ஒண்டனை தனங்களாய் துன்பம்வரும் அகலில்
உடலில் வெகுநோய்கள் சேரும்
தேடிய எறும்பாடல் என்னிலுயிர் சேதமாம்
சீர்மூடி கொஞ்ச மாகா
தேங்காய் உடைத்தபலன் என்றறிக கவிகுளது
சித்தமாய்க் கண்டு கொள்ளே! 530

*(886 a : 235)*

*(இ. ள்)* மூடி சரிபாதியாக உடைந்தால் செல்வம் சேரும். குடுமி உள்ள மூடி பெரியதாக உடைந்தால் நன்மை உண்டாகும். சிறிய சிதழ் தேங்காயின் கீழ் மூடியில் விழுந்தால் மிகுந்த நன்மை. கொப்பறையாகக் கழன்றுவரின் நன்மை. தேங்காயில் குருத்து விட்டிருப்பின் நன்மையாகும். குறுக்கே பிளவுபட்டாலும் பல்வேறு சுக்கல்களாக உடைந்து போனாலும் அந்த மனைக்கு உரியவனுக்குத் துன்பம் வந்து சேரும். தேங்காயை உடைக்கும்பொழுது அழுகலாக இருந்தால், மிகுந்த நோய்கள் உண்டாகும். தேங்காயில் துளையிட்டுச் சென்று எறும்புகள் இருக்குமானால், உயிர்ச் சேதம் உண்டாகும். இவ்வாறு தேங்காய் உடைக்கும் பலன்கள் கவியால் கூறப்பட்டுள்ளன.

# 16. கிணறும் குளமும்

## இராசிகளில் கிணறு அமைத்தல்

ஆன மேஷம் அறையுங்கற் பாறையாம்
வான ரிஷபம் வரையும்தண் ணீராகும்
பான மிதுனம் பகரும் கடற்கரை
மான கர்க்கடகம் மதிக்கஆறு ஓடுமே. 531

*(ம. நூ. பா. : 316)*

(இ. ள்) மனையின், மேஷ இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், கற்பாறையாக இருக்கும்; ரிஷப இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், தண்ணீர் கிடைக்கும்; மிதுன இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், உப்புநீர் கிடைக்கும்; கடக இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால் மிகுதியாகத் தண்ணீர் கிடைக்கும்.

குறிப்பு: கிணறு எடுக்கும் பகுதிக்கு உறிய மனையைப் பதினாறு பாகம் செய்து இடைப்பகுதியாக உள்ள 4 பாகங்களை பிரம ஸ்தானமாகக் கொள்ள வேண்டும். மற்ற பன்னிரண்டு பாகங்களையும் பன்னிரண்டு இராசிகளாகக் கொள்ள வேண்டும். வடமேற்குப் பாகத்தை மேட இராசியாக வைத்து வலம் இடமாகப் பன்னிரண்டு இராசிகளையும் அமைத்து அந்தந்த இராசிகள் அமையும் இடத்திற்கேற்ப பலனை அறிதல் வேண்டும். *(ம. நூ. பா. : 225)*

வடக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மே | ரி | மிது | கட | |
| மேற்கு | மீன | | | சிம் | கிழக்கு |
| | கும் | | | கன் | |
| | மக | தனு | விரு | துலா | |

தெற்கு

## இராசிகளில் கிணறு அமைத்தல்

வேந்தன் சிங்கம் விரும்பும்கற் பாறையாம்
ஏந்து கன்னி இசைந்ததோர் தெற்குமுன்
போந்த கல்லும் புகலும் வடக்கதாம்
கூந்தல் மோழை குமுற வருகுமே. 532

*(ம. நூ. பா. : 317)*

*(இ. ள்)* மனையின் சிம்ம இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், கற்பாறை வரும்; கன்னி இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், பெருமளவு நீர் கிடைக்கும்.

## இதுவுமது

ஆய புற்று அம்மயும்து லாமிடம்
தூய விருச்சிகம் தோன்றும் பழங்கிணறு
ஏய வேதனு சுக்குவாய் மட்டமுன்
பாய வேகிழக் கும்படு மோழையே. 533

*(ம. நூ. பா. : 318)*

*(இ. ள்)* மனையின் துலாம் இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், புற்று இருக்கும்; விருச்சிக இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால் பழங்கிணறு தோன்றும்; தனுசு இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால் வெள்ளம் காணும்.

## இதுவுமது

ஆன மகரம் அறையும் இடிகரை
தான கும்பம் தடுக்கும் குடலைக்கல்
மீனம் தெற்கு மிசைந்த கல்வடக்கு
ஊனம் இல்லா உயர்ந்தண் ணீரதே. 534

*(ம. நூ. பா. : 318)*

*(இ. ள்)* மனையின் மகர இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், இடிகரை காணும்; கும்ப இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், குடலைக் கல் தோன்றும்; மீன இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், கல்லும் தண்ணீரும் கிடைக்கும்.

### கிணறு - திசை - நன்மை

தேடுமவர் சிந்தைதனி லேயுரையு மீசன்
நாடுமவர் மாமுடியி லேயணிநல் சோமன்
மாடுகுலை கொண்டல்வரு ணன்திசையின் மீதிற்
கேடிலை மிகுந்தநல மாங்கிணறு வெட்டில். 535
(886 a : 225)

*(இ. ள்) தன்னைத் தேடி அருளை நாடிவரும் அடியவர்களின் எண்ணங்களிலே உறைந்திருக்கின்ற சிவபெருமானின் சிறந்த சடாமுடியில் அணிந்திருக்கின்ற சந்திரன் எழுகின்ற, மேகங்களையுடைய வருணதிசையாகிய மேற்குத் திசையில் கிணறு எடுக்க மிகுந்த நன்மை உண்டாகும்.*

### கிணறு - திசை - தீமை

நெடுத்தகதி ரங்கிளமன் நிருதியொடு காத்தின்
விடுத்தபிர மன்திசையி லேகிணறு வெட்டில்
அடுத்துவரும் மக்களும் மலிந்துடைமை பாழாய்
கெடுத்தபடி யாமெனவே ஓடதுவே கிடைக்கும். 536
(886 a : 171)

*(இ. ள்) மனைக்கு கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய திசைகளிலும் மனைக்கு நடுவாகிய பிரமன் திசையாகிய பிரம ஸ்தானத்திலும் கிணறு வெட்ட மனைக்குரியவனின் உற்றார் உறவினர்களும் புத்திரர்களும் அழிவதோடு, அவனுடைய செல்வத்தையும் இழந்து, பிறரிடம் இரந்து உண்ண நேரிடும்.*

### கிணறு திசை

வடபா லீசன் கிழக்கோடு
வளரும் மேற்குக் கிணறாகில்
படவா ளின்பம் சுகம்கொடுக்கும்
பாலன் மரணம் வாயுவினில்

அருநோய் நிருதி எமன்மரணம்
அங்கி யாகில் பிள்ளையில்லை
நடுவே யாகில் பொருள்சேதம்
நகரின் மனைகள் தன்கிணறே. 537
*(886 a : 197)*

*(இ. ள்)* மனையில் கிணறு தோண்டும் பொழுது, வடக்கு, வடகிழக்கு, கிழக்கு ஆகிய திசைகளில் கிணறு தோண்ட நன்மைகள் வளரும்; மேற்கில் கிணறு எடுத்தால் இன்பம் மிகுதியாகும்; வடமேற்குத் திசையில் கிணறு எடுக்க, அம்மனைக்கு உரியவரின் புத்திரருக்கு மரணம் நேரிடும்; தென்மேற்குத் திசையில் கிணறு எடுக்க, அம்மனைக்கு உரியவருக்கு நோயுண்டாகும்; தெற்குத்திசையில் கிணறு எடுக்க, மனைக்குரியவனுக்குப் பிள்ளைப் பேறு கிட்டாது; மனையின் நடுவாகிய பிரம ஸ்தானத்தில் கிணறு எடுக்க பொருட்சேதம் உண்டாகும்.

### குளம் வெட்டுதல்

கண்டவக் கினிமூ லைக்கு
கள்ளமாய்க் குழிகு ளங்கள்
உண்டெனில் அடியாள் சாவாள்
உயிருடன் பொருளும் சேதம்
தென்திசை எமனின் திக்கில்
சிறப்பில்லை மிடியே யாகும்
வண்டனி மேற்குச் செல்வம்
மத்திமம் வடமேற் காகா. 538
*(886 c : 17)*

*(இ. ள்)* மனையின் தென்கிழக்குத் திசையில் குளம் வெட்டினால், அம்மனைக்கு உரியவனின் மனைவி இறப்பதோடு, செல்வமும் கையை விட்டுப் போகும். தென்திசையான எமன் திசையில் குளம் வெட்டினால், செல்வம் நீங்கி வறுமை உண்டாகும். மேற்குத் திசையில் குளம் வெட்டினால் செல்வம் வந்து சேரும். வடமேற்குத் திசையான வாயு திசையில் குளம் வெட்டினால் தீமை உண்டாகும்.

குறிப்பு: இண்டிய கொடியோன் திக்கில்
இலட்சமாம் பொருள்வந்த தெய்தும்
(இ-ள்) வடகிழக்கு திசையாகிய ஈடானிய திசையில் குளம் வெட்டினால் மிகுதியான பொருள் வந்து சேரும்.

## குளம் வெட்டுதல்

ஆம்பொருள் கிழக்குச் சோமன்
அத்தமும் கல்வி செல்வம்
தாம்முதற் பலவும் சேரும்
தையல்கேள் ! ஈசன் திக்கில்
வேம்படு நிருதி தன்னில்
மிக்கநோய் வறுமை காணும்
நாமிது உரைத்த தல்ல
நன்மயன் உரைத்த வாறே 539
(886c : 2)

(இ. ள்) மனையின் கிழக்குத் திசையிலும், மேற்குத் திசையிலும் குளம் வெட்டினால், செல்வமும் கல்வி விருத்தியும் உண்டாகும். ஈசன் திசையான வடகிழக்குத் திசையில் குளம் வெட்டினால் பலவகையான பாக்கியங் களும் கிட்டும்; தென்மேற்கு மூலையான நிருதி திசையில் குளம் வெட்டினால் மனைக்கு உரியவனுக்கு மிகுதியான நோய்களும் வறுமையும் உண்டாகும் என்பதை நல்ல மயன் உரைக்க, பெண்ணே ! நான் உனக்கு உரைக்கின்றேன்.

## குளம் அமைத்தல்

சிங்கமும் பருந்து பூனை
சிறந்திடும் திக்கி லேதான்
அங்கொரு குளமுண் டாகில்
அதன்பலன் மனைக்கே யாகா
தங்கிய கன்னி மேற்குத்
தனுமதி ஈசன் திக்கில்
மங்கைகேள் ! குளத்தி னாலே
மனையினில் வாழ்வு நன்மை. 540
(886a : 168)

(இ. ள்) மனைக்குக் கிழக்கிலும் தெற்கிலும் தென்கிழக்கிலும் குளம் வெட்டினால் வீட்டிற்கு ஆகாது. தென்மேற்கிலும் மேற்கிலும் வடகிழக்கிலும் குளம் வெட்டினால், பெண்ணே ! இக்குளத்தினால் மனைக்கு உரியவனுக்கு நிறைவான வாழ்க்கையும் நன்மைகளும் உண்டாகும்.

## இராசிகளில் குளம் அமைக்கப் பலன்

குளமது இருந்தால் இப்பால்
கூறிய பலனே கேளும்
வளமது விடைகோல் கன்னி
வரிசையாய் யவனச் சிங்கம்
தளமது தேளும் குடமும்
தயவுடன் மனையும் வாழும்
களமது மத்த இராசி
காருத்த மனைபா ழாமே. 541
*(1005 a)*

*(இ. ள்)* மனையின் ரிஷப இராசி, துலாம் இராசி, கன்னி இராசி, சிம்ம இராசி, விருச்சிக இராசி, கும்ப இராசி முதலான இராசிப் பகுதிகளில் குளம் அமைக்க, மனையில் வாழ்பவர்கள் சிறப்புற்று விளங்குவர். மேஷ இராசி, மிதுன இராசி, கடக இராசி, தனுசு இராசி, மகர இராசி, மீன இராசி முதலான இராசிப் பகுதிகளில் குளம் அமைக்க, மனைக்கு உரியவனுக்கும் அவன் சுற்றத்தாருக்கும் கேடு விளைந்து, மனை பாழாகும்.

## குளம் அமைக்கும் திசைகளும் அவற்றின் பலன்களும்

செய்திடும் மனைக்கு முன்னே
தென்புறம் குளமே யாகில்
துய்யநீர் நன்மை செய்யும்
சொல்லிய பின்னே யாகில்

வெய்யதோர் வியாதி பீடை
வேதனை செய்யும் என்று
பொய்யல்ல மயனார் சொன்னார்
பூங்கமழ் கோதை மாதே! 542

*(886 c : 1)*

*(இ. ள்) கட்டிய வீட்டின் முன்புறத்தில் தென்திசையில் குளம் இருப்பின், மனைக்குரியவனுக்கு நன்மையாகும். வீட்டிற்குப் பின்னே குளம் இருந்தால், மனைக்குரியவனுக்கு நோய்களும் துன்பங்களும் வந்து சேர்ந்து வருத்தத்தைத் தரும் என்று, மணம் மிக்க பூமாலையை அணிந்துள்ள பெண்ணே! மயனார் கூறியுள்ளார்.*

## 17. மனைக்கு ஆகாதவை

### இடங்கள்

தண்ணீர்த் துறைமுன் னர்மனைமுன்
தாவுந் தேருமுச் சந்திகள்முன்
உண்ணீர் அரசர் கோட்டையின் முன்
ஊரு நடுவி ல் சுடலையின்முன்
மின்னே ! தெருவுச் சாயலின்முன்
வேரும் சூலை புகைச்சலின்முன்
இன்னிலந் தன்னில் மனையெடுக்க
எடுத்த மனையும் பாழாமே. 543

*(886 a : 15)*

*(இ. ள்)* தண்ணீர்த் துறைக்கு எதிரிலும், தேர் ஓடுகின்ற வீதி, முச்சந்தி இவற்றுக்கு எதிரிலும், அரசரின் கோட்டைக்கு எதிரிலும், ஊர் சுடுகாட்டுக்கு எதிரிலும், தெருச்சாயலின் முன்னரும், புகைச்சலையுடைய செங்கல் சூளைக்கு எதிரிலும் மனையெடுக்க, கட்டிய வீடு பாழாகும்.

### இதுவுமது

வாழ்வுறும் மனையில் புக்க
வழிகுளம் நிறைந்த ஏரி
தாழ்வுள்ள வாய்க்கால் ஆறு
தாழ்ந்திடும் தலங்க ளோடு
நீளமாம் தெருக்கள் கோடு
நிலைதண்ணீர் துறைகள் மூலை
பாழ்தரு மனையில் பட்டால்
பாலகன் மடியும் தானே. 544

*(886 c : 13)*

*(இ. ள்)* மனைக்கு அருகில் வழியில் குளம், ஏரி, தாழ்ந்த வாய்க்கால், ஆறு, தாழ்ந்த இடங்கள் இருப்பின், அங்கு வீடுகட்டக் கூடாது. தெருக்களின் கோடி, நீர்நிலைகள், மூலை, பாழான இடங்கள் இவற்றில் வீடு கட்ட பாலகன் மரணமடைவான்.

**இதுவுமது**

மத்தியில் புத்து மாகா
மதித்தெழும் பாறை யாகா
இத்தியா லரசு வில்வம்
எட்டியோ டிவைகள் ஆகா
சுத்தமா மரங்க ளெல்லாம்
சூழ்ந்துடன் அதன்மேல் நிற்கில்
வித்தகன் தனக்கு மாகா
வினைகளும் விளையு மன்றே. 545

*(சி. நூ. பா. : 229)*

*(இ. ள்)* மனையில் மத்தியில் புற்றும் பாறையும் இத்தி மரமும் ஆலமரமும் அரசமரமும் வில்வமரமும் எட்டிமரமும் இருக்கலாகாது. அவ்வாறு இருக்கும் மனையில் வீடு கட்டலாகாது. இம்மரங்களோடு கூடச் சுத்தமாகிய மா, பலா, புன்னை, பாதிரி, வேம்பு, கொய்யா, கொழுமிச்சை, எலுமிச்சை, நாவல் முதலான மரங்கள் சேர்ந்து நிற்கிலும், அந்நிலத்தில் வீடு கட்டலாகாது. இங்ஙனம் இருப்பின், மனைக்குரியவனுக்கு கேடு நேரிடுவதோடு, அம்மனையும் பாழாகும்.

**இதுவுமது**

ஆலய முகப்பு மையம்
அண்டிடும் பிசாசு கோயில்
நீலியாம் துர்க்கா தேவி
நெறிபட ஐயன் கோயில்[1]
சாலையில் வாரா வண்ணம்
சமர்த்துடன் தவிர்த்துக் கொள்ள
மாலையாம் அதிப திக்கும்
வல்லவன் உரைத்த நூலே.[2] 546

*(886a : 150)*

1. நெறியையன்வலக்ண் ணோட்டம்
2. மாலையம் பதிகி ழக்கு
வல்லவன்மயனும்சொன்னான்.

(இ. ள்) ஆலயத்திற்குப் பக்கங்களில் உள்ள இடங்களிலும், எதிரில் உள்ள இடங்களிலும், பிசாசுகள் இருக்கும் இடங்களிலும், காளி கோவிலின் அருகிலுள்ள இடத்திலும், ஐயன் கோயிலுக்கு அருகிலுள்ள இடத்திலும், சாலையில் உள்ள இடத்திலும், மனைகோலுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். மன்னவனாக இருப்பினும், இதனை மேற்கொள்ள வேண்டுமென்று சிற்பநூல் வல்லவர்கள் தம் நூலில் கூறியுள்ளார்கள்.

## இதுவுமது

அழிந்திடும் கோவில் தானும்
அரவுசேர் இடம லங்கள்
விழித்திடும் செம்மான் .........
மேவிய முனிக ளெல்லை
அழிந்திடும் சுடுமண் காடு
அமருமப் பூமி யாகா[1]
ஒழிந்திடும் அந்த இல்லம்[2]
ஓங்கிய வனம தாமே. 547

*(886a : 146)*

(இ. ள்) பாழடைந்த கோயில், பாம்பிருக்கும் புத்துகள், மலஜலம் கழிக்கு மிடங்கள், செம்மான் குடிசை கட்டியிருக்குமிடம், முனிகள் நிலைநிற்கும் இடங்கள், சுடுகாடு, போர்க்களம் இவைகளில் மனை கட்டக் கூடாது. அவ்வாறு கட்ட அந்த வீடு காடாகிவிடும்.

## இதுவுமது

வட்டமுக் கோணம் ஆமை
சுளகுசூலம் குளம்அ ரங்கம்
கட்டிநீ சலிப்பால் போலும்
கருதிய மனைகள் ஆகா

---

1. பொழிந்திடும் ஈமக் காடு
போர்களத் தவனி யாகா
2. வீடு
செம்மான் என்பதன் பொருள் விளங்கவில்லை.

தொட்டிநீர் தடத்தின் எல்லை
ஆலயம் எதிரில் கோடி
விட்டநா ராச வீதி
வேரோடும் மனையும் ஆகா. 548

*(886 a : 47)*

*(இ. ள்)* வட்டம், முக்கோணம், ஆமை, சுளகு, சூலம், குளம் போன்ற வடிவுடைய நிலங்களில் வீடுகட்டலாகாது. நீர் நிலைகளின் அருகிலும் ஆலயத்தின் எதிரிலும் வீடுகளைக் கட்டக்கூடாது. வீதியின் கோடியிலும் இராச வீதியிலும் வீடுகளைக் கட்டக்கூடாது. வேர்கள் ஓடியிருக்கும் நிலத்தில் வீடுகட்டலாகாது.

### இதுவுமது

முடுக்கு வீதிகள் முகடுகள் மண்டபம்
தொடுக்க நந்த வனத்தொடு கோயில்கள்
விடுக்க வேத மொழியும் மடங்களும்
இடுக்க மாகும் மனையும் தவிர்க்கவே. 549

*(886 c : 10)*

*(இ. ள்)* தெரு வீதிகள், முகடுகள், மண்டபங்கள், நந்தனம், கோயில்கள், வேதங்களைக் கற்றுத்தரும் பாடசாலைகள் இவைகளுக்கு அருகில் மனைகளைக் கட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

### இதுவுமது

சந்துகள் முடுக்குக் கோடி
சதுர்மறை யவர்கள் கோயில்
பந்தமாம் குளங்கள் கூவல்
பணியிடை புத்து வானம்
சுந்தரம் ஒடுக்குச் சூலம்
சுறகுடன் முறங்கள் ஈட்டி
இந்தநல் வடிவு கண்டால்
இயல்மனை எடுக்க லாகா. 550

*(886 c : 14)*

*(இ. ள்)* சந்துகள், முடுக்கு, கோடி, மறையவர் வீடுகள், புற்றுகள், குளங்கள், கிணறுகள் இவற்றிற்கு அருகில் வீடுகளைக் கட்டக் கூடாது. ஒடுக்கு, சூலம், சுளகு, முறம், ஈட்டி இந்த வடிவிலான நிலங்களில் வீடுகளைக் கட்டலாகாது.

**இதுவுமது**

கூறிய வாசல் படிதனில்
வாரமுங் கோடி குத்தல்
ஏறிய முற்றம் நடுவில்
சுவருடன் அநேக கம்பம்
மீறிய கம்பங்க ளுத்திர
மெத்தைகள் மேன்ம னைசூழ்
மாறிய இருந்தி டில்தான்
எல்லாத் துயரும் வந்திடுமே. 551

*(886 a : 231)*

*(இ. ள்)* வாசல்படியில் கோடி குத்தல், முற்றம் நடுவில் சுவர். மிகுதியான கம்பங்கள், உயரம் அதிகமான கம்பங்கள். நீண்ட உத்தரம், உயர்ந்த மெத்தை, மாடிகள் போன்றவை இயல்பான அளவுகளில் இருந்து மாறுபாடுடையனவாக இருக்க, அனைத்துத் துயரங்களும் மனைக்குரியவனுக்கு வந்து சேரும்.

**கடைக்குத்தல்**

நடுமனை கம்ப மாகில்
நடுமனை வாச லாகில்
எடுசுவர் இரட்டை யாகி
ஏத்துங்கை ஒற்றை யாகி
முடிவளை தாழு மானால்
முந்துகை ஏறு மானால்
விடுகுடி புகுது முன்னே
விடுவது சீவன் தானே. 552

*(886 a : 2)*

*(இ. ள்)* நடுவீட்டில் கம்பம் இருப்பினும், நடுவீட்டில் வாசல் இருப்பினும், இரட்டைச் சுவர் இருந்தாலும், ஏத்துங்கை ஒற்றையாக இருந்தாலும், வளை தாழ்ந்து இருப்பினும் முந்துகை ஏறி இருந்தாலும், அவ்வீட்டில் குடிபுகுவதற்கு முன்னால் மனைக்குரியவன் மரணமடைவான்.

**செயல்கள்**

தேரோடு தெருஒ ழுங்கை
தெண்டக சாலை எல்லாம்
வாரோடும் அகலம் உச்சம்
வடிவது வாகக் கொள்வீர் !
நேரோடும் அகலம் தன்னில்
நின்றொன்று தாழு மாகில்
ஊரோடு மனையில் புக்கார்
ஒடுவர் வீடு விட்டே. 553

*(886* a *: 147)*

*(இ. ள்)* தேர் ஓடுகின்ற வீதி, ஒழுங்கு தவறி இருக்க, அல்லது சாலை பொருத்தம், அகலம், உச்ச அளவு இவைகள் குறைவுபடுமாகிலும், நீண்டும் அகன்றும் ஒன்றுக்கொன்று முறைவழுவி மாறுபடுமாகிலும், அந்த ஊரிலும் மனையிலும் புகமாட்டார்கள். அவ்விடத்தை விட்டே ஓடிப்போக நேரிடும்.

**இதுவுமது**

கூறிய வாசல் படிதனில் வாரகை கோடிகுத்தல்
ஏறிய முற்றம் நடுவில் சுவருடன் நிலையைவிட
மூறி கம்பங்கள் உத்திரம் மெத்தைகள் மேன்மனைசூழ்
மாறி இருந்திடப் பொல்லாத் துயரங்கள் வந்திடுமே.

*(இ. ள்)* வாசல் படிதனில் வாரகை இருப்பினும், கோடி குத்தல் இருப்பினும், முற்றத்தின் நடுவில் சுவருடன் நிலையிருப்பினும், கம்பங்கள், உத்திரம், மாடிகள் இவை மாறி இருந்தாலும் அம்மனைக்கு உரியவனுக்குத் துன்பங்கள் வந்து சேரும்.

### பாய்ச்சல்கள்

சட்டமாம் கோவிற் பாய்ச்சல்
சதிர்பெரும் வீட்டுப் பாய்ச்சல்
விட்டமாம் வயலிற் பாய்ச்சல்
இதமுறு சந்திப் பாய்ச்சல்
வட்டமாய் அடிநூ றாகில்
வருவதே தோஷம் இல்லை
திட்டமாய் மயனார் சொன்னார்
திடம்பெற வாழ்வார் என்றே. 555

*(886 c : 23)*

*(இ. ள்)* கோவிற் பாய்ச்சல், வீட்டுப் பாய்ச்சல், வயலிற் பாய்ச்சல், சந்திப் பாய்ச்சல் ஆகியவை இருப்பின், வீடு கட்டக் கூடாது. அவ்வாறு கட்டினால் வீட்டிற்குத் தீங்காகும். ஆனால் இவை நூறு அடிக்கு மேல் இடைவெளி இருப்பின் தோஷம் இல்லையென்று மயனார் சொன்னார். இவ்வாறு கட்டப்பட்டுள்ள மனையில் வாழ்பவர்கள் சிறப்புடன் விளங்குவர்.

### இதுவுமது

கன்னமாங் கோடி பாய்ச்சல்
கருதிய கட்டை பாய்ச்சல்
வின்னமாய் ஒன்றுக்கொன்று
வி.... .... .....
கண்டகுள் ளாகி நின்றால்
சொர்ணமாம் பொருளும் போகும்
பன்னமா விழியி னாளே!
பதிமனை பாழ தாமே. 556

*(886c : 16)*

*(இ. ள்)* கோடிப் பாய்ச்சல், கட்டைப் பாய்ச்சல் முதலானவை வீடுகளுக்கு ஆகாது. ஆங்ஙனம் பாயில், வீட்டிலுள்ள பொன்னும் பொருளும் கைவிட்டுப் போகும். கட்டிய மனையும் பாழாகும் என்பதை பெரிய விழிகளையுடைய பெண்ணே! அறிவாயாக.

## இதுவுமது

கோடியொடு கோடி பாயில்
குலமகள் தனக்கு நாசம்
நாடியே குலுக்குப் பாய்ச்சல்
நாயகன் தனக்கு நாசம்
நீடியே எதிருஞ் சாலை
நோய்படும் வாச லாகில்
வாடியே போமி தன்றி
வலம்விட வாச லாமே. 557

*(886 c : 4)*

*(இ. ள்)* கோடிப் பாய்ச்சல் மனைக்கு இருக்குமானால், மனைக்குரியவனின் மனைவிக்கு மரணம் நேரிடும். குறுக்குப் பாய்ச்சலாகில், மனைக்குரியவனுக்கு மரணம் நேரிடும். வீட்டிற்கு எதிரில் சாலைக் குத்தலானால் நோய் உண்டாகும். வீட்டின் வாசலை வலப்புறத்தில்விட நிறைந்த வாழ்வு உண்டாகும்.

## குத்தல்கள்

மருவியே மயனார் சொன்ன
வண்மையை உரைக்கக் கேளும்
உருமையால் உலகில் உற்ற
உத்தகுத் தல்கள் தானும்
பெருகிய கோவில் குத்தல்
பிரகார தீபக் குத்தல்
தருவிய வேலிக் குத்தல்
தவிர்த்திட நன்மை தானே. 558

*(886 c : 26)*

*(இ. ள்)* மயனார் கூறியுள்ள மனைக்கு ஆகாத குத்தல்களைக் கூறக் கேட்பாயாக. கோவில் குத்தல், பிரகாரக் குத்தல், தீபக் குத்தல், வேலிக் குத்தல் ஆகியவை இருப்பின், வீட்டிற்குத் தீமை விளையும். ஆகவே அவற்றை நீக்கிக் கொள்ளுதல் நன்மையைத் தரும்.

## இதுவுமது

ஒன்றான சந்து குத்தல்
ஓங்கிய குளத்துக் குத்தல்
கண்ணான கட்டைக் குத்தல்
கையுடன் நிரப்புக் குத்தல்
பண்ணான மேட்டுக் குத்தல்
பழகிய கிணற்றுக் குத்தல்
நன்னாளும் சாவு சொல்லும்
நன்மயன் உரைத்த நூலே. 559

*(886 c : 25)*

*(இ. ள்)* சந்துக் குத்தல், குளத்துக் குத்தல், கட்டைக் குத்தல், நிரப்புக் குத்தல், மேட்டுக் குத்தல், கிணற்றுக் குத்தல் போன்றவை வீட்டிற்குத் தீமையை அளிப்பனவாகும். அவ்வாறு இருப்பின் மனைக்குரியவனுக்கு மரணம் நேரிடும் என்று மயனார் கூறியுள்ளார்.

## குத்தல்

சன்னதி விளக்குக் குத்தல்
சாய்ந்தகோ புரத்தின் குத்தல்
உன்னிய மதிலும் குத்தல்
ஒருபுறம் சந்து குத்தல்
முன்னிய பிடாரி ஐயன்
விநாயகர் துர்த்தெய் வங்கள்
நன்னிய சந்துண் டாகில்
நலமுடன் குத்தல் இல்லை. 560

*(886 b : 50)*

*(இ. ள்)* சன்னதி குத்தல், விளக்குக் குத்தல். கோபுரத்தின் குத்தல், மதில் குத்தல், சந்து குத்தல், பிடாரி கோயில், அய்யனார் கோயில், விநாயகர் கோயில், துர்த்தெய்வங்களின் கோயில் குத்தல் போன்றவை வீட்டிற்கு இருப்பின் தீங்குண்டாகும். வீட்டிற்கும் மேற்கண்டவற்றிற்கும் இடையே சந்து இருப்பின், குத்தல் இல்லை.

## குத்தல் (வேறு)

பொருத்தமனை இசையாட்டால் சந்து போடு
ஏத்தபடி கட்டவுந்தான் நன்மை யாகும்
குடித்தனமும் சம்பத்தும் குபேரன் போல
குறைவன்றி வாழ்வரென்று கூறி னாரே. 561

*(886 c : 32)*

*(இ. ள்)* மனையடி சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள பல்வேறு குத்தல்களும் மனைக்குரியவனைப் பாதிக்காமல் இருக்க வேண்டுமாயின், இடையில் சந்து இருக்கும்படி வீடு கட்ட வேண்டும். அவ்வாறு கட்ட செல்வமுடன் குபேரன் போன்று நிறைந்த வாழ்வு பெறுவர்.

## குத்தல்களும் இன்மையும்

தேவால யங்களும் பிரமால யங்களும்
சிவவிஷ்ணு ஆல யங்களும்
திறமாக நூறடி குளங்கள் பத்தடி
துரவுகிணர் முப்ப தடியாம்
காவலர்கள் அரசாளும் அரசுபதி னைந்தடி
கருதியே மண்டப சத்திரம்
கருநீல தொட்டிகள் சந்துகள் பத்தடி
கிடந்திட குத்தல் இல்லை. 562

*(இ. ள்)* தேவர்களுக்குரிய ஆலயங்களுக்கும் பிர்மாவின் ஆலயங்களுக்கும், சிவனுடைய ஆலயங்களுக்கும் விஷ்ணுவினுடைய ஆலயங்களுக்கும் வீட்டிற்கும் இடையே நூறடி சந்து இருப்பின் கோயில் குத்தல் இல்லை. குளங்களுக்கும் வீட்டிற்கும் இடையே பத்தடி சந்து இருப்பின், குளக்குத்தல் இல்லை. வீட்டிற்கும் அரண்மனைக்கும் இடையே பதினைந்தடி சந்து இருப்பின், குத்தல் இல்லை. மண்டபங்கள், சத்திரங்கள், தொட்டிகள் இவற்றுக்கும் வீட்டிற்கும் இடையே பத்தடி சந்து இருப்பின், குத்தல்கள் இல்லை.

## இதுவுமது

நாடிய வீதி தானும்
நாற்பது அடியுண் டானால்
கோடியாம் குத்தம் தீர்க்கும்
கோவீடு புகல்ந டக்கில்
நீடிய மணம்பி ணங்கள்
நேர்பட போமே யாகில்
ஓடிடும் தோஷம் என்று
உண்மையாய் மயன்சொன் னாரே. 563
*(886 c : 9)*

*(இ. ள்)* வீட்டிலிருந்து வீதியானது நாற்பது அடி தூரத்தில் இருப்பின், வீதி குத்தல் முதலான குத்தல்கள் நீங்கும். வீடு குடிபுகும்போது, பிணங்கள் நேர்படச் சென்றால் தோஷங்கள் நீங்குவிடும் என்று மயனார் கூறியுள்ளார்.

## இதுவுமது

மண்டபம் திருக்கு ளங்கள்
மாளிகை சத்தி ரங்கள்
விண்டது விலாவு குத்தல்
வீதிகள் மச்சுக் குத்தல்
நண்டது மதில்கால் குத்தல்
நடுவினில் சந்து கண்டால்
ஒண்டினில் குத்தல் இல்லை
உலகினில் வகுத்தோர் மாதே ! 564
*(886 c : 10)*

*(இ. ள்)* மண்டபம், குளம், மாளிகை, சத்திரம், விலாவு, வீதிகள், மச்சு. மதில் போன்ற குத்தல்கள் வீட்டிற்கு இருப்பின், வீட்டிற்கும் மேற்சொன்னவற்றிற்கும் இடையே சந்து இருப்பின், குத்தல்கள் இல்லையென்று உலகினில் வகுத்துள்ளார்கள்.

### கிணறு குத்தல்

சொல்லிய கிணற்று நீளம்
தொகுத்தநீர் மட்ட மட்டும்
எல்லவன் கிழக்கு மேற்கு
இயல்மனை எடுக்க லாகா
வல்லிகேள் ! நடுவில் வீதி
மனைகிண றால யங்கள்
பல்லவே தெரு உண்டாகில்
பாய்ச்சலொன் றில்லை தானே. 565

*(886 c : 5)*

*(இ. ள்)* கிணற்றுநீர்மட்டம் வரையிலான நிலத்தில் கிணற்றுக்குக் கிழக்கு, மேற்குத் திசைகளில் வீடுகட்டக் கூடாது. ஆனால் மனைக்கும் வீடு, கிணறு, ஆலயம் ஆகியவற்றிற்கும் இடையே தெரு இருக்குமானால், குத்தல் என்ற குற்றம் இல்லை.

### செயல்கள்

கொட்டு மூலை முளைபறித்தல்
கோத்த கயறு அறுத்துவிழல்
விட்ட வாசல் தனையடைத்தல்
வேறே வாச லதுவிடுதல்
நட்ட காலைப் பிடுங்கிநடல்
நடுவில் ஆணி மரமிசைத்தல்
சட்ட மனையாள் சாவதுவும்
தானும் மரணம் தப்பாதே. 566

*(742 : 96)*

*(இ. ள்)* மனையெடுக்கும் பொழுது, முளைபறித்தல், கயறு அறுத்தல், விட்டவாசலை அடைத்து வேறு வாசல் விடுதல், நட்ட கம்பத்தை பிடுங்கி நடுதல். மரமிசைத்து ஆணி போடுதல் முதலான செயல்களைச் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால், மனைக்குரியவனின் மனைவிக்கு மரணம் நேரிடும். மனைக்குரியவனும் மரணமடைவான்.

**வேறு**

கொட்டிய முளைபிடுங்கல் கோர்த்திடுங் கயிறறுத்தல்
நட்டகால் தனைப்பறித்தல் நடுவாணி மரமிசைத்தல்
விட்டவா யிவைஅடைத்தல் வேறுவா யிலைவிடுதல்
சட்டமாம் மனையாளும் தரிப்பதும் அரிதுதானே. 567
*(சி. நூ. பா. : 98)*

**வேறு**

நட்டக்கால் பிடுங்கி நாட்டல்
நடுவிலே இசைஇ சைத்தல்
கொட்டுவாய் முனைமு றித்தல்
கோலிய கயிறு தேற்றல்
விட்டதோர் வாசல் மாறி
வேத்திட மாகச் செய்தால்
கட்டழ கிழந்து மன்னர்
கலகமாய்ப் பொருளும் போமே. 568
*(886 c : 6)*

*(இ. ள்)* மனையெடுக்கும்பொழுது, நட்டக் கம்பத்தைப் பிடுங்கி நடுதல், மரமிசைத்து ஆணி போடுதல், கொட்டுவாயின் முனையை முறித்தல். கயிற்றினை அறுத்தல், விட்டவாசலை அடைத்து வேறு இடத்தில் வாசல் அமைத்தல் போன்றவற்றைச் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால், மனைக்குரியவன் தன் அழகினை இழப்பான். மன்னரின் கோபத்திற்கு ஆளாவான். கலகம் நேரிடும். கைப்பொருளும் கையைவிட்டுப் போகும்.

**செயல்கள்**

குடக்குத் தெற்கு மனைபெயரில்
குற்ற மிகவே தானுண்டு
வடக்கும் கிழக்கும் மனையெடுக்கில்
வசிய முண்டு மிகநன்றாம்

எடுப்பும் சாய்ப்பும் மிகவாகா
எண்ணும் கருமம் துலங்காது
முடுக்குங் கோடி மறுமாடி
மூலை வாங்கிலும் தீதாமே. 569
*(742 : 88)*

*(இ. ள்)* மேற்குத் திசை, தெற்குத்திசை இவற்றில் கட்டியுள்ள வீட்டைப் பெயர்த்துக்கட்ட குற்றம் உண்டாகும். வடக்குத்திசை, கிழக்குத் திசை ஆகிய திசைகளில் கட்டியுள்ள வீட்டை இடம் பெயர்ததுக் கட்ட நன்மையாகும். எடுப்பு, சாய்ப்பு, முறுக்கு, கோடி, மறுமாடிகள், மூலை வாங்கியிருந்தால் ஆகாது.

**இதுவுமது**

கூறுவிர லால்முகடு கொண்டமறு மாடி
மாறுபட வானவைகள் வாழுமனை எடுக்கில்
வீறுபடு நோய்களவு இல்லவளும் இல்லாள்
வேறுபடும் வெம்பகை விளம்புவது மெய்யே. 570
*(886 c : 89)*

*(இ. ள்)* மனையெடுக்கும்பொழுது, முகடுகள், மறுமாடிகள், மாறுபாடானவைகள் இருப்பில், மனையில் உள்ளவர்கள் நோயால் வருந்துவர். பொருள்கள் களவு போகும். மனைவிக்கு மரணம் நேரிடும். கொடுமையான பகைவர்தோன்றி வருத்துவர்.

**செயல்கள்**

மனையது பெயர்த்துக் கட்டில்
வடக்கொரு தெற்கு நன்றாம்
தனமுறு செல்வம் உண்டாம்
தரணியில் இனிது வாழ்வர்
அனமுறு தெற்கும் மேற்கும்
அல்லவே மிகவும் செய்யும்
வளமுறு மயனார் சொன்னார்
விளம்பினார் வேதத் தோரே. 571
*(886 c : 90)*

*(இ. ள்)* வீட்டை இடித்து மீண்டும் கட்டுபொழுது, வடக்குத் திசையிலும் தெற்குத்திசையிலும் கட்ட மிகவும் நன்மையாகும். செல்வம் பெருகும். மனைக்கு உரியவர்கள் இப்புவியில் இன்பமுடன் நிறைந்த வாழ்வு வாழ்வார்கள். வீட்டை இடித்துத் தெற்குத் திசையிலும் மேற்குத் திசையிலும் மீண்டும் கட்ட. அதனால் மனையில் உள்ளவர்களுக்கு மிகுந்த துன்பம் உண்டாகும் என்று மயனார் கூற, மற்றோர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

**இதுவுமது**

ஊர்க்கு அக்கினி வாயு நடுவில்
உயர்ந்த வீடு அமர்ந்து இருக்கில்
பார்க்கும் போது குணங்களும் அப்படி
பகர்ந்திரு வாசல் ஆலயம் சேர்ந்திடில்
சேர்க்கும் தேரணி இப்படி ஆகிடில்
செல்வமும் அந்த ஊருமே பாழதாம்
தாய்க்கு நோய்பிணி ஊரைவிட் டோடுவான்
தாரணி யில்மயன் சொன்ன மொழியிதே. 572

*(886 c : 50)*

*(இ. ள்)* ஊருக்கு அக்கினி மூலையில் (தென்கிழக்கு), வாயு மூலையில் (வடமேற்கு), நடுவில் (பிரமதானம்) இவற்றில் வீடு கட்டக்கூடாது. வீட்டு வாசலுடன் கோயில் சேர்ந்து இருப்பின், அம்மனைக்கு உரியவனுக்குச் செல்வம் கையைவிட்டுப் போகும்; அந்த ஊர் பாழாகும்; மனைக்குரியவனின் தாய்க்கு நோய்கள் மிகும்; மனைக்குரியவன் துன்பம் மிகுதியாகி, ஊரைவிட்டே செல்லுவான் என்று உலகத்தோர்க்கு மயன் சொன்ன மொழி இதுவாகும்.

## மனைகோல ஆகாத நாட்கள்
## தலையற்ற, உடலற்ற, காலற்ற நாட்கள்

கார்த்திகையும் உத்திரமும் உத்தி ராடம்
காலற்ற நாளாகும் கண்டு பாரு
கீர்த்தியுள மிருகசீ ரிடம விட்டம்
சித்திரையும் உடலற்ற நாள தாகும்
பூர்த்தியாம் விசாகமொடு பூரட் டாதி
புனர்பூசம் தலையற்ற நாள தாகும்
நேர்த்தியிலை மங்களமாம் காரி யங்கள்
நீவிலக்கிச் செய்யெனவே நிகழ்த்தி னோமே.

*(இ. ள்)* நட்சத்திரங்களில் கார்த்திகை, உத்திரம், உத்திராடம் மூன்றும் **காலற்ற நாட்களாகும்.** மிருகசீரிடம், அவிட்டம், சித்திரை மூன்றும் **உடலற்ற நாட்களாகும்.** புனர்பூசம், விசாகம், பூரட்டாதி மூன்றும் **தலையற்ற நாட்களாகும்.** இந்நாட்களில் மங்களமான காரியங்களை விலக்க வேண்டும். *(சி. நூ. பா. : 143)*

## இதுவுமது

காலற்றன உடலற்றன தலையற்றன நாளில்
கோலக்குல மடவார்தமை கூடின்மல டாவார்
மாலிட்டொரு மனைமாளிகை கோலினது பாழாம்
ஞாலத்தவர் வழிபோகினும் நலமெய்திடார் அவமே.

*(இ. ள்)* காலற்ற, உடலற்ற, தலையற்ற நாட்களில் பெண்களைச் சேரில் அவர்கள் மலடாவார். மனை, மாளிகை கோல, அவை அழிந்து பாழாகும். பயணத்தை மேற்கொண்டால், அவர்கள் வழியிலேயே மரணத்தை அடைவார்கள். *(சி. நூ. பா. : 144)*

## இதுவுமது

தலையற்றன வுடலற்றன தாளற்றன நாளில்
நிலைவைத்தவர் மனைகோபுரம் நீடுபதி நாசம்
கலைகற்றவர் பிணியுற்றவர் கடுகிப்பய ணத்தார்
வலையற்றிடு மானாடுவர் மணம்செய்திடிற் பிணமே.

*(இ. ள்)* தலையற்ற, உடலற்ற, காலற்ற நாட்களில் நிலை வைத்தாலும், மனை, கோபுரம் போன்றவற்றைக் கட்டினாலும் அழிந்து போகும். கலைகளைக் கற்றவராக இருப்பினும், நோய்வாய்ப் பட்டவராக இருப்பினும், விரைவில் பயணம் செய்பவராக இருப்பினும் வலையில் அகப்பட்ட மானைப் போன்று துன்பமுறுவர் திருமணம் செய்தால், பிணமாவார். *(சி. நூ. பா. : 145)*

## இதுவுமது

காலற்றநாள் உடலற்றநாள் தலையற்ற நாளதனில்
மாலுக்கேனும் மனைகோலினும் வழிபோகினும் மரணம்
வேலொத்தநல் விழிமாதரை மனைமேவினும் விதவை
ஞாலத்தவர் நடைபோயினும் நாசவிதி நாசம். 576

*(886 a : 68)*

## எரிக்கின்ற நாட்கள்

கதிருக்கு மகமாம் மதிக்கந்த விசாகம்
திருகுசெவ்வா யாதிரை ஆயிலி யம்புதன்
விருகுருவெண் சதயம் வெள்ளி ரோகணி
எரிசனிபூ ராடமிவை எரிக்கின்ற நாளே. 577

*(1005 a)*

*(இ. ள்)* ஞாயிறு - மகம், திங்கள்-விசாகம், செவ்வாய்-திருவாதிரை, புதன்-ஆயிலியம், வியாழன்-சதயம், வெள்ளி-உரோகணி, சனி-பூராடம் இவை எரிக்கின்ற நாட்கள். இந்நாட்களில் மாட கூடம், மனையெடுத்தல், நல்ல காரியங்கள் போன்றவை செய்யலாகாது.

### வேறு

விரிகதிர் மாமகம் விசாகம் திங்களாம்
அருங்குஜன் ஆதிரை ஆயிலி யம்புதன்
விரைகுரு சதயமும் வெள்ளி ரோகணி
இரைசனி பூராடம் எரிக்கும் நாட்களே. 578

*(சி. நூ. பா. : 137)*

### பிறந்த நாள் வாரம் கூடில் மனையெடுக்க ஆகாத நாட்கள்

செங்கதிரோன் பிறந்தநாள் பரணி யாக
செழுமதிக்குச் சித்திரைசெவ் வாய்உத்தி ராடம்
பொங்குபுதன் அவிட்டம் பொன்மேல் கேட்டை
புகர்வெள்ளி பூராடம்சனி ரேவதி நாளில்
மங்கையனார் மணம்புணரில் விதவை யாகும்
மனையெடுக்கிற் பாழாம்வழி போகில் மரணம்
செங்குழலாள் திருப்பூத்தால் மலடி யாவாள்.
சிறுகுழவி பிறந்திடிலே சேதம் தானே. 579

*(886 a : 63)*

*(இ. ள்)* ஞாயிறு-பரணி, திங்கள்-சித்திரை, செவ்வாய்-உத்திராடம், புதன்-அவிட்டம், வியாழன்-கேட்டை, வெள்ளி-பூராடம், சனி-இரேவதி இந்நாட்களில் திருமணம் செய்தால், பெண் விதவையாவாள்; மனையெடுக்கப் பாழாகும்; பயணம் செய்தால்-வழியில் மரணம் உண்டாகும். திருப்பூத்தல் செய்யில்- மலடியாவாள்; குழந்தை பிறந்தால் இறந்துவிடும்.

குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்

செங்கதிரோன் வாரநாள் பரணி கூடில்
செழுமதியிற் சித்திரைநாள் உத்தி ராடம்
பொங்குபுதன் அவிட்டம்பொன் வாரங் கேட்டை
புகற்பூராடம் காரிரே வதியிற் நாளில்

மங்கையரை மணம்புனரில் விதவை யாகும்
மனையெடுக்கின் பாழ்வழியிற் போகிற் சாவாம்
செங்கயற்கண் ணார்பூத்தால் மலடி யாவர்
சிறுகுழவி பெரின்மரிக்கும் திண்ணம் தானே.

*(ம. நூ. பா. : 282)*

## வேறு

வந்திக்கும் கதிர்க்குக் காடு
மதிக் குச்சித் திரைசேய்க் காடி
புந்திக்கு விட்டம் பொன்மேற்
கேட்டையாம் புகர்பூ ராடம்
கிந்திக்கும் சனிக்குத் தோணி
கிழமைகள் பிறந்த நாளாம்
சிந்திக்கும் கரும மெல்லாம்
தீமையாய் விளையும் மாதே. 580

*(சி. நூ. பா. : 142)*

## மனைகோல ஆகாத நாட்கள்

அஞ்சு மகமும் அனுடமொரு மூன்றுநவம்
மிஞ்சுகார்த் திகைமிக்க வேவெண்ணம் ரோகணியும்
நஞ்சுநான் குத்தரமிந் நாளில்மனை கோலுமவர்
துஞ்சுவரவ் வாண்டுக்குள் துய்யமயன் சொல்லிதுவே.

*(இ. ள்)* பஞ்சமியும்-மகமும், திருதிகையும் - அனுஷமும், நவமியும்-கார்த்திகையும், அஷ்டமியும்-உரோகணியும், சதுர்த்தியும் - உத்தரமும் கூடின நாளில் மனைகோலில், அந்த ஆண்டு முடிவதற்குள் மனைக்கு உடையவர் மரணமடைவர்.

## மனைக்கு ஆகாதவை - நாட்கள்

வட்டமும் கொடிய வாரம்
மந்தாரம் மழையே முறிதல்
தொட்டிடும் கிராணம் பார்த்துக்
குலைந்திடும் பொல்லா நாட்கள்

விட்டியும் வெள்ளிப் பாடும்
விடமுள்ள கடிகை நேரம்
அட்டமி உவாவி ருத்தை
ஆகநாள் நீக்கிக் கூட்டே. 582

*(886 a : 138)*

*(இ. ள்)* பரிவேடமும், கொடிய நாட்களாகிய ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய நாட்களும், மந்தாரம், மழை முறிதல், கிராணம் முதலான நாட்களும் **பொல்லாத நாட்களாகும்.** விட்டி, கரணம், விஷக்கடிகை, அட்டமி, அமாவாசை, பூரணை, இருத்தை இவை வராமல் நீக்கி, நல்ல வாரத்திலே முகூர்த்தம் இடுவது.

**இதுவுமது**

வட்டமாம் பரிவே டக்கல்
மழைமுறை கிராணம் பத்தும்
மட்டசந் திரனை மிக்க
அமாவாசை அதுவும் தீதாம்
சட்டிபவ றணையும் நான்கும்
சதுர்த்தசி மற்று மங்கள
ஒட்டிய பக்கம் மிக்க
உத்தம மாகு மென்றே. 583

*(886 a : 73)*

*(இ. ள்)*, சந்திரனையும் சூரியனையும் பரிவேடமிட்டிருந்தால் கொடிய வாரமாம். மந்தாரம், மழைத்தூறல், கிரணம் தீண்டல், அமாவாசை, சஷ்டி, பௌர்ணமி, சதுர்த்தி, சதுர்தசி இவைகளை நீக்கி வளர்பிறையில் நல்ல நாட்களில் முகூர்த்தத்தைத் தேர்ந்தெடுத்துச் செய்ய வேண்டும்.

---- ❋ ----

## 18. பூமி சல்லியம் - கணக்கிட்டுக் காணல்

அப்போ தளந்தவடி யாமிருபத் தெட்டுடனே
தப்பாமற் கூட்டித் தவறாமற் - செப்பமுடன்
பன்னிப் பயனைப் பதினாறுக் கீய்ந்தபலம்
உன்னியவர்க் கெல்லம் உரை. 584

*(சி. நா. பா. : 407)*

*(இ. ள்)* யாரேனும் ஒருவன் கிரக சல்லியம் வினவினால் அடியளந்து அவச்சாயை, பாதச்சாயைகள் நின்ற அடியுடனே இருபத்தெட்டு கூட்டி பதினாறில் வகுக்க,

*மீதி ஒன்றானால் தலையோடு; மீதி இரண்டானால் எலும்பு;*
*மீதி மூன்றானால் விட்டிகை; மீதி நான்கானால் ஓடு;*
*மீதி ஐந்தானால் விறகு; மீதி ஆறானால் தெய்வம்;*
*மீதி ஏழானால் சாம்பல்; மீதி எட்டானால் கரி;*
*மீதி ஒன்பதானால் சவம்; மீதி பத்தானால் தானியம்;*
*மீதி பதினொன்றானால் பொன்; மீதி பன்னிரண்டானால் கருங்கல்;*
*மீதி பதிமூன்றானால் தவளை; மீதி பதினான்கானால் பசுவின் கொம்பு*
*மீதி பதினைந்தானால் நாயெலும்பு; மீதி பதினாறானால் மதமதக்காசால்;*

*இந்தப்படி பதினாறும் பூமி சல்லியம்.*

**குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்**

அப்போ தளந்த அடியோ டிருப்பதெட்டும்
தப்பாமல் கூட்டி தகறில் - இப்புவியில்
பன்னிரெண் டால்பெருக்கிப் பதினாறுக் கீய்ந்தபலன்
உன்னியவர்க் கெல்லமா உரை.

*(1005 a)*

குறிப்பு: **இப்பாடலில் இருபத்தெட்டு கூட்டிப் பன்னிரண்டால் பெருக்கிப் பின் பதினாறால் வகுக்க வேண்டும் என்று கூறப்பட்டிள்ளது நோக்கத்தக்கது.**

## பூமி சல்லியம் - வகை

உள்ளும் முறமைதலை யோடெலும்போ டிட்டிகையும்
வள்ளோடு சுள்ளி மகிழ்தெய்வம் - தெள்ளியதோர்
சாம்பல் கரிசபமும் தானியம்பொன் கற்றவளை
யாங்குசுவா னத்தெலும்பு மாம். 585

*(இ. ள்)* பூமி சல்லியம் பதினாறு வகைப்படும். அவை 1. தலையோடு, 2. எலும்பு, 3. விட்டிகை, 4. ஓடு, 5. சுள்ளி, 6. தெய்வம், 7. சாம்பல், 6. கரி, 9. சவம், 10. தானியம், 11. பொன், 12. கருங்கல், 13. தவளை, 14. பசுவின் கொம்பு, 15. நாயெலும்பு, 16. மதமதக்கா சால். இந்தப்படி பதினாறும் பூமி சல்லியம். *(சி. நூ. பா. : 406)*

## ஆருடம்
## பூமி சல்லியம் - பலன் காணல்

உதயவா ரூடம் தன்னில்
உடலுயிர் அறிய வேண்டில்
மதிதமாய் வந்த நாட்கள்
வருமுழு நாட்கள் தன்னில்
புதியதாய் உடலீ தென்றும்
பொழுதுநாள் உயிர தென்றும்
பதியவே பலன்கள் சொல்லும்
பகர்ந்தன முறையு மாதே. 586

*(இ. ள்)* உதய ஆருட இராசியில் உடல் இராசி இன்னதென்றும் உயிர் இராசி இன்னதென்றும் தெரிய வேண்டி இருப்பதால், அது விபரம். சந்திரன் நின்ற இராசியே உடல் இராசியென்றும், உதயாரூட இராசியே உயிர் இராசி என்றும், தெரிந்து கொள்ள வேண்டும். இந்த இராசிகளில் முழு நாளை எண்ணி பலன் சொல்ல வேண்டும். *(சி. நூ. பா. : 397)*

## பலன் சொல்லுதல்

தொட்டலக் கனத்தில் காரி
சூரியன் செவ்வாய் இராகு
திட்டம்நா லேழு பத்தில்
சீரண மதியே சேர்ந்தாற்
பட்டிடு மரங்கள் கட்டை
பானையோ டெலும்பு சாம்பல்
சட்டமாய் இருக்கும் என்றே
சாற்றினார் மயனும் தானே. 587

*(இ. ள்)* யாரேனும் ஒருவர் வினவிக் கேட்க வரும்பொழுது, அவரை ஒரு இராசியைத் தொடச்சொல்லி, அந்த இராசிக்குச் சனி, சூரியன், செவ்வாய், இராகு, நாலாமிடம், ஏழாமிடம், பத்தாமிடம், அமரபக்கம் சந்திரன் கூடியிருந்தால், பட்ட மரமும் பனையோடும் எலும்பும் சாம்பலும் இருக்கின்றது என்று சொல்லுவது. *(சி. நூ. பா. : 398)*

## பூமி சல்லியம் - தீயவை

ஆறெட்டில் பன்னி ரண்டில்
ஆனதோர் சல்லி யங்கள்
கூறாட்டு நின்ற தாலே
குத்தமே இல்லை நன்மை
வீறாட்ட இலாபம் எல்லாம்
வித்தைசேர் மூன்றில் நின்றால்
பேரிட்ட சல்லி யங்கள்
பெரும்பிணி மிகவுண் டாமே. 588
*(1005 b)*

(இ. ள்) ஆருட இலக்கனத்திற்கு ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் இவைகளில் கோள்கள் நின்றால் நன்மை. பதினோராமிடம், ஏழாமிடம், இரண்டாமிடம், மூன்றாமிடம் இவைகளில் கோள்கள் நின்றால், அம்மனையில் சல்லியங்கள் இருக்குமென்று சொல்வது. அவ்வாறு இருந்தால், மனைக்குரியவனுக்குப் பெரும் பிணிகள் தோன்றி வருத்தும்.

### பூமி சல்லியம் - தீயவை

கருங்கல்லோ டெலும்பு கூடி
காரிய ஸ்தானம் தன்னில்
இரும்பொடு தராவும் கட்டை
ஈயம்பித் தளைதான் சேர்ந்தால்
அரும்பொருள் நாச மாகும்
அம்மனை அழியு மென்று
தருந்திருப் புவன மாதே !
சாத்திரம் மயன்சொன் னாரே. 589
*(1005 b)*

(இ. ள்) காரியஸ்தானம் எனப்படும் பத்தாமிடத்தில் கிரகங்கள் நின்றால், அந்த மனையில் கல், எலும்பு, இரும்பு, தரா, கட்டை, ஈயம், பித்தளை இவைகளில் ஒன்று இருக்குமென்று சொல்லுவது. அவ்வாறு இருந்தால், மனைக்குரியவர்களின் செல்வம் அழிந்து போகும். அந்த வீடும் நாசமாகும்.

### இதுவுமது

உயிருடன் ரெண்டி லந்த
உத்தமதோர் சல்லி யங்கள்
மயிர்முனை கூடி நின்றால்
மன்னவர் தனக்கு மாகா

தயிரியம் பலம்சம் பத்தும்
தானுமே அழியு மென்று
குயில்மொழி அனைய மாதே!
கூறினார் மயனார் அன்றே! 590
*(1005b)*

*(இ. ள்)* உயிரெனப்பட்டது **ஆரூட இலக்கனம்**. உடல் எனப்பட்டது. **உதய இலக்கனம்.** இதற்கு இரண்டாம் இடத்தில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் மயிர், நகம் முதலானவை இருக்குமென்று சொல்லுவது. அவ்வாறு இருந்தால், மனைக்குரியவனுக்குத் தீங்கு நேரிடும். தைரியமும் பலமும் குறையும். செல்வம் அழிந்து போகும் என்று மயனார் கூறியதை குயில் போன்ற இனிய மொழியை உடைய பெண்ணே அறிவாயாக.

**இதுவுமது**

புத்திரத் தானம் தன்னில்
பொருந்திய சல்லி யங்கள்
சத்துற கல்லு மற்றும்
தழைத்திடு மரங்கள் கட்டை
பெத்திட எலும்பு கூடி
பெரியதோர் மனையில் நின்றால்
அத்திடும் குலங்கள் என்றே
ஆதியில் மயனார் சொன்னார். 591
*(1005b)*

*(இ. ள்)* உதய ஆரூடத்திற்கு ஐந்தாமிடத்தில் கிரகங்கள் நின்று, அதற்கு ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய கேந்திர ஸ்தானங்களில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் கல், மரம், கட்டை, எலும்பு முதலானவை இருக்குமென்று சொல்லுவது. அவ்வாறு இருந்தால், மனைக்குரியவனின் குலம் அழிந்து போகும்.

## இதுவுமது

களத்திரத் தானம் தன்னில்
கரியொடு உமிஎ லும்பு
வளத்துடன் மனையில் நின்றால்
மனைவியாள் மரண மாகும்
விளைத்திடும் தீமை இல்லாள்
வியாதியாம் சங்கை பீடை
கிளத்திடும் குணங்கள் தன்னைக்
கெட்டிட மயனார் சொன்னார். 592

(1005 b)

(இ. ள்) உதய இராசிக்கு ஏழாமிடத்தில் எந்தக் கிரகமாவது இருக்க, அதற்கு ஒன்று, நான்கு, ஏழு, பத்தில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் கரி, உமி, எலும்பு முதலியன இருக்குமென்று சொல்லுவது. அவ்வாறு இருந்தால், அந்த மனைக்கு உரியவனின் மனைவி தீமை செய்பவளாக இருப்பாள். மனைக்கு உரியவனுக்கு நோய்கள் வருவதோடு, துன்பங்க்ள் மிகுதியாகும். குணம் கெடும் என்று மயனார் சொன்னார்.

குறிப்பு: கிளைத்திடும் குலமும் பொன்னும்
கெடுதியாம் மயன் சொன்னாரே.

## இதுவுமது

சாடியோ டெலும்பு கூடி
தழைத்திடும் மனையில் நின்றால்
ஓடிய கப்பல் ஆழி
உடைந்தது போலே யோகம்
கூடிய மனையில் நின்று
குலந்தனை நாசம் பண்ணும்
பாடிய மயனார் சொன்ன
பயனறிந் துரைசெய் தேனே. 593

(1005 b)

(இ. ள்) உதய இலக்கனத்தில் கிரகங்கள் நின்று அதன் கேந்திரங்களில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் சாடியும் எலும்பும் இருக்குமென்று சொல்வது. அவ்வாறு இருந்தால், ஓடி வருகின்ற கப்பல் கடலில் உடைந்தது போல தீய யோகமாகும். மனைக்குரியவரின் மனைவி மரணாவாள். குலம் நாசமாகும்.

### இதுவுமது

சாம்பலோ டெலும்பு கூடி
தழைத்திடு மனையில் நின்றால்
சோம்பலே மிகவுண்டாகும்
சுகமது இல்லை கண்டீர் !
பாம்பினால் அச்சம் உண்டாம்
பாரியால் விரோதம் உண்டாம்
நாம்பல நூல்கள் கண்டு
ஞாயமாய் உரைத்த வாறே. 594
(1005b)

(இ. ள்) உதயாரூட இராசிக்குக் கேந்திர தானங்களாகிய ஒன்று, நான்கு, ஏழு, பத்தில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் சாம்பல், எலும்பு முதலியன இருக்குமென்று சொல்லுவது. அவ்வாறு இருந்தால், மனைக்கு உரியவனுக்குச் சோம்பல் மிகுதியாக இருக்கும். பாம்பினால் அச்சம் உண்டாகும். மனைவியினால் விரோதமும் பொருள் சேதமும் உண்டாகும்.

### இதுவுமது

ஆருடந் தன்னில் இராகு
அதற்குநா லேழு பத்திற்
காரியும் மதியும் நின்றாற்
கரியொடு உமிள லும்பு

வீரிய முடனே காணும்
மேலதிக் இரண்டு மூன்றிற்
சூரியன் மதியும் நின்றாற்
சூனியம் இருக்குந் தானே. 595

(இ. ள்) ஆரூட இராசிகளில் உதயத்தில் இராகு, நாலு, ஏழு, பத்து ஆகிய இடங்களில் சனி, சந்திரன் ஆகிய இரண்டு கோள்களும் நின்றால் கரி ஓடு, எலும்பு இவைகள் அம்மனையில் இருக்கும் என்று சொல்லவேண்டும். அவ்வாறு இருப்பின், நன்மை இல்லை. இரண்டாமிடம், மூன்றாமிடங்களில் சூரியனும் சந்திரனும் கூடி நின்றால், சூன்யம் இருக்கின்றதென்று அறிந்து அதனை எடுக்க வேண்டும். *(சி. நூ. பா. : 396)*

## இதுவுமது

சுக்கிரற் கெதிரே புந்தி
தோன்றிய காரி மன்னன்
வக்ரமில் லாதி ருந்தால்
மன்னவர்க் காறில் மந்தன்
சிக்கவே திரவி யங்கள்
நிலந்தனில் இல்லை யாகில்
பக்குவ மான வெள்ளி
பாரினில் மிகவுண் டாமே. 596

(இ. ள்) சுக்கிரனுக்கு எதிரில் புதனும் சனியும், சூரியனும் வக்கிரமில்லாமல் இருந்தாலும் சூரியனுக்கு ஆறில் சனியிருக்க, அந்தப் பூமியில் செல்வம் கிடைக்கும். அவ்வாறு கிடைக்காவிட்டால் வெள்ளியாவது கிடைக்கும். *(சி. நூ. பா. : 400)*

## இதுவுமது

மதிக்குநா லேழு பத்தில்
மந்திரி புந்தி கூடி
அதற்குமூன் றெட்டில் ஆறில்
ஆதித்தன் இருப்பா னாகில்
இதிக்கவோர் பத்தி னாலே
இருந்தவன் பலவான் என்னில்
நிதிக்குளோர் பயனே சொல்லும்
நிச்சயம் மயன்சொன் னாரே. 597

*(இ. ள்) சந்திரனுக்கு நாலாமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் ஆகியவற்றில் குரு, புதன் ஆகிய கோள்கள் ஒன்று கூடி நின்று அதற்கு மூன்று, ஆறு, எட்டில் சூரியன் இருந்தால், மனையைத் தோண்டிப் பார்க்க, புதையல் கிடைக்கும் என்று மயன் சொல்லியிருக்கிறார். (சி. நூ. பா. : 399)*

## பூமி சல்லியம் எடுத்தல்

தனமிகு சூனி யத்தால்
தருகரி எலும்பி னோடும்
குனமுடன் காண வென்றால்
இயம்புவேன் அரசே கேளாய் !
மனதுடன் இருபத் தெட்டு
வாகுள பாகஞ் செய்து
வினவிய நிலவு வீட்டில்
விருப்பமாய் இருக்குந் தானே ! 598

*(இ. ள்) தனங்கள், சூனியம், கரி, எலும்பு இவைகளை எடுக்க வேண்டுமென்றால், அவ்விடத்தை இருபத்தெட்டு பாகம் செய்து, அதில் சந்திரன் எந்த வீட்டில் இருப்பானோ அந்த இடத்தில் இருக்கும். (சி. நூ. பா. : 401)*

### இதுவுமது

இருப்பதாம் பொருட்த னக்கு
இயல்புடன் வகையைக் கேளு
கருப்பென இருளன் காளி
கணந்துர்க்கை வயிர வன்தான்
இருப்பது கால லாக
இருந்தவர் தனைவி லக்க
விருப்பமாம் கணப தித்தாள்
விரும்பியே பூசை செய்யே. 599

(இ. ள்) இருக்கின்ற பொருள் சூனியமெடுக்க வென்றால், அதைக் காத்திருக்கின்ற கறுப்பன், இருளன், காட்டேரி, காரி, கணம், துர்க்கை வயிரவன் இவர்களின் காவலை விலக்க வேண்டும். அதற்குத் தீபதூப நைவேத்தியத்தோடு விநாயகக் கடவுளை பக்தியோடு அர்ச்சிக்க வேண்டும். (சி. நூ. பா. : 402)

### இதுவுமது

செய்யதோர் பூமி தன்னைச்
சிறப்புடன் மெழுகிப் பின்னும்
மெய்யதாய் கும்பம் தன்னை
விரும்பித்தா பிதமே செய்து
ஐயனே ஓம குண்டத்
தக்கினி செபம்செய் தங்கே
துய்யநாற் சதுரம் தன்னை
துலங்கநன் றாகச் செய்யே ! 600

(இ. ள்) பூமியைச் சதுரமாக மெழுகிக் கும்பம் ஸ்தாபித்து ஓமாதியக்கிய செபம் செய்து நாற்சதுரமாகக் கீறிக் கொள்ள வேண்டும். (சி. நூ. பா. : 403)

## இதுவுமது

துலங்கவே எட்டுத் திக்கும்
சுற்றிநூ லாணி கொண்டு
இலங்கிய ஜெபத்தி னோடே
இன்பமாய் ஆணி கொண்டு
அலங்கிரு தபலி கொடுத்து
அவ்விடம் சோதித் தக்கால்
நலங்கொள நீகு றித்த
நற்பொருள் சொல்லக் கேளே! 601

*(இ. ள்)* எட்டுத் திக்கும் சுற்றி நூலாணி கொண்டு ஜெபதப மந்திர சித்தியோடு ஆணிகொண்டு, பலி கொடுத்து அவ்விதமாகச் சோதனை செய்தால் நீ குறித்த பொருள் கிடைக்கும். *(சி. நூ. பா. : 404)*

## இதுவுமது

சொல்லுவேன் நீகு றித்த
சுகப்பொருள் வரத்துக் காண
வல்லதோர் குமரன் பூசை
மாருதி மந்தன் பூசை
சல்லாப மாகச் செய்தால்
தனம்பொருள் காணும் சொன்னேன்
புல்லிய மயனார் சொன்ன
புகழ்பெறு நூலி தாமே. 602

*(இ. ள்)* பொருள் வரவைக் காண வேண்டுமாயின், குமரன் பூசை, அனுமன் பூசை, சனிக்கு பூசை செய்து அவ்விடத்தில் சோதித்தால், குறித்த பொருள் கண்ணிற் றுலக்கமாய்க் காணும். *(சி. நூ. பா. : 405)*

## 19. சுவர் வெடிப்பு

குடதிசை பிளக்க நாசம்
குணதிசை தளமே உண்டாம்
வடதிசை மக்கட் பேறு
வெளவிய சாவு தெற்கு
நடலையே படுத்தும் அங்கி
நல்லது நிருதி மூலை
கடகியே ஈசன் நாசம்
காற்றுமேல் கூத்த னாமே. 603
*(1005b)*

*(இ. ள்)* கிழக்குத் திசையில் சுவரில் வெடிப்புத் தோன்ற, அழிவு நேரிடும்; மேற்குத் திசையில் வெடிப்புத் தோன்ற, செல்வம் உண்டாகும்; வடக்குத் திசையில் வெடிப்புத் தோன்ற, புத்திரர் தோன்றுவர்; தெற்குத் திசையில் வெடிப்புத் தோன்ற மரணம் நேரிடும்; தென்கிழக்குத் திசையில் வெடிப்புத் தோன்ற, துன்பம் மிகும்; தென்மேற்குத் திசையில் வெடிப்புத் தோன்ற, நன்மைகள் பெருகும்; வடகிழக்குத் திசையில் வெடிப்புத் தோன்ற, அழிவு நேரிடும்; வடமேற்குத் திசையில் வெடிப்புத் தோன்ற மரணமுண்டாகும்.

### இதுவுமது

ஆனதோர் சுவர்வெ டிப்பு
அடுத்ததோர் கிழக்கு நாசம்
வானந்தீ மூலை யல்லால்
மானமாம் அகோரம் தெற்கு
தேனுதல் கன்னி போகம்
சிறந்ததோர் மேற்கு ஆக்கம்
கோன்வட மேற்குச் சாவு
குறித்தநல் வடக்கு லாபம். 604
*(742 : 85)*

*(இ. ள்)* வீட்டின் கிழக்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால் அழிவு உண்டாகும்; தென்கிழக்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால், துன்பம் ஏற்படும்; தெற்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால், அழகு நீங்கும்; தென்மேற்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால் சுகம் உண்டாகும்; மேற்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால், ஆக்கம் ஏற்படும்; வடமேற்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால், அந்த மனையில் மரணம் நிகழும்; வடக்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால் இலாபம்.

**வானம், சுவர் விரிவுகளின் குறி**

வானமாம் சுவரி லீசன்
வழங்குமிந் திரனே நன்மை
காணலக் கினியே துன்பம்
கருதிடில் எமனும் ஆகா
மாணவே நிருதி செல்வம்
வருணனே தவங்கள் உண்டாம்
கோணவே வாயு நோயாம்
குபேரனுக் கழகுண் டாமே. 605

*(சி. நூ. பா. : 330)*

*(இ. ள்)* மனையில் வாணம், சுவர் இவைகளில் வடகிழக்கு, கிழக்கு முதலான திசைகளில் விரிவு ஏற்பட்டால், நன்மையாகும். தென்கிழக்கு மூலையில் விரிவு ஏற்பட்டால், துன்பமாகும். தெற்குத் திசையில் விரிவு ஏற்பட்டால், தீங்கு நேரிடும். தென்மேற்குத் திசையில் விரிவு ஏற்பட்டால், செல்வம் சேரும். மேற்குத் திசையில் தவம் உண்டாகும். வடமேற்கு திசையில் விரிவு ஏற்பட்டால், பீடை காட்டும். வடக்கு திசையில் விரிவு ஏற்பட்டால், அழகு மிகுந்து செல்வமும் உண்டாகும்.

**கறையான்**

குறுகும்செஞ் சேலயன்மேல் தோனில் நன்றாம்
கொடுங்கதிர் கேடங்கிமி ருத்துயமன் இன்பம்
பெறுநிருதி மழைவருணன் செல்வம் காற்று
பொன்போக்கு வடக்கதிலே வாழ்வு ஈசன்
முறியுங்கீழ்க் கன்றுகாலி கள்தான் மாயும்
கட்டில்படி யில்காலின் கீழ்நோ யாகும்
இறைவனிடம் ஊருணியம் பலம்பள்ளி தெண்டில்
ஏறிநாடு கெடும்சுவர்மேல் இலங்கில் தானே. 606
*(886 : 180)*

*(இ. ள்)* செஞ்சேல் அல்லது செஞ்சிதல் என்று சொல்லப்படும் கறையான் அயன் பகுதியாகிய மனையின் பிரம்ம தானத்தில் (நடுவில்) தோன்றினால் மனைக்கு உரியவனின் வாழ்நாள் குறையும். கிழக்குத் திசையில் தோன்றில், செல்வம் கிட்டும்; தென்கிழக்கு மூலையில் தோன்றில், கேடு உண்டாகும்; தெற்கு மூலையில் தோன்றில் மரணபயம் உண்டாகும்; தென்மேற்கு மூலையில் தோன்றினால், இன்பம் கிட்டும்; மேற்குத் திசையில் தோன்றில், செல்வம் உண்டாகும்; வடமேற்குத் திசையில் தோன்றில், செல்வம் கைவிட்டுப் போகும்; வடக்குத் திசையில் தோன்றில், நிறைவான வாழ்வு கிட்டும்; வடகிழக்குத் திசையில் தோன்றில், கால்நடைகள் மடியும்; கட்டில் கால், படி, சாலின் கீழ் கறையான் பிடிக்க, நோய் உண்டாகும். கோயில், ஊர்க்கிணறு, அம்பலம், பள்ளி முதலான இடங்களில் கறையான் பிடிக்க, நாட்டுக் கேடு உண்டாகும்.

---

606. 886a : 180

## இதுவுமது

செஞ்சிதல் மனையில் வந்து
சேர்ந்திடில் பலன்கள் தன்னை
முன்சொன்ன நடுகி ழக்கு
முதலண்ட மெட்டுங் கொள்க
மிஞ்சிய கேடு நன்மை
விருத்தமாம் இன்ப மாகும்
மஞ்சுறு மனையே செல்வ
மனையுமே வாழ்வு பீடை. 607

*(இ. ள்) செஞ்சிதல் மனையில் தோன்ற, நடுவாகில் சாவு; கிழக்காகில் செல்வம்; தென்கிழக்காகில் மனையிடியும்; தெற்காகில் துக்கம்; தென்மேற்காகில் பசி, மேற்காகில் புத்திர விருத்தி; வடமேற்காகில் மரணம்; வடக்காகில் நன்மை; வடகிழக்காகில் வியாதியுண்டாம். (சி. நூ. பா. : 473)*

## இதுவுமது

வஞ்சி கேளும்! வருங்க ருமமாம்
பிஞ்சு பிரம மிகுந்திடும் தானத்தில்
செஞ்சேல் புற்று செழிக்கக் கிளம்பிடில்
கஞ்ச னாணை கருதிமிகச் சாவே. 608

*(ம. சா. பா. : 218)*

*(இ. ள்) பெண்ணே! கேட்பாயாக! வீட்டின் நடுவாகிய பிரமத்தானத்தில் கறையான் புற்று தோன்றுமாகில், மனைக்குரியவனுக்கு உறுதியாக மரணம் நேரிடும்.*

# 20. பொருத்தங்கள்

கற்பமா தாயமுடன் கேள்செலவு யோனியுமே
உற்பனவின் மீனும் உறவாரம் - அற்புதந்தான்
அங்கீசமும் சாதிதிதி ராசியா கும்வயது
தங்குபதி னொன்று பொருத்தம். 609

*(இ. ள்)* ***1. கற்பம், 2. ஆதாயம், 3. செலவு, 4. யோனி, 5. நட்சத்திரம், 6. வாரம், 7. அங்கிசம், 8. ஜாதி, 9. திதி, 10. இராசி, 11. வயது, இவ்விதம் பதினொரு பொருத்தங்களாகும். (சி. நூ. பா. : 13)***

மலர்தரு கற்பகம் நல்லாயம் வியம்திதி வாரமுடு
நிலவுறு யோனி இராசி அங்கிசம் நேர்வமிசம்
பொலிகணம் நேத்திரம் சூத்திரம் யோகம் புகல்வயது
தலமகிழ் தாரையோ டீரெண் பொருத்தமும் சாற்றுவனே. 610

*(886 : 1)*

*(இ. ள்)* ***பதினாறு பொருத்தங்களாகிய 1. கற்பம், 2. ஆதாயம், 3. விரயம், 4. திதி, 5. வாரம், 6. நட்சத்திரம், 7. யோனி, 8. இராசி, 9. அம்சம், 10. வம்சம், 11. கணம், 12. கண், 13. சூத்திரம், 14. யோகம், 15. வயது, 16. தாரை ஆகிய பொருத்தங்களைக் கூறுவேன்.***

## பொருத்தங்கள் - பொது

எட்டுடன் பன்னி ரண்டுமா தாயமாம்
ஏத்தி ஒன்பதோ டீரஞ் சழிவதாம்
முட்டி மூன்றுட னேயெட்டும் யோனியாம்
மூவெட் டிருபத் தேழ்நட் சத்திரமாம்
சட்ட ஒன்பதும் ஏழுடன் வாரமாம்
சாத்து நாலுடன் ஒன்பதும் அங்கிசம்
திட்ட ஒன்பது வேதமும் சாதியாம்
சிறந்த ஏழீ றாருடன் இராசியே. 611

*(742 : 107)*

(இ. ள்) மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை எட்டினால் பெருக்கி, பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **ஆதாயம்** எனப்படும். குழித்தொகையை ஒன்பதில் பெருக்கிப் பத்தில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **விரயம்** எனப்படும். குழித்தொகையை மூன்றில் பெருக்கி, எட்டில் வகுக்கக்கிடைக்கும் மீதி, **யோனி** எனப்படும். குழித்தொகையை எட்டில் பெருக்கி, இருபத்தேழில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **நட்சத்திரம்** எனப்படும். குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, ஏழில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **வாரம்** எனப்படும். குழித்தொகையை நான்கில் பெருக்கி ஒன்பதில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **அம்சம்** எனப்படும். குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, நான்கில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **சாதி** எனப்படும். குழித்தொகையை ஏழில் பெருக்கி, பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **இராசி** எனப்படும்.

## பொருத்தங்களும் ஆதாயமும்

நவமிரு மூவஞ்சும் திதியே யாகும்
நாடிஇரு பத்தேழும் சதமே தானும்
புவனிதனில் வயதெனவே புகலு மல்லால்
பொருந்தியதோர் இலாபமது ஈராறுக்கும்
கவனமுடன் பலனதுவே சொல்லக் கேளாய்!
கருதியதோர் ஒன்றுக்கே யோகம் என்பார்
தவமுயரும் இரண்டுக்கு போகம் மூன்று
சம்பிரதி நாலுக்கு வீரம் தானே. 612
*(1005 b)*

(இ. ள்) மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, முப்பதில் வகுக்க வரும் மீதி **திதி** எனப்படும். குழித்தொகையை இருபத்தேழில் பெருக்கி, நூறில் வகுக்க வரும் மீதி, **வயது** எனப்படும். குழித்தொகையை எட்டில்

பெருக்கி, பன்னிரண்டால் வகுக்கக் கிடைக்கும் மீதியான ஆதாயம் பன்னிரண்டாகும்; மீதியாக ஒன்று வந்தால், யோகம் கிட்டும்; மீதியாக இரண்டு வந்தால், போகம் உண்டாகும்; மீதியாக மூன்று வந்தால், சம்பிரிதி உண்டாகும்; மீதியாக நான்கு வந்தால், வீரம் உண்டாகும்.

## ஆதாயம்

ஐந்துக்குச் சத்துரு நாசம் ஆறு
அகமதனில் தனியமாம் ஏழதற்கு
சிந்திக்கும் எட்டதற்கே சுகம தாகும்
சிறந்ததொரு ஒன்பதற்கே சித்தம் என்பர்
முந்திய பத்துதனக் கேஅந்தம் ஓங்கும்
முயன்றுபதி னொன்றதற்கே புத்திர இலாபம்
விந்தையுறும் பன்னிரண்டு ஞானம் என்பார்
மேவியதோர் செலவுபத்தும் விபரம் சொல்லே.613

*(1005a)*

*(இ. ள்)* குழித்தொகையை எட்டால் பெருக்கிப் பன்னிரண்டால் வகுக்கக் கிடைக்கும் மீதியான ஆதாயத்தில் மீதியாக ஐந்து வந்தால், பகைவர்கள் நாசம் அடைவர்; மீதியாக ஆறு வந்தால், வீட்டில் தானியம் நிறைந்திருக்கும்; மீதியாக ஏழு வந்தால், எடுத்த காரியம் வெற்றியாகும்; மீதியாக எட்டு வந்தால், வீட்டில் உள்ளவர்கள் சுகமடைவார்கள்; மீதியாக ஒன்பது வந்தால், நினைத்த காரியம் நிறைவேறும்; மீதியாகப் பத்து வந்தால், நீண்ட ஆயுள் கிட்டும். மீதியாக பதினொன்று வந்தால், புத்திர இலாபம் உண்டாகும் மீதியாகப் பன்னிரண்டு வந்தால், ஞானம் கிடைக்கும்.

### இதுவுமது

மேவிய ஒன்றிரண்டு ஏக போகமாம்
மேவி திரிசதுர் கீர்த்தி சௌரியம்
தாவிய ஐந்தாறில் தானி யம்தனம்
மேவேழு எட்டினில் சுகமெய்ஞ் ஞானமே. 614

*(ம. நூ. பா. : 324)*

### இதுவு மது

எட்டுடன் ஒன்றிற்கு இயன்ற போகமாம்
வட்டருந் தசம்தனில் வசியம் மன்னுமே
எட்டுடன் மூன்றுமே இனிய தன்மமாம்
சட்டமாம் துவாதசம் சமஸ்த நன்மையே. 615

*(ம. நூ. பா. : 325)*

*(இ. ள்)* மீதியாக ஒன்று, இரண்டு வந்தால் முறையே, ஏகம், போகமாம்; மீதியாக மூன்று, நான்கு வந்தால் முறையே, புகழும், சௌரியமும் உண்டாகும்; மீதியாக ஐந்து, ஆறு வந்தால் முறையே, தானியம், தனம் கிட்டும்; மீதியாக ஏழு, எட்டு வந்தால் முறையே, சுகமும் மெய்ஞானமும் உண்டாகும்; மீதியாக ஒன்பது வந்தால், போகம் கிட்டும்; மீதியாகப் பத்து வந்தால் அனைத்தும் வசியமாகும்; மீதியாகப் பதினொன்று வந்தால், தர்மங்கள் கைகூடும்; மீதியாகப் பன்னிரண்டு வந்தால் நன்மைகள் கிட்டும்.

### பொருத்தங்கள்

இட்டஎட் டைபனிரெண் டாக்க ஆயம்
ஏற்கும் ஒன்பதோ டீரஞ் சழிவதாம்
மூட்டி மூன்றுடன் எட்டும் யோனியாம்
மூண்ட எட்டுடன் மூவொன்ப தாம்நாள்
வட்ட நான்குடன் முப்பதும் பக்கமாம்
வளரும் ஒன்பதோர் ஏழும் கிழமையாம்

மட்டில் எட்டுடன் ஈராறு ராசியாம்
மத்த ஒன்பது நாலு வங்கிசம்
ஒட்டு நான்குடன் ஒன்பது அங்கிசம்
ஓங்கு மூவொன்ப துக்குநா ளாயுளே. 616
*(1005 b)*

## இதுவுமது

எட்டினில் பன்னிரெண் டாயம்
இகழொன்ப பத்தும் தீதாம்
திட்டமூன் றெட்டில் யோனி
எட்டுமே இனிமூ ஒன்பான்
வட்டமொன் பதிலேழ் வாரம்
வளரொரு நான்கொன் பாங்கிசம்
சட்டம்ஒன் பதினால் சாதி
திதியொன்பான் முப்ப தாமே. 617
*(886 b : 48)*

## கற்பப் பொருத்தம்

அஞ்சுகோல் ஆதி யாக
அதுக்கது ரெண்டும் ஏத்தி
ஈஞ்சது அகலம் நீளம்
இதைக்குழி பெருக்கி எட்டில்
மிஞ்சிலோர் மூன்று ஐந்து
மிகுந்தஏழ் மிகவும் நன்றாம்
வஞ்சமாய் இரண்டும் நான்கும்
வறுமையா றெட்டும் தீதே. 618
*(886 a : 47)*

*(இ. ள்)* ஐந்து கோல்கள் முதலாக இரண்டிரண்டு கோல்களை ஏற்ற அமையும் மனையின் அகல நீளங்களைப் பெருக்கி வரும் குழித்தொகையை எட்டில் வகுக்க வரும் மீதி கற்பமாகும். ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு ஆகிய எண்கள்

மீதியாக வருமானால், மிகுந்த நன்மையாகும். இரண்டு, நான்கு, ஆறு, எட்டு ஆகிய எண்கள் மீதியாக வருமானால், மனைக்குரியவனுக்குத் தீங்கு நேரிடும்.

### பொருத்தங்கள்

மனையும் முழக்கோ லால ளந்து
வந்த குழியின் பேராயம்
அனைய தெட்டி லேபெருக்கிப் பன்னி
ரெண்டினில் கழித்த தாதாயம்
வினையஒன் பதுடன் பெருக்கியே பத்தில்
கழித்த சேடம் அழிவாகும்
இனைய மூன்றுக் கேற்றி எட்டுக்
கீய்ந்துணர் சேடம் நிலையோனி. 619

*(796 : 4)*

### வேறு

மனையைச் சிறுகோ லாலளந்து
வந்த குழியின் பேராயம்
தனையோ ரெட்டால் பெருக்கியீ
ராறதனில் கழிக்க ஆதாயம்
மனையை ஒன்ப தால்பெருக்கி
பத்தில் கழித்த தழிவாகும்
தனைமூன் றேத்தி எட்டீந்து
நின்ற சேடம் நிலையோனி. 620

*(886 a : 43)*

நிலைகொள் ஆயம் எட்டேத்திக் கொண்டு
மூஒன்பதில் கழித்தது நாளாம்
அலைவில் நான்கில் பெருக்கமூ வைந்தில்
கழித்தது பக்கம தென்பார்

இலகுஒன் பானுடன் பெருக்கி ஏழில்
கழித்தது கிழமை என்பார்
இலவில் நான்கில் பெருக்கி ஒன்பதில்
கழித்ததங் கிசம தாமே. 621

### வேறு

நிலைகொள் ஆயம் எட்டேத்தி
நெறிமூ வொன்பது கழித்துநாள்
அலகு நான்கில் பெருக்கியுடன்
மூவஞ்சில் கழித்தது பக்கமதாம்
இலகு ஒன்பா னுடன்பெ ருக்கி
ஏழில் கழித்தது தன்கிழமை
முலடு ஒருநான் கால்பெருக்கி
ஒன்பதால் கழித்த தங்கிசமே. 622

குறிப்பு: **மேற்கண்ட இரண்டு பாடல்களிலும் ஒரே செய்தி கூறப்பட்டுள்ளன என்றாலும் 613 ஆம் பாடல் எழுசீர் விருத்தமாகவும் 614 ஆம் பாடல் அறுசீர் விருத்தமாகவும் இருப்பது இங்குச் சுட்டத்தக்கது.**

### பொருத்தங்கள்

அஞ்சொல் இருபத் தேழினில் பெருக்கி
நூறினில் கழிக்க வாழ்நாள்
செஞ்சொல் லாதாயம் வரினும்சில வானும்
ஆக்கத் தோடு சிறிதழிவு
மிஞ்சு மேனினும் யோனியு நாளுடன்
பக்கம் கிழமைதீ தெனவும்
வஞ்ச மான வஞ்ச கங்கள்
வாழ்நாள் குறையும் மனைக்காகா. 623
*(796 : 6)*

*(இ. ள்)* மனையின் குழியை இருபத்து ஏழால் பெருக்கி, வந்தத் தொகையை நூறால் வகுக்கக் கிடைக்கும் மீதி, **வயது** அல்லது **வாழ்நாள்** எனப்படும். ஆதாயம் வந்தாலும் செலவு வந்தால், ஆக்கதோடு சிறிது அழிவும் உண்டாகும். யோனி, நாள், பக்கம், கிழமை முதலானவை தீயனவாக இருந்தால் தீமையாகும். மனைக்குரியவருக்கு வஞ்சகங்கள் உண்டாகும். வாழ்நாள் குறைவாக இருந்தாலும் மனைக்கு ஆகாது.

### வேறு

அஞ்ச மூவொன் பதிலேற்றி
அதையும் நூலிற் கழிவயது
கஞ்ச நவத்தி னாற்பெருக்கிக்
கழிக்க நாலிற் சாதியதாம்
மிஞ்சு நாலி னாற்பெருக்கி
வியத்தில் கழிக்க இராசியதாம்
மஞ்சு நிகர்த்த குழலாளே !
மயனா ருரைத்த மனைநூலே. 624

*(சி. நூ. பா. : 58)*

### *சாதி, யோனி, வயதுப் பொருத்தம் - பொது*

சாதியா தெனினும் நன்மை
தரும்யோனி ஒத்தை நன்றாம்
பேதியா திரட்டை தீது
பெற்றிடும் ஆயுள் சாத்து
கோதினாற்பா னைந்துக் குள்ளாய்க்
குறைந்திடில் மிகப்பொல் லாது
தாதுசேர் குழலாய் ! பத்துப்
பொருத்தமும் தானும் நன்மை. 625

*(886 a : 61)*

*(இ. ள்)* மனையின் குழித்தொகையை ஒன்பதால் பெருக்கி, நான்கால் வகுக்க வரும் மீதி, **சாதி** எனப்படும்.

நான்கு சாதிகளில் எது வந்தாலும் நன்மையாகும். யோனிகளில் ஒற்றை யோனி நன்மை தரும். இரட்டை தீமையை விளைவிக்கும். மனையின் குழித்தொகையை இருபத்து ஏழால் பெருக்கி, நூறால் வகுக்கக் கிடைக்கும் மீதியான வயதில் நாற்பத்தைந்து வயதிற்குள் இருந்தால் மிகுந்த கெடுதியைத் தரும். இந்தப் பத்துப் பொருத்தங்களை முக்கியமாகப் பார்த்து மனைகோல நன்மை உண்டாகும்.

### சாதி, இராசி, கற்பம்

ஆயம் நவநான் கில்கழித்து
ஆன சாதி ஆயமதை
சேயே ழில்பெருக் கீஈராறில்
சேர கழிக்க தினம்ராசி
ஈயு மாமெட் டதனில்ஈய
கற்பம் மிகவே பொருத்தமதில்
தூய ரெண்டு நாலாறு
சொல்லாய் எட்டைத் துயரொழியே. 626

*(886 a : 46)*

### தேதி, வாரம், நட்சத்திரம், யோகம்

முந்திய முழந்தை ஒன்பதிற் பெருக்கி
முப்பதிற் கழித்ததின் றதுதான்
வந்திடும் தேதி திதியும்மற் றதுவே
வாரமாம் ஏழினிற் கழிக்க
தந்திடு ழத்த எட்டினிற் பெருக்கி
சார்ந்தமூ ஒன்பதிற் கழிக்க
சொந்தமாம் நட்சத் திரமொடு யோகம்
சொல்லும்அந் நாலுணர்ந் தோரே. 627

*(886 a : 47)*

### கரணம், இராசி, தெய்வம்

பரவிய முழத்தை ஏழினிற் பெருக்கி
பத்தினோ டொன்றினிற் கழித்து
கரணமென் றுரைப்பர் நான்கினிற் பெருக்கி
காட்டுமீ ராறினிற் கழிக்க
பெருகுமி ராசி மற்றும்ஒன் பதினிற்
பெருக்கிஐந் தினிற்கழித் திடவே
வருவது குறிஞ்சி யாதியைந் திணைக்கு
மன்னராம் தெய்வத வகையே. 628

*(886 b : 48)*

*(இ. ள்) மனையின் நீள அகலங்களை சரியாக அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை ஏழில் பெருக்கி, பதினொன்றில் வகுத்த மீதி* ***கரணமாகும்.*** *நான்கில் பெருக்கி, பன்னிரண்டில் வகுத்த மீதி* ***இராசியாகும்.*** *ஒன்பதில் பெருக்கி, ஐந்தில் வகுத்த மீதி* ***தெய்வமாகும்.*** *மீதியை குறிஞ்சியை முதலாகக் கொண்டு அந்தந்தத் திணைகளின் தெய்வங்களைக் கூற வேண்டும்.*

*குறிப்பு: குறிஞ்சித் திணைக்கு முருகன்; முல்லைத் திணைக்குத் திருமால்; மருதத் திணைக்கு இந்திரன்; நெய்தல் திணைக்கு வருணன்; பாலைத் திணைக்குக் கொற்றவை தெய்வங் களாகும்.*

### ஆயம்

திருவளர் மனையை அகமது செய்ய
சிற்பநூ லிதனையும் கேளீர் !
உரியவன் கைச்சாண் நாலதாய்க் கொண்டால்
ஓர்முழக் கோலென உரைப்பார்
மருவிய மனையை நாற்றிசை அளந்து
மகிழ்ச்சியாய்க் குழியினைப் பெருக்கி
அருமையாம் குழியை எட்டினுக் கீய
ஆயமாம் என்றிதை அறியே. 629

*(இ. ள்)* செல்வம் பெருக வேண்டிய மனையில் வீட்டினை அமைக்கச் சிற்பநூல் கூறும் செய்திகளைக் கேட்பீர்களாக ! மனைக்கு உரியவனின் கைச்சாணால் நான்கு சாண்கள் கொண்ட கோலை **முழக்கோல்** என்று கூறுவார்கள். அத்தகைய முழக்கோலைக் கொண்டு மனையின் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளின் நீளத்தை அளந்து, நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை எட்டில் வகுக்க, ஆயம் என்பதை அறிவாயாக. மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழியை எட்டால் வகுக்க, மீதி எண் ஆயம் ஆகும். மீதி இல்லையானால் மீதி எட்டு என்று கொண்டு, பலன் காண வேண்டும்.

ஒன்றுக்கு-துவசம்-கருடகற்பம்-இந்திரன் - புண்ணியவான்
இரண்டுக்கு-தூமம்-புறாகற்பம்-அக்கினி - மிருத்துப்பிரதம்
மூன்றுக்கு-சிம்மம்-சிங்க கற்பம்-இயமன் - விஷபிரதம்
நான்கிற்கு-சிவன்-சுவான கற்பம்-நிருதி - ரோகப்பிரதம்
ஐந்திற்கு-ரிஷபம்-பசு கற்பம்-வருணன் - இராட்சதபிரதம்
ஆறுக்கு-தானம்-காக்கை கற்பம்-வாயு - செல்வப்பிரதம்
ஏழுக்கு-கஜம்-யானை கற்பம்-குபேரன் - சுபப்பிரதம்
எட்டுக்கு-காகஆயம்-கழுதை கற்பம்-ஈசானியன்-நிஷ்பலம்

**கற்பம்**

மன்னிய முழமாம் தொகையினை எட்டில்
வகுத்துறு சேடமே கருப்பம்
மின்னிய ஒன்று மூன்றுடன் ஏழும்
ஏழ்வியந் தரசுநன் றாகும்
துன்னிய இரண்டு நான்குமோ ரெட்டுந்
துணிமிகு வறுமையுண் டாகும்
பன்னிய இருமூன் றாகிட துயராம்
பகர்நறும் பனிமொழி அனமே. 630

*(886 b : 3)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை எட்டால் வகுக்க வரும் மீதி எண் கற்பம் ஆகும். ஒன்று, மூன்று, ஏழு ஆகிய எண்கள் மீதியாக அமையுமானால் நன்மை உண்டாகும். இரண்டு நான்கு, எட்டு ஆகிய எண்கள் அமையுமானால் வறுமை உண்டாகும். ஆறு மீதியாக அமைந்தால் துன்பம் உண்டாகும் என்பதை மனம் பொருந்திய குளிர்ச்சியான மொழியினைப் பேசும் அன்னநடையினைப் பயிலும் பெண்ணே! அறிவாயாக.

குறிப்பு: மீதி இல்லையானால், மீதி எட்டு என்று கொண்டு பலன் காண வேண்டும்.

### கற்பம்

சாணான்கு[1] கோலாகத் தப்பாமே நான்கெல்லை
கோணாம லேயளந்து குழிமாறி - நாணாமல்
இப்புவியில் மாதே! இருநான்கி லேகழிக்கக்
கற்பத்தின் பலனைக் கேள். 631

*(886 a : 41)*

*(இ. ள்)* மனைக்கோலும் நீள அகலங்களைச் சரியாக அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை எட்டால் வகுக்கக் கிடைக்கும் மீதி **கற்பம்** எனப்படும்.

### கற்பத்தின் பலன்

அஞ்சில் அரசாள்வார் ஆறில் வருந்துன்பம்
மிஞ்சிய ஒன்றுமூன் றேழுபுகழாம்-மிஞ்ச
நாலெட்டு ரெண்டாகில் நன்மையொரு சத்துமில்லை
உகத்தார்க் கென்னூல் உரை. 632

*(886 a : 42)*

*(இ. ள்)* குழியின் தொகையை எட்டால் வகுக்கக் கிடைக்கும் மீதி எண் ஐந்தாக இருக்க, மனைக்குரியவர் அரசனைப் போன்ற சிறப்பினைப் பெறுவர்; மீதிவரும் எண் ஆறாக இருக்க மனைக்குரியவருக்குத் துன்பம் வந்து சேரும். மீதியாக ஒன்று, மூன்று, ஏழு ஆகிய எண்கள் வருமானால்,

1. நாலோர்.

புகழ் வந்து சேரும். நான்கு, எட்டு, இரண்டு ஆகிய எண்கள் மீதியாக வந்தால், மனைக்குரியவனுக்கு எந்தவித நன்மையும் கிட்டாது என்பதை என்னுடைய நூலின் வழி கண்டு உரைப்பாயாக.

குறிப்பு: மீதி இல்லையானால், மீதியை, எட்டு எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.

## ஆதாயப்பொருத்தம் - பலன்கள்

தாம யோகமும் போகசந் தானமும்
தர்மவீ ரியமும் தானிய மேதனம்
ஆமை நல்ல சுகர்தர்ம ஞானமும்
கீர்த்தியும் ஆழி போல்சம் பத்தாம்
வாமை என்றும் வழிந்திட்ட மேதனம்
வழுத்திட் டேன்நான் ஆதாய பலங்களும்
நாமை கன்றுதான் வீமைசேர் பாதத்தை
நாடியே பனிரெண்டும் பலன்சொன் னேனே.
*(886 c : 63)*

*(இ. ள்)* யோகம், போகம், சந்தானம், தர்மம், வீரியம், தானியம், தனம், நல்ல சுகம், தர்மஞானம், கீர்த்தி, சம்பத்து ஆகியவை ஆதாயம் பன்னிரண்டிற்கும் பலன்கள் என்பதை வீமேஸ்வரன் பாதத்தைப் பணிந்து எடுத்துரைத்தேன்.

## இதுவுமது

பகர்தரு முழத்தை எட்டில் பெருக்கிப்
பனிரண்டில் கழித்தது சேடம்
புகலுமா தாயம் ஒன்றுமூன் றிரண்டேழ்
பொருந்துமொன் பான்பதி னொன்றும்
திகழிரு நான்கு நான்குமுன் நான்கும்
செயமிகு செல்வமுண் டாகும்
திகழுமோர் ஐந்துடன் ஒருபதும் ஆறு
நெடுந்துய ராமென உரையே. 634
*(886 b : 4)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை எட்டில் பெருக்கி பன்னிரண்டால் வகுக்க வந்த குழித்தொகையை எட்டில் பெருக்கி பன்னிரண்டால் வகுக்க வந்த மீதி **ஆதாயம்** எனப்படும். ஒன்று, இரண்டு, ஏழு, ஒன்பது, எட்டு, நான்கு, பன்னிரண்டு ஆகிய எண்கள் மீதியாக அமையுமானால், வெற்றியும் செல்வமும் கிடைக்கும். ஐந்து, பத்து, ஆறு ஆகிய எண்கள் மீதியாக அமையுமானால் மிகுந்த துன்பம் உண்டாகும் என்று கூறுவாயாக!

குறிப்பு: மீதி இல்லையானால், மீதி, பன்னிரண்டு என்று கொண்டு பலன் காண வேண்டும்.

## இதுவுமது

பூமலி நான்குசாண் பொலிந்த கோலினைத்
தேமலி மனைதனைக் கெல்லை தேடிய
தாமரி பூருவம் தழைத்த உத்தமம்
காமலி யாயமாம் கணக்கின் சீரதே. 635

*(இ. ள்)* எசமான் சாணால் நான்கு சாண் கோல் கொண்டு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு இந்நான்கு திக்கும் அளந்து இரு தொகையையும் குழிமாறித் தொகையை ஆயமாய் வைத்துக் கொண்டு திசைப் பொருத்தத்திற்கும் பார்க்க வேண்டுயது. *(சி. நூ. பா. : 18)*

சீர்பெறும் ஆயத்தை சேர எட்டினிற்
கூர்தர வேற்றிநற் குலவு பன்னிரண்
டோதரக் கழித்திட வொன்றி லக்கமே
ஏருமா தாயமென் றிசைத்த தந்தையே. 636

*(இ. ள்)* ஆயத்தை எட்டிற் பெருக்கி வந்த தொகையைப் பன்னிரண்டிற் கழிக்க, பன்னிரண்டுக்குள்ளாக வந்தது ஆதாயம் என்றறியவும். *(சி. நூ. பா. : 19)*

## ஆதாயப் பொருத்தம்

ஓவிய மொன்றிரண் டேக போகமாம்
மேவிய திரிசதும் கீர்த்தி சௌரியம்
தாவுமைந் தாறினிற் றானி யம்தனம்
ஏஷம்ஏ ழெட்டினிற் சுகமாமெய்ஞ் ஞானமே. 637

*(இ. ள்)* ஆதாயம் ஒன்று, இரண்டு வந்தால், ஏகபோகமாய் நடக்கும். மூன்று, நான்கு வந்தால் கீர்த்தியும் சௌரியமும் நடக்கும். ஐந்து, ஆறு வந்தால் தனதானியம் உண்டாகும். ஏழு, எட்டு வந்தால் சுகமும் மெய்ஞ்ஞானமும் நடக்கும். *(சி. நூ. பா. : 20)*

எட்டுடன் ஒன்றினிற் இயன்ற போகமாம்
மட்டருந்த சந்தனில் வசியம் மன்னுமே
இட்டவே காதசி இனிய தர்மமாம்
சட்டமாம் துவாதசி சமஸ்த நன்மையே. 638

*(இ. ள்)* ஒன்பது வந்தால் - மிகுந்த போக பாக்கியம். பத்து வந்தால் - சகல காரியங்களும் வசியமாகும். பதினொன்று வந்தால் - தரும சிந்தை உண்டாகும். பன்னிரண்டு வந்தால் சமஸ்தமும் உத்தம பலனாய் நடக்கும். *(சி. நூ. பா. : 21)*

## ஆதாயப் பொருத்தம் - பலன்கள்

வெல்லிடும் யோகம் போகம்
காத்தவீ ரியஞ்சு கந்தான்
புல்லிடும் தரும ஞானம்
சத்தியம் பொருளில் லாபம்
சொல்லிடும் இலாபம் நன்றாம்
தொகை ஐந்தோ டாரும் பத்தும்
இல்லமி இலாபம் வந்தால்
இடர்கள்சத் துருவி ரோதம். 639

*(886 a : 55)*

(இ. ள்) குழியை எட்டால் பெருக்கி, பன்னிரண்டால் வகுக்க வரும் மீதி எண்களாக ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஏழு, எட்டு, ஒன்பது, பதினொன்று, பன்னிரண்டு ஆகிய எண்கள் வருமானால், முறையே யோகம், போகம், வீரியம், சுகம், தர்ம ஞானம், சத்தியம், பொருளில் இலாபம் முதலான நன்மைகள் கிடைக்கும். மீதி எண்களாக ஐந்து, ஆறு, பத்து, பதினொன்று ஆகிய எண்கள் வருமானால், இலாபம் கிடைத்தாலும் துன்பங்கள், பகைவர் விரோதம் முதலான துன்பங்கள் நேரிடும்.

**விரயப் பொருத்தம்**

சொல்வதே ஒன்றதற்கே தீயாம் ரெண்டு
சுகந்தவிர்த்தி மூன்றுக்கே இலாபம் சொல்வாம்
புல்லியதோர் நாலதற்கே புத்திர விர்த்தி
புகழுயர்ந்த ஐந்ததற்கே ஸ்திரிகள் ஈனம்
சொல்லுயர்ந்த ஆறுக்கே விசயம் ஏழு
தீதெனவாம் எட்டுக்கு ஸ்ரீயும் விரோதி
வல்லமைசேர் ஒன்பதற்கே புத்திர நாசம்
வளர்பத்தும் ஞானமென மயன்சொன்னாரே.640
*(742 : 110)*

(இ. ள்) மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை, ஒன்பதால் பெருக்கி, பத்தால் வகுக்கக் கிடைக்கும் மீதி விரயம் அல்லது அழிவு எனப்படும். மீதியாக ஒன்று வந்தால், தீயினால் பயம் உண்டாகும்; மீதியாக இரண்டு வந்தால், விருத்தி ஏற்படும்; மீதியாக மூன்று வந்தால், இலாபம் உண்டாகும்; மீதியாக நான்கு வந்தால், புத்திரர்கள் பிறப்பார்கள்; மீதியாக ஐந்து வந்தால், மனையிலுள்ள பெண்களுக்குத் துன்பம் உண்டாகும்; மீதியாக ஆறு வந்தால், வெற்றி கிடைக்கும்; மீதியாக ஏழு வந்தால், தீமைகள் உண்டாகும்; மீதியாக எட்டு வந்தால்,

மனைவியும் எதிரியாவாள்; மீதியாக ஒன்பது வந்தால், புத்திரர்களுக்கு அழிவுண்டாகும்; மீதியாக பத்து வந்தால், ஞானம் வரும்.

குறிப்பு: *மீதி வரவில்லையென்றால், பத்தை மீதியாகக் கொண்டு கணக்கிடவேண்டும்.*

## விரயம்

நன்மையாம் ஆயத்தை நவத்தில் தாக்கியே
பொன்னிய பத்தினில் பொருந்த நீக்கினால்
அந்நிலை செலவதாம் அறியல் ஒன்றினில்
குன்னிய அல்இரண்டு ஏத்தங் குன்றுமே. 641

*(ம. நூ. பா. : 326)*

(இ. ள்) மொத்தக் குழியை ஒன்பதால் பெருக்கி, வந்த தொகையைப் பத்தால் வகுக்க மீதி வந்த எண் செலவாகும். மீதியாக ஒன்று வந்தால் உள்ள செல்வம் எல்லாம் குறைந்து போகும். மீதியாக இரண்டு வந்தால் ஏற்றம் குன்றும்.

## இதுவுமது

குன்றிட மூன்றினில் குலவும் நற்சுகம்
வென்றிசேர் நாலினில் விளங்கும் புத்திரர்
ஒன்றிவை ஐந்தினில் ஓங்கு நற்செயம்
என்றனர் தரித்திரம் ஏழுக் கென்னவே. 642

*(ம. நூ. பா. : 327)*

(இ. ள்) மீதியாக மூன்று வந்தால், நற்சுகம் கிட்டும். மீதியாக நான்கு வந்தால், புத்திரர்கள் சிறப்புடன் விளங்குவர். மீதியாக ஐந்து வந்தால், வெற்றிகள் கிட்டும். மீதியாக ஏழு வந்தால், தரித்திரமாகும்.

குறிப்பு: *மீதியாக ஆறு வந்தால் என்ன பலன் என்று கூறப் படவில்லை.*

என்னவே எட்டினில் இலக்குமி வாசமாம்
பன்னிய நவத்தினிற் பாலர் ஆவிபோம்
முன்னிய தசமதில் உத்த மம்தரும்
மின்னுமெங் கோனெனக் எடுத்து ரைத்ததே. 643
*(ம. நூ. பா. : 328)*

*(இ. ள்)* மீதியாக எட்டு வந்தால், இலட்சுமி வாசம் செய்வாள் மீதியாக ஒன்பது வந்தால், புத்திரருக்கு அழிவு நேரிடும். மீதியாகப் பத்து வந்தால், மிகுந்த சிறப்புண்டாகும்.

**விரயப் பொருத்தம் - பலன்**

சொன்னேன் எங்கள் விரய பலன்களும்
சொல்லும் விருத்தியும் சம்பத்தும் ஆயுசும்
பொன்னினும் புத்திர சம்பத்து மேசெயம்
பொருளும் தானியம் தானே மிகுந்திடும்
என்னும் நல்லதோர் இல்லாச்சம் பத்து
எய்திடும் லட்சுமி கடாக்ஷம் தானதும்
வண்ணங்கள் வீமேசர் பாதத்தை வாழ்த்தி
இறைஞ்சியே யோனி பலனையும் பார்த்திடே. 644
*(886 c : 64)*

*(இ. ள்)* விருத்தி, சம்பத்து, ஆயுள், பொன், புத்திர சம்பத்து, வெற்றி, பொருள், தானியம், லட்சுமி கடாட்க்ஷம் ஆகியவை இல்லாமல் இருப்பதே விரய பலன்களாகும் என்பதை வீமேஸ்வரன் பாதத்தைப் பணிந்து எடுத்துரைப்பதைப் பார்ப்பாயாக.

**இதுவுமது**

உரைதரு முழத்தை ஒன்பதிற் பெருக்கி
ஒருபதிற் கழித்துறு சேடம்
விரையம் தாகும் இரண்டுபத் தாறு
மேவிடின் மரணமுண் டாகும்

நிரையிரு நான்கு நான்குமே பிணியாம்
நிகழ்த்திய ஒன்றுத் தமமாம்
புரைதரும் ஒன்பான் ஐந்துமூன் றேழும்
புகழ்பல சுகமிருந் தானே. 645

*(886c : 5)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, பத்தால் வகுத்துக் கிடைக்கும் மீதி **விரயம்** எனப்படும். இரண்டு, பத்து, ஆறு ஆகிய எண்கள் மீதியாக வந்தால், மரணம் உண்டாகும். எட்டு, நான்கு ஆகிய எண்கள் மீதியாக வந்தால், நோய் உண்டாகும். ஒன்று மீதியாக வந்தால், சிறந்த பலன்கள் கிட்டும். ஒன்பது ஐந்து, மூன்று, ஏழு ஆகிய எண்கள் மீதியாக வந்தால் மிகுதியான சுப விரயங்கள் உண்டாகும்.

குறிப்பு: மீதி இல்லையானால், மீதி பத்து என்று கொண்டு பலன் காண வேண்டும்.

## இதுவுமது

ஏழொன்பான் ஐந்து மூன்று
ஈந்தபூ ரணசெ யம்தான்
சூழும்புத் திரர்கள் லாபம்
வீர்யம் சொல்லிய நன்றாம்
பாழிலொன் றிரண்டு நான்கா
றெட்டுடன் பத்து கொண்டால்
வீழ்கனல் அசனம் சார்நோய்
விரோதம் களத்திர நாசம். 646

*(886a : 56)*

*(இ. ள்)* குழித்தொகையை ஒன்பதால் பெருக்கிப் பத்தால் வகுக்கக் கிடைக்கும் மீதி எண்களாக ஏழு, ஒன்பது, ஐந்து, மூன்று ஆகிய எண்கள் அமையுமானால், முழுமையான வெற்றி, புத்திரர்களால் இலாபம்,

முதலானவை, விரயத்துடனிருப்பினும் நன்மையாக நடக்கும். ஒன்று, இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து ஆகிய எண்கள் மீதியாக அமையுமானால் தீயினால் துயரம், மனவருத்தம், நோய், பகை, களத்திர அழிவு முதலியவற்றால் துன்பம் உண்டாகும்.

## திதிப்பொருத்தம்

திதிபல னதுகேள் பிரதமை அதுவே
தீதெனும் துவிதியைநன் மையுமாம்
விதிபெறு திருதியை உத்தமம் சதுர்த்தி
மேவிய தீதுபஞ் சமியும்
துதிபலன் சஷ்டி கலிசத் தமியும்
சுகமுமட் டமியுமே துக்கம்
சதிபெறு நவமி மத்திமம் தசமி
சாத்திய நலமென்று அறையே. 647

*(742 : 117)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, பதினைந்தில் வகுக்க வரும் மீதி திதி எனப்படும்; மீதியாக ஒன்று வந்தால், **பிரதமை**. இதன் பலன்- துன்பம் உண்டாகும்; மீதியாக இரண்டு வந்தால், **துவிதியை**. இதன் பலன் - நன்மை கிடைக்கும்; மீதியாக மூன்று வந்தால், **திருதியை**. இதன் பலன் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்; மீதியாக நான்கு வந்தால், **சதுர்த்தி**. இதன் பலன் - துனபத்தைத் தரும்; மீதியாக ஐந்து வந்தால், **பஞ்சமி**. இதன் பலன் -நன்மை கிடைக்கும்; மீதியாக ஆறு வந்தால், **சஷ்டி**. இதன் பலன் - நன்மை உண்டாகும்; மீதியாக ஏழு வந்தால், **சப்தமி**. இதன் பலன் - சுகம் உண்டாகும்; மீதியாக எட்டு வந்தால், **அஷ்டமி**. இதன் பலன் - துக்கம் ஏற்படும்; மீதியாக ஒன்பது வந்தால், **நவமி**. இதன் பலன் - சுமாரான நன்மைகள் கிடைக்கும்; மீதியாகப் பத்து வந்தால், **தசமி**. இதன் பலன் நன்மைகள் கிடைக்கும்.

## இதுவுமது

சாத்திய ஏகா தசிமத் திமமாம்
தருதுவா தசியுமே நன்றாம்
போத்திய திரையோ தசியுத் தமுமாய்
புகலுவேன் இன்னமும் புதிதாய்
ஏத்திய சதுர்தசி யும்அது தீதாம்
இயல்அமா வாசையுத் தமுமாம்
கோத்ததோ பாடல் திதிபலன் இதுவாய்க்
கூறிய மயனுமங் குரையே. 648

*(742 : 42)*

(இ. ள்) மீதியாகப் பதினொன்று வந்தால், **ஏகாதசி**. இதன் பலன் - சுமாரான நன்மைகள் உண்டாகும்; மீதியாகப் பன்னிரண்டு வந்தால், **துவாதசி**. இதன் பலன் - நன்மை உண்டாகும்; மீதியாகப் பதிமூன்று வந்தால் **திரயோதசி**. இதன் பலன் - தீமை உண்டாகும். மீதியாகப் பதிநான்கு வந்தால், **சதுர்தசி**. இதன் பலன் - தீமையாகும்; மீதியாகப் பதினைந்து வந்தால், **அமாவாசை**. இதன் பலன் - சண்டை விளையும்.

குறிப்பு: பதினைந்தால் வகுக்க, மீதி வரவில்லையானால், பதினைந்தை மீதியாகக் கொண்டு கணக்கிடவேண்டும். இப்பாடல், தேய்பிறைத் திதிகளுக்கு மட்டுமே பலன் கூறுவதாக அமைந்துள்ளது. வளர்பிறைத் திதிகளைப் பற்றிய குறிப்புகள் இல்லை.

## இதுவுமது

திருமலி முழத்தை நவமதிற் பெருக்கித்
திகழொரு முப்பதி ரித்து
மருவிய சேடம் பிரதமை முதலா
வருந்திதி இரண்டுமூன் றின்பம்
கருதிய பதிமூன் றொடுபனி ரண்டும்
கல்வியுண் டாம்பதி னைந்தும்
பெருகிய சுகமீ ரைந்துடன் ஐந்தும்
பெட்புறு நன்மையுண் டாமே. 649

*(886 b : 12)*

*(இ. ள்) மனையின் நீள அகலங்களைப பெருக்கி வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, முப்பதால் வகுத்துக் கிடைக்கும் மீதி திதி எனப்படும். இரண்டு (துவிதியை), மூன்று (திருதியை), மீதியாக வந்தால் இன்பம் உண்டாகும். பன்னிரண்டு (துவாதசி), பதிமூன்று (திரையோதசி), மீதியாக வந்தால் கல்விநலம் பெருகும். பதினைந்து (பௌர்ணமி), பத்து (தசமி), ஐந்து (பஞ்சமி) மீதியாக வந்தால் நன்மைகள் விளையும்.*

குறிப்பு: ஒன்று முதல் பதினைந்து வரை உள்ளவற்றை வளர்பிறைத் திதிகளாகவும். பதினாறு முதல் முப்பது வரை மீதியாக வந்தவற்றைத் தேய்பிறைத் திதிகளாகவும் கணக்கில் கொண்டு பலன் கூற வேண்டும். பிரதமை முதலாக இத்திதிகளைக் கணக்கிடவேண்டும். மீதி வரவில்லையென்றால், முப்பதை மீதி எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.

## திதி

உற்றிடு திதியின் முப்பதும் ஆறும்
ஒன்பதும் மத்திம மாகும்
மற்றிரு நான்கு பதிநான் குடனே
வருபதி னொன்றுடன் ஒன்றும்
சுற்றிய பகையுண் டாகியே வினையும்
சூழ்ந்திடும் இத்தொகை தன்னில்
வெற்றிமூ வைந்தும் சுக்கில மாகும்
மேலுள தபரம மாமே. 650

*(886 b : 13)*

*(இ. ள்) முப்பது (அமாவாசை), ஆறு (சஷ்டி), ஒன்பது (நவமி) ஆகியவை மீதியாக வந்தால், சுமாரான பலன்கள் கிட்டும். எட்டு (அஷ்டமி), பதினான்கு (சதுர்தசி), பதினொன்று (பிரதமை) ஆகியவை மீதியாக வந்தால், பகையுண்டாவதுடன் தீவினையும் உண்டாகும். மீதியாக பதினைந்து மீதி வரும் வரை வளர்பிறைத் திதிகளையும் அதற்கு மேல் வரும் மீதி எண்கள் தேய்பிறைத் திதிகளையும் குறிக்கும்.*

**இதுவுமது**

என்னுமுன் னாயத்தை ஏய்ந்த ஒன்பதிற்
கன்னிய முப்பதிற் கழிக்கச் சேடமே
நன்னிய முதற்றிதி நவமி ரண்டினில்
அன்னிய திரிதிகை யணுகும் நற்செயம். 651

*(இ. ள்)* ஆயத்தை ஒன்பதிற் பெருக்கிப் பூர்வ பக்ஷம் பதினைந்தும், அமரபக்ஷம் பதினைந்தும்ஒன்றாகச் சேர்த்து ஒன்பதிற் பெருக்கிய தொகையை முப்பதிற் கழிக்க, அதற்குள்ளாக முன் பதினைந்து வரைக்கும் பூர்வபக்ஷத்திதி, பதினைந்துக்கு மேல் முப்பதி வரையில் அமரபக்ஷத்திதி. அதன்பலன் ஒன்றுக்குப் பிரதமை திதி உத்தமம். இரண்டுக்குத் துதிகை நன்மையுண்டாம். மூன்றுக்குத் திரிதிகை ஜெயமுண்டாம். *(சி. நூ. பா. : 40)*

**இதுவுமது**

சயமிலை சதுர்த்தியைச் சார்ந்த பஞ்சமி
நயமுள சிறுவராம் நந்தை யாயுளாம்
வயமுள சஷ்டியேல் வயங்கு முற்பலன்
வியம்பிணி நவந்தனில் நாசம் சாகுமே. 652

*(இ. ள்)* நாலுக்குச் - சதுர்த்தி அபஜெயமாம். ஐந்துக்குப் பஞ்சமி. புத்திர சம்பத்துண்டாம். ஆறுக்கு - சஷ்டி. புத்திர விருத்தியுண்டாம். ஏழுக்குச் சப்தமி, அதனால் நல்ல போக பாக்கியமுண்டாம். எட்டுக்கு - அஷ்டமி, அந்த மனையில் எந்நாளும் வியாதியே பெருகும். ஒன்பதுக்கு - நவமி, அந்த மனை தீபமில்லாமல் பாழடைந்து போகும். *(சி. நூ. பா. : 41)*

**இதுவுமது**

சார்தசம் பாக்கியம் தங்குமே காதசம்
சீரு மத்திமந் துவாதசஞ் செம்மலாம்
பார்திரை யோதசி பகரிற்சம் பத்ததாம்
ஓர்பதி னான்கதேல் நாசம் சாருமே. 653

(இ. ள்) பத்துக்குத் - தசமி. அதனால் பாக்கியம் உண்டாகும். பதினொன்றுக்கு - ஏகாதசி அதனாலந்த மனையில் கோபமும் சிறுமையும் உண்டாகும். பன்னிரண்டிற்குத் துவாதசி. அதனால் அன்ன வஸ்திரம் குறைவில்லாமல் நடக்கும். பதிமூன்றுக்குத் திரயோதசி, அதனால் நாளுக்கு நாள் சம்பத்துப் பெருகும். பதினான்குக்குச் சதுர்தசி. அதனால் அந்த மனை பாழடைந்து போகும். *(சி. நூ. பா. : 42)*

**இதுவுமது**

ஏறிய பூரணை யாகில் உத்தமம்
கூறிய குருவுமேற் கொள்கை யாமிதில்
ஏறிய விருகதிர் சேர வோர்திதி
வேறிய விலையென விளம்பி னாரரோ. 654

(இ. ள்) பதினைந்துக்குப் பௌர்ணமி. அதனால் எல்லாக் காரியமும் உத்தம பலனாய் நடக்கும். பதினைந்துக்கு மேல், பதினாறு முதல் முப்பது வரை அமரபக்ஷத் திதி. அதற்குப் பூர்வ பக்ஷப் பிரகாரம் நடக்கும். அதற்குமேல் இல்லை. *(சி. நூ. பா. : 43)*

**இதுவுமது**

ஒன்றுநான் கிரண்டும் எட்டும்
ஒன்பது பதிநான் காக
நின்றிடில் பக்கம் தீதாம்
நிலைவலி கொண்ட பக்கம்
கண்டிடில் மிகவும் தீதாம்
கலைவளர் பக்கத் தேனும்
சென்றபிற் பக்கத் தேனும்
செப்பிய இரட்டை தீதே. 655

*(886 a : 58)*

(இ. ள்) மனையின் நீள அகலங்களைச் சரியாக அளந்து, பெருக்கி வரும் குழித்தொகையை ஒன்பதால் பெருக்கி, முப்பதால் வகுக்க வரும் மீதி திதி எனப்படும். மீதியாக ஒன்று, நான்கு, இரண்டு. எட்டு, ஒன்பது, பதினான்கு ஆகிய எண்கள் வந்தால், அவை முறையே பிரதமை, சதுர்த்தி, துவிதியை, அஷ்டமி, நவமி, சதுர்தசி ஆகிய திதிகளாகும். இவை தீமையைத் தருவனவாகும். தேய்பிறையில் இத்திதிகள் மிகுந்த தீமையை விளைவிக்கும். வளர்பிறையாக இருப்பினும் தேய்பிறையாக இருப்பினும் இரட்டையாக வரும் திதிகள் பொதுவாகத் தீமையை விளைவிப்பனவாகும்.

**வாரப் பொருத்தம்**

வாரமது ஏழுக்குப் பலனே சொல்வேன்
வருமிரவி மத்திமமாம் பயமுண் டென்பர்
சீருயர்ந்த சோமனுக்கே மனையாள் விர்த்தி
செவ்வாய்க்குத் தனநாசம் செப்பு மல்லால்
சேருபுதன் ஆரோக்கியம் குருவுக் கேதான்
பெருகியதோர் புத்திரரும் விருத்தி யாகும்
ஏர்சிறந்த வெள்ளிக்குச் சித்தி யுண்டு
இகழ்சனிக்கு மத்திமமாம் இயம்பி னேனே. 656
*(742 : 111)*

(இ. ள்) மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, ஏழில் வகுக்கக் கிடைக்கும் மீதி வாரம் எனப்படும். மீதியாக ஒன்று வந்தால், **ஞாயிற்றுக்கிழமை**. இதன் பலன் பயம் உண்டாகும்; மீதியாக இரண்டு வந்தால், **திங்கட்கிழமை**. இதன் பலன் பல மனைவியர் கிடைப்பர்; மீதியாக மூன்று வந்தால், **செவ்வாய்க்கிழமை**. இதன் பலன் செல்வத்திற்கு அழிவுண்டாகும்; மீதியாக நான்கு வந்தால், **புதன்கிழமை**. இதன் பலன் உடல் ஆரோக்கியம் சிறப்புடன் விளங்கும்; மீதியாக ஐந்து வந்தால், **வியாழக்கிழமை**. இதன் பலன்

புத்திரர்கள் பிறப்பார்கள்; ஆறு மீதியாக வந்தால், **வெள்ளிக் கிழமை.** இதன் பலன் காரிய சித்தி உண்டாகும். மீதியாக ஏழு வந்தால், **சனிக்கிழமை.** இதற்கு மத்திமமான பலன் உண்டாகும்.

குறிப்பு: மீதி எதுவும் வரவில்லையென்றால், ஏழு எனக்கொண்டு கணக்கிடவேண்டும்.

## இதுவுமது

சாரமுன் னாயத்தைத் தனித்த ஒன்பதில்
ஏரவே பெருக்கி ஏழுக்கீ மீதியை
வாரமாம் தினகரன் வருங்கு ரோதமே
சேரவே சோமமனிற் செழிப்புண் டாகுமே. 657

*(சி. நூ. பா. : 34)*

*(இ. ள்)* ஆயத்தை ஒன்பதிற் பெருக்கி, ஏழிற்கு ஈய்ந்த மிகுதி வாரம். ஒன்றுக்கு - ஆதிவாரம், அதனால் அந்த மனையில் எந்நாளும் குரோதம் உண்டாகும். இரண்டிற்குச் சோமவாரம், அதனால் நாளுக்கு நாள் செழித்து அதிக சந்தோஷம் உண்டாகிவரும்.

ஆகுமங் காரகன் அர்த்த நாசமாம்
சேகரம் புந்தியிற் சேர்ச வுக்கியம்
வாகதாங் குருவினில் மன்னும் புத்திரர்
சோகந்தீர் சுங்கனிற் சொல்லும் நன்மையே. 658

*(இ. ள்)* மூன்றுக்கு -மங்கள வாரம், அதனால் பழம்பொருளும் புதுப்பொருளுமில்லாமல் அற்றுப் போகும். நாலிற்குப் புதவாரம், அதனால் இலட்சுமி வாசமாயிருப்பாள். ஐந்திற்குக் குருவாரம், அதனால் புத்திர சம்பத்துண்டாயிருக்கும். ஆறுக்குச் சுக்கிரவாரம், அதனால் சகல காரியமும் நன்மையாய் நடக்கும். *(சி. நூ. பா. : 35)*

### இதுவுமது

இலகிய முழத்தை நவமதிற் பெருக்கி
ஏழினிற் கழித்ததுறு சேடம்
குலவிய அருக்கன் ஆதியாம் வாரம்
கொள்ளுக மதிபுதன் புகரோன்
நலமிக பெருகும் குருமக வுண்டாம்
நவின்றடு சேய்தன நாசம்
நிலவுறும் இரவி சனியுமத் திமமாம்
நெரிசுரிங் குங்குழற் திருவே ! 659

*(886a : 8)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை ஒன்பதால் பெருக்கி, ஏழால் வகுத்துக் கிடைக்கும் மீதி வாரம் எனப்படும். இதை ஞாயிற்றுக் கிழமையை முதலாகக் கொண்டு கணக்கிட வேண்டும். இரண்டு, நான்கு, ஆறு (திங்கள், புதன், வெள்ளி) நன்மைகள் மிகுதியாக உண்டாகும். ஐந்து மீதியாக வந்தால் (வியாழன்), புத்திரர் தோன்றுவர். மூன்று (செவ்வாய்) மீதியாக வந்தால், பொருள் அழிவு உண்டாகும். ஒன்று, ஏழு (ஞாயிறு, சனி) மீதியாக வந்தால், நன்மையும் தீமையுமான பலன்கள் கலந்து வரும்.

குறிப்பு: மீதி இல்லையானால், மீதி ஏழு என்று கொண்டு பலன் காண வேண்டும்.

### இதுவுமது

வாரநாள் கொள்ளும் போது
மதிபுதன் வியாழம் வெள்ளி
சீரிதாய் சிறப்புண் டாகும்
சேய்சனி இரவி வந்தால்

பாரினில் அத்தம் நாசம்
பலபிணி கலகம் சாரும்
கூறிய சென்ம வார
மாகிடில் குணமுண் டாமே. 660
*(886 a : 57)*

*(இ. ள்)* மனையை அளந்து கண்ட குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, ஏழால் வகுக்கக் கிடைக்கும் மீதி வாரமாகும். மீதியாக இரண்டு, நான்கு, ஐந்து, ஆறு ஆகிய எண்கள் வந்தால், அவை முறையே திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளைக் குறிக்கும். இவை நன்மையைத் தரும். மீதியாக ஒன்று, மூன்று, ஏழு ஆகிய எண்கள் வந்தால், அவை முறையே ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய வாரங்களைக் குறிக்கும். இவை செல்வத்திற்கு அழிவை உண்டாக்கும்; நோய்களைத் தரும்; கலகத்தை ஏற்படுத்தும். மனைக்குரியவர் பிறந்த கிழமையானால் நன்மையாகும்.

## நட்சத்திரப்பொருத்தம்

அசுபதி விசயம் பரணியாம் மரணம்
ஆனகார்த் திகையுமே அனலாம்
நிசமுரோ கணியே விசயமாம் மிருக
சீரிடமும் சத்துரு நாசம்
வசமுயர் திருவா திரையுமே விசயம்
வளர்புனர் பூசமும் விசயம்
அசவினர்ப் பூசம் புண்ணிய விருத்தி
ஆயிலியம் மரணமென் றரையே. 661
*(742 : 115)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை எட்டால் பெருக்கி, இருப்தேழில் வகுக்கக் கிடைக்கும் மீதி **நட்சத்திரம்** எனப்படும். ஒன்று மீதியாக

வந்தால், **அசுபதி**. இதன் பலன் வெற்றி கிடைக்கும்; இரண்டு மீதியாக வந்தால், **பரணி**. இதன் பலன் மரணம் நேரிடும்; மூன்று மீதியாக வந்தால், **கார்த்திகை**. இதன் பலன் தீயினால் பயம் உண்டாகும்; நான்கு மீதியாக வந்தால், **உரோகணி**. இதன் பலன் வெற்றி கிடைக்கும்; ஐந்து மீதியாக வந்தால், **மிருகசீரிடம்**. இதன் பலன் பகைவர் அழிவர்; ஆறு மீதியாக வந்தால், **திருவாதிரை**. இதன் பலன் வெற்றி கிடைக்கும். ஏழு மீதியாக வந்தால், **புனர்பூசம்**. இதன் பலன் வெற்றி உண்டாகும். எட்டு மீதியாக வந்தால், **பூசம்**. இதன் பலன் புண்ணியச் செலவுகள் அதிகரிக்கும். ஒன்பது மீதியாக வந்தால், **ஆயிலியம்**. இதன் பலன் மரண பயம் உண்டாகும்.

**இதுவுமது**

மகமது விருத்தி பூரமும் விசயம்
மருவிய உத்திரம் பயமாம்
சிகமகிழ் அஸ்தம் பசுக்களும் உண்டு
சித்திரை ரோகமாம் சுவாதி
மிகவுமே பாக்கியம் விசாகமும் சிலுகு
மேவிய அனுஷம்வித் தையுமாம்
தகமை கேட்டை தனமுமாம் மூலம்
தக்கரோ கமுமதாய் சாற்றே. 662

*(742 : 115)*

*(இ. ள்)* பத்து மீதியாக வந்தால், **மகம்**. இதன் பலன் விருத்தி உண்டாகும். பதினொன்று மீதியாக வந்தால், **பூரம்**. இதன் பலன் வெற்றி கிடைக்கும்; பன்னிரண்டு மீதியாக வந்தால், **உத்திரம்**. இதன் பலன் பயம் ஏற்படும். பதிமூன்று மீதியாக வந்தால், **அஸ்தம்**. இதன் பலன் பசுக்கள் பெருகும்; பதினான்கு மீதியாக வந்தால், **சித்திரை**. இதன் பலன் நோய் உண்டாகும்; பதினைந்து மீதியாக வந்தால், **சுவாதி**. இதன் பலன் பாக்கியங்கள் பெருகும்; பதினாறு மீதியாக வந்தால், **விசாகம்**. இதன் பலன் துன்பம் உண்டாகும்; பதினேழு மீதியாக வந்தால், **அனுஷம்**. இதன் பலன் வித்தை பெருகும்;

பதினெட்டு மீதியாக வந்தால், **கேட்டை**. இதன் பலன் செல்வம் உண்டாகும்; பத்தொன்பது மீதியாக வந்தால், **மூலம்**. இதன் பலன் நோயுண்டாகும்.

### இதுவுமது

பூராடம் அதுவே மரணமுத் திராடம்
பொருந்திய நலம்திரு வோணம்
வாரொடு திருவும் சேரும் அவிட்டம்
மகிழ்வும் நன்மையாம் சதயம்
ஏரொடு நன்மை யதுபூரட் டாதி
எழில்மக வதுஉத்திரட் டாதி
நேரொடு வயது விருத்திரே வதியும்
நிகரில்லா ரோகமாய் நிகழ்த்தே. 663

*(742 : 115)*

*(இ. ள்)* இருபது மீதியாக வந்தால், **பூராடம்**. இதன் பலன் மரணபயம் உண்டாகும்; இருபத்தொன்று மீதியாக வந்தால், **உத்திராடம்**. இதன் பலன் நன்மைகள் கிடைக்கும்; இருபத்து இரண்டு மீதியாக வந்தால், **திருவோணம்**. இதன் பலன் செல்வம் பெருகும்; இருபத்து மூன்று மீதியாக வந்தால், **அவிட்டம்**. இதன் பலன் நன்மைகள் உண்டாகும்; இருபத்துநான்கு மீதியாக வந்தால், **சதயம்**. இதன் பலன் நன்மைகள் உண்டாகும்; இருபத்து ஐந்து மீதியாக வந்தால், **பூரட்டாதி**. இதன் பலன் புத்திரப்பேறு கிடைக்கும்; இருபத்து ஆறு மீதியாக வந்தால், **உத்திரட்டாதி**. இதன் பலன் நன்மைகள் உண்டாகும்; இருபத்து ஏழு மீதியாக வந்தால், **இரேவதி**. இதன் பலன் நோயுண்டாகும்.

குறிப்பு: மீதி வரவில்லைஎன்றால், அதை இருபத்தேழு என்று கணக்கிட வேண்டும்.

### இதுவுமது

அசுபதி விசயம் செய்யும்
அடுப்பனல் வியாதி ரோணி
திசைமுழு நாளும் வண்மின்
செயம்பெறும் செங்கை செல்வம்
வசையிடு சேபூசம் யோகம்
மரணமா யிலிய மாகும்
மசகெலி மக்கள் பேறு
பூரமும் சண்டை தானே. 664

*(886 a : 236)*

### இதுவுமது

உத்திரம் நிலைமை அத்தம்
யோகமாம் பயறு ரோகம்
புத்திரப் பேரு சோதி
புனிதரும் சுளகு புத்தேள்
வெத்தியாங் கேட்டை செல்வம்
வியாதியாம் மூலம் பொய்கை
சத்துரு மிகுமே ஆடி
தழைத்திடும் செல்வம் தானே. 665

*(886 a : 237)*

### இதுவுமது

திருநிறை யோணம் அவிட்டம்
சேர்தனம் செக்கு செல்வம்
தருவது நாழி சண்டை
தருவேந்தர் வெத்தி தோணி
பெருகிய வியாதி யென்று
பேசினார் மனைக்கு முன்னோர்
வரிவிழி யுடைய மாதே !
மயன்மதன் உரைத்த வாறே ! 666

*(886 a : 238)*

### இதுவுமது

விசையம் தரும்பிணி விரணம் தரும்உருள்
விசேஷம் செயம்
இசையும் திருவருள் புத்திரன் இலாபம்
இடற சுதமாம்
பிசகும் எலிக்குப் புத்திரன் உத்திரம்
பெத்து அஸ்தம்
அசையும் பயறு வரும்போது அம்மனைக்
கழிவு என்பரே. 667

*(886 a : 269)*

### நட்சத்திரம்

பரிவுறு முழத்தை எட்டினிற் பெருக்கிப்
பகருமூ ஒன்பதில் வகுத்துத்
தெரிவரு சேடம் அசுபதி முதலாத்
திகழுநட் சத்திர மாகும்
விரிதரு சோதி உத்திரத் திரையம்
மிருகசீ ரிடமிகு சுகமாம்
துரிசறு சதையம் உரோகணி யுடன
சுவினியும் விஜேயம தாமே. 668

*(886 b : 14)*

*(இ. ள்)* **மனையின் நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை எட்டால் பெருக்கி, இருபத்தேழில் வகுத்துக் கிடைக்கும் மீதி நட்சத்திரம் எனப்படும். பதினைந்து (சுவாதி), பன்னிரண்டு (உத்திரம்), இருபத்தொன்று (உத்திராடம்), இருபத்தாறு (உத்திரட்டாதி), ஐந்து (மிருகசீரிடம்) ஆகியவை மீதியாக வந்தால், மிகுந்த சுகம் உண்டாகும். இருபத்து நான்கு (சதயம்), நான்கு (உரோகணி) ஒன்று (அசுவதி) ஆகியவை மீதி எண்களாக வந்தால், வெற்றி கிடைக்கும்.**

குறிப்பு: **ஒன்று முதல் இருபத்து ஏழு வரை மீதியாக வரும் எண்களை அசுவதி முதலாக இரேவதி முடிவாக கணக்கிட வேண்டும். மீதி வரவில்லையென்றால், இருபத்தேழை மீதிய எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.**

**இதுவும்து**

அதிபுக ழோணம் புனர்வசு பூசம்
அத்தமும் புத்திர விருத்தி
துதிபெறும் அனுடம் கல்வி யாம் அவிட்டம்
தூயநற் செல்வமுண் டாகும்
மதிபூரட் டாதி சித்திரை மூலம்
பகர்திரு வாதிரை பூரம்
திதிரே வதியும் உத்தமம் என்பர்
செககதிர்த் திரள்வெண் நகையே ! 669

*(886 b : 15)*

*(இ. ள்)* **ஒளி பொருந்திய வெண்மையான பற்களைக் கொண்ட, புன்னகை புரியும் பெண்ணே! இருபத்து இரண்டு (திருவோணம்), ஏழு (புனர்பூசம்), எட்டு (பூசம்) பதிமூன்று (அஸ்தம்) ஆகியவை மீதி எண்களாக வந்தால், புத்திரர்கள் தோன்றுவார்கள். பதினேழு (அனுடம்) மீதியாக வந்தால், கல்வியில் மேன்மை உண்டாகும். இருபத்து மூன்று (அவிட்டம்) மீதியாக வந்தால், செல்வம் பெருகும். இருபத்து ஐந்து (பூரட்டாதி), பதினான்கு (சித்திரை), பத்தொன்பது (மூலம்), ஆறு (பூரம்) ஆகியவை மீதி எண்களாக வந்தால், மிகுந்த நன்மைகள் உண்டாகும்.**

தரணியில் புகலும் கார்த்திகை யுறிற்செந்
தணலினால் மிகமெலிந் திடுவர்
பரணிஆ யிலியம் மரணமுண் டாகும்
பகர்ந்திடு கேட்டைஅ சுபமாம்
விரணம தாடும் சிலுகுவி சாகம்
மேவுபூ ராடம்நோ யாகும்
முரணுறு சிலையை மதகரி மருப்பை
முனிந்தோனிற் முகிழ்முலை அணங்கே. 670

*(886 b : 16)*

*(இ. ள்)* மாறுபட்ட வில்லான புருவங்களையும், மதம் பொருந்திய யானையின் தந்தங்களையும் கோபமுறச் செய்யும் முகிழ்ந்திருக்கக் கூடிய தனங்களை உடைய பெண்ணே ! மூன்று (கார்த்திகை) மீதியாக வந்தால், தீயினால் மிகுந்த பாதிப்பு ஏற்படும். இரண்டு (பரணி), ஒன்பது (ஆயிலியம்) ஆகியவை மீதி எண்களாக வந்தால், மரணம் நேரிடும். பதினெட்டு (கேட்டை) மீதியாக வந்தால், நன்மையாகும். பதினாறு (விசாகம்) மீதியாக வந்தால், காயம் உண்டாகும். இருபது (பூராடம்) மீதியாக வந்தால், நோயுண்டாகும்.

## இதுவுமது

பலமதாம் ஆயத்தைப் பாரில் எட்டினில்
நலமதாம் ஏத்திமூ வொன்ப தாகுநாள்
அலகிடக் கழிக்கவோ அசுவ னிற்பயன்
இலகிய வசியம்வந் தெய்தும் என்பரே. 670

*(இ. ள்)* முன் ஆயத்தை எட்டிற் பெருக்கி, இருபத்தேழிற்'கொடுக்க, அதற்குள்ளாக நின்ற நட்சத்திரம் ஒன்று மிகுந்தால், அசுவனி. அதற்கு வசியம் பொருந்தி நட்க்கும். *(சி. நூ. பா. : 28)*

என்பதி ரண்டுசொற் கினிய மரணம்
பின்பு கார்த்திகைப் புகைய தாமனல்
வன்புறு மிரோகணி வசியம் எய்துமே
அன்புறு மான்தலை அதிக நாசமே. 672

*(இ. ள்)* இரண்டிற்குப் பரணி. அதற்குப் பலன் வீடிகட்டி முடிவதற்குள்ளாக எஜமானன் மரணத்தை அடைவான். மூன்றிற்குக் கார்த்திகை, அதற்கு அந்த வீடு தீப்பட்டுப் போகும். நான்கிற்கு ரோகணி. அதன் பலன் ஜெயம் பொருந்தி நடக்கும். ஐந்துக்கு மிருகசீரிடம், அதன் பலன் அந்த மனை பாழடைந்து போகும். *(சி. நூ. பா. : 29)*

ஆதிரை செயம் புனர்பூசம் பாலராம்
ஓதிய பூசங்கா லொழியும் பாம்பிதே
ஏதமில் வேள்வியோ டிலங்கும் விளங்கெலி
பேதமில் உத்தமம் என்று பேசினார். 673

*(இ. ள்)* ஆறு வருமாகில்-திருவாதிரை. அதனால் குறைவில்லாத செல்வம் உண்டாகும்; ஏழு வருமாகில் புனர்பூசம். அதனால் புத்திர பாக்கியம். எட்டு வருமாகில் பூசம். அதனால் வங்கிஷம் அற்றுப் போகும். ஒன்பது வருமாகில் ஆயிலியம் அதனால் முன் சொல்லியபடி நடக்கும். பத்து வருமாகில் மகம். பதினொன்று வருமாகில் பூரம். இவ்விரண்டிற்கும் உத்தமத்தில் மத்திம பலன்நடக்கும். *(சி. நூ. பா. : 30)*

பேசிய வுத்தரம் பெருகுங் கையினில்
நாசந் தூசுநாள் நணுகு மென்பிணி
பாச மாஞ்சோதி பாரிற் சுகம்பெறும்
நேசமி லாமுறம் நேரும் துன்பமே. 674

*(இ. ள்)* பன்னிரண்டுக்கு உத்தரம். அதனால் நாளுக்கு நாள் குறைவில்லாச் செல்வம் பெருகிவரும். பதிமூன்றுக்கு அத்தம் அதனால் அந்த மனை நாளுக்கு நாள் பாழடைந்து போகும். பதினான்குக்குச் சித்திரை. அதனால் எந்நாளும் பிணியாய் இருக்கும். பதினைந்துக்குச் சுவாதி. அதனால் நாளுக்கு நாள் சுகம் பெருகி வரும். பதினாறுக்கு விசாகம். அதனால் எந்நாளும் துன்பத்தை விளைவிக்கும். *(சி. நூ. பா. : 31)*

ஏறும் போந்தைதா னுத்தமம் எனலாம்
கூறும் கேட்டை கொடுமையாம் மூலத்தில்
ஊறு மேபிணி உடைகுளம் ஆவிபோம்
தேறும் விஸ்வநாள் சேருமே நற்சுகம். 675

(இ. ள்) பதினேழுக்கு அனுடம். அதனால் சகலமும் உத்தம பலனாக நடக்கும். பதினெட்டு கேட்டை. அதனால் எந்நாளும் குடும்ப விரோதமும் பகையுமாய் இருக்கும். பத்தொன்பதிற்கு மூலம். அதனால் அந்த மனையின் எஜமானுக்கு நாடோறும் மாறாத பிணியாய் இருக்கும். இருபதுக்குப் பூராடம். அதனால் அந்த மனை நாளுக்கு நாள் விர்த்தியில்லாமல் குலநாசமற்றுப் போகும். இருபத்தொன்றுக்கு உத்திராடம். அதனால் நாள்தோறும் செல்வம் பெருகி வரும். *(சி. நூ. பா. : 32)*

சுகமி லாச்சோனை துன்பம் விட்டமே
அகம கற்றுஞ்ச தயஞ்செள பாக்கியம்
மகபூ ரட்டாதி வங்கிஷ மற்றுப்போம்
சகசம் ரேவதி சாருமி ரோகமே. 676

(இ. ள்) இருபத்திரண்டிற்குத் திருவோணம் நின்றால், அதனால் யாதொரு சுகமுமில்லாமல் இருக்கும். இருபத்து மூன்றுக்கு அவிட்டம் நிற்குமானால், அந்த மனை கட்டிவனுக்கில்லாமல் மற்றொருவன் பக்கம் சாரும். இருபத்து நான்குக்குச் சதயம் நிற்குமானால், அதனாலந்த மனையில் அஷ்ட இலட்சுமிவாசமாய் இருப்பாள். இருபத்தைந்துக்குப் பூரட்டாதி நின்றால், அந்த மனைக்காரன் தலையோடே வங்கிஷமற்றுப் போகும். இருபத்தாறுக்கு உத்திரட்டாதி நிற்குமானால், அதனால் எந்நாளும் போக பாக்கியமாக இருக்கும். இருபத்தேழுக்கு ரேவதி வந்து நிற்குமானால், அந்த மனையில் எந்நாளும் பிணியிருக்கும். *(சி. நூ. பா. : 33)*

**விரயம், யோனி**

சுகவிர யங்கள் ஏனிரு மாதாய்
தொகையினுக் கூட்டிட நலமே
மிகவடை குவர்மேற் படிற்பிணி யடைந்து
மிடியினால் வருந்துவர் தாமே

இசலறு முழத்தை மூன்றினிற் பெருக்கி
எட்டினிற் கழித்துறு சேடம்
திகழ்திசை யோனி யாகுமென் றாகிற்
செழந்துஜம் தனம்பெரு கிடுமே. 677

(886 b : 6)

(இ. ள்) விரயங்களைத் தவிர்ப்பதற்கு மனையில், வீட்டின் சுற்று முழத்தைக் கூட்டிட நன்மை அடைவர். இல்லாவிடில் நோயினை அடைந்து வறுமையினால் வருந்துவார்கள். மனையின் நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை மூன்றால் பெருக்கி, எட்டால் வகுத்துக் கிடைக்கும் மீதி **யோனி** எனப்படும். ஒன்று மீதியாக வந்தால், பருந்துப் பிறப்பு. இதன் பலன் செல்வம்.

குறிப்பு: மீதி இல்லையானால் மீதி எட்டு என்றுகொண்டு, பலன் காண வேண்டும். துவஜம்-பருந்து.

## யோனி

பெருமைஇல் இரண்டேற் புகைகொலை யாகும்
பெட்புறு மூன்றெனிற் சீயம்
தரும்பல போகம் நான்குநாய் ரோகம்
தழைத்திடும் ஐந்தினில் இடபம்
திருமலிந் திருமா றெனில்கரங் கலகம்
திகழுமேற் கெஜமிகு செயமாம்
மருவிரு நான்கு காகநோ யாகும்
வருபகை இலதெனில் நலமே. 678

(886 b : 7)

(இ. ள்) இரண்டு மீதியாக வந்தால், பூனைப்பிறப்பு. இதன் பலன் கொலை; மூன்று மீதியாக வந்தால், சிங்கப் பிறப்பு. இதன் பலன் சுகமடைதல்; நான்கு மீதியாக வந்தால், நாய்ப்பிறப்பு. இதன் பலன் நோய்; ஐந்து மீதியாக வந்தால், எருதுப் பிறப்பு. இதன் பலன் செல்வம் சேருதல்; ஆறு மீதியாக வந்தால், எலிப் பிறப்பு. இதன் பலன் கலகமாகும்; ஏழு மீதியாக வந்தால், யானைப்பிறப்பு. இதன் பலன் வெற்றியாகும்; எட்டு மீதியாக வந்தால், காகப் பிறப்பு. இதன் பலன் நோயாகும்.

குறிப்பு: *மீதி இல்லையானால் மீதி எட்டு என்றுகொண்டு, பலன் காண வேண்டும்.*

## யோனிப்பொருத்தம்

உரைத்த ஆயத்தை உன்னியே மூன்றினிற்
பொருத்த மேத்தியட் டமத்தினிற் போக்கிட
விருத்தி நின்றது விளங்கும் யோனியில்
இருத்தி இக்கர னிருநான்கிற் சேர்த்ததே. 679

*(இ. ள்) ஆயத்தை மூன்றிற் பெருக்கி எட்டுகுள்ளாக நின்றது அஷ்டயோனி என்றறியும். (சி. நூ. பா. : 25)*

சொற்றதி லேகமாம் சுபுத்ர மாக்கியம்
மற்றிரண் டதனில்மர கலகம் மன்னுமே
சுத்தமூன் றரிசெயம் துலங்கும் நாலினிற்
கத்துசு வானம்நோய் காட்டும் என்பரே. 680

*(இ. ள்) யோனி ஒன்று மிகுந்தால், கருடயோனி. எந்நாளும் குறைவில்லாப் பாக்கியம் உண்டாகும். இரண்டு மிகுந்தால், பூனை யோனி. அதற்குக் கலகம். மூன்று மிகுந்தால்-சிம்மயோனி. ஜெயம் பொருந்தும். நான்கு மிகுந்தால்-சுவானயோனி. எந்நாளும் பிணியாயிருக்கும். (சி. நூ. பா. : 26)*

காட்டிய ஐந்தினிற் சர்ப்பம் கனதனம்
பூட்டிய வாறெலி பொருளும் போக்குமே
கூட்டிய ஏழ்கசங் குலவும் நற்சுகம்
நீட்டிய முயலுமே எட்டில் நிஷ்பலம். 681

*(இ. ள்) ஐந்துக்குச் சர்ப்பயோனி, கனம் பொருந்திய தனம் பெருகும். ஆறு வருமாகில்-எலி. எல்லாப் பொருளுமற்று நிர்ப்பாக்கியமாகும். ஏழு வருமாகில் - கெசயோனி. அந்தக் குடும்பம் சுபிட்சமாயிருக்கும். எட்டு வருமாகில்-முயல் யோனி. அதற்கு ஒன்றுமில்லாமல் நிர்ப்பாக்கியமாகிவிடும். (சி. நூ. பா. : 27)*

## யோனிப்பொருத்தம்
## (வேறு)

பார்க்கும் கிழக்கு கொடியாகும்
பகரும் தென்கீழ்ப் புகையதுவாம்
சேர்க்கும் தெற்குச் சிங்கமதாம்
தென்மேல் மூலை நாயாகும்
மேற்கு ரிஷபம் வடமேற்கு
மிக்க கழுதை வடக்கரணை
ஏற்கும் வடகீழ்க் காகமிதே
எட்டு யோனி வரும்வாறே. 682

*(886 a : 52)*

*(இ. ள்)* கிழக்கு-கருடன்; தென்கிழக்கு - பூனை
தெற்கு - சிங்கம்; தென்மேற்கு - நாய்
மேற்கு - எருது; வடமேற்கு - கழுதை
வடக்கு - அரணை; வடகிழக்கு - காகம்

என்று எட்டு யோனிகளைப் பற்றிக் கூறுவோரும் உண்டு.

## யோனிப்பொருத்தம்

கொடியே யாகில் திருவாகும்
கலையே காட்டும் புகையாகில்
நெடிய சிங்கம் வெற்றியதாம்
நிகழும் நாயே குற்றமதாம்
இடப மாகில் மிகநன்றாம்
எண்ணும் கழுதை நோயாகும்
கடகம் யானை நலமுண்டாம்
காகம் பொல்லா தெனவுரையே ! 683

*(886 a : 83)*

(இ. ள்) கருடப் பிறப்பாகில், அளவற்ற செல்வம் உண்டாகும்; பூனைப்பிறப்பாகில், கலகம் விளையும்; சிங்கப்

பிறப்பாகில், வெற்றி உண்டாகும்; நாய்ப் பிறப்பாகில், உறவினர் பகை உண்டாகும்; எருதுப் பிறப்பாகில், நன்மைகள் உண்டாகும்; கழுதைப் பிறப்பாகில் நோய் உண்டாகும். யனை பிறப்பாகில் நன்மைகள் பெருகும்; காகப் பிறப்பாகில் தீமை விளையும்.

**யோனிப்பொருத்தம்**

யோனியது எட்டதற்கே பலனே சொல்வேன்
உகந்தஒன்றுக் கேகெருடன் உத்த மந்தான்
தான்ரெண்டுக் கேதூமம் கலகமூன் றதற்கு
சிங்கம்செ யம்நான்கு சுவாணம் ரோகம்
தேனுகந்த ஐந்திற்கே ரிஷபம் பொன்னும்
திகழாறு கழுதைதனம் நாசம் ஏழு
காணசெயம் எட்டுக்கே காக மாகும்
அதுவெனவும் நிஷ்பலனாய் அறைந்த வாறே.684
*(742 : 113)*

(இ. ள்) மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்தகுழித்தொகையை மூன்றில் பெருக்கி, எட்டில் வகுக்க வரும் மீதியாகிய யோனியில், ஒன்று மீதியாக வந்தால், கருடப்பிறப்பு. இதன் பலன் மிகுந்த செல்வம் உண்டாகும்; மீதியாக இரண்டு வந்தால் பூனைப் பிறப்பு. இதன் பலன் கலகம் உண்டாகும்; மீதி மூன்று வந்தால், சிங்கப்பிறப்பு. இதன் பலன் வெற்றி கிட்டும்; நான்கு மீதியாக வந்தால் நாய்ப் பிறப்பு. இதன் பலன் நோய் உண்டாகும்; ஐந்து மீதியாக வந்தால், எருதுப் பிறப்பு. இதன் பலன் பொன் கிடைக்கும்; மீதியாக ஆறு வந்தால், கழுதைப் பிறப்பு; இதன் பலன் பொருளுக்கு அழிவு உண்டாகும்; மீதியாக ஏழு வந்தால் வெற்றி கிடைக்கும். மீதியாக எட்டு வந்தால் காகப் பிறப்பு. இதன் பலன் நோயும் வருத்தமும் உண்டாகும்.

குறிப்பு: மீதி வரவில்லையென்றால், எட்டு எனக் கணக்கில் கொண்டு கணக்கிட வேண்டும்.

## யோனிப்பொருத்தம்

ஆகக் கிழக்கு முதலெட்டும்
பருந்து பூனை அரிசுணங்கன்
நாகம் கரிப்பை கரிமுயலாம்
யோனி நால்வாய் எண்டிசைக்கும்
மேகம் தரக்கரம் ஊண் சத்தி
விளைவோ டரசு மிகமகிழ்
சோகம் சுகத்தோ டொன்பதுவும்
சொல்லா எட்டே ஆறென்றே. 685
*(886 a : 51)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை மூன்றால் பெருக்கி, எட்டால் வகுக்க, மீதி யோனியாகும். மீதி ஒன்றானால் கிழக்குத் திசை-பருந்துப் பிறப்பாகும்; இரண்டு மீதியாக வந்தால், தென்கிழக்குத் திசை பூனைப் பிறப்பாகும்; மூன்று மீதியாக வந்தால், தெற்குத் திசை-சிங்கப் பிறப்பாகும்; நான்கு மீதியாக வந்தால், தென்மேற்குத்திசை நாய்ப்பிறப்பாகும்; ஐந்து மீதியாக வந்தால், மேற்குத்திசை பாம்புப் பிறப்பாகும்; ஆறு மீதியாக வந்தால், வடமேற்குத்திசை- எலிப்பிறப்பாகும்; ஏழு மீதியாக வந்தால் வடக்குத்திசை-யானைப்பிறப்பாகும். எட்டு மீதியாக வந்தால் வடகிழக்குத் திசை முயல் பிறப்பாகும்.

குறிப்பு: மீதி இல்லையென்றால் எட்டு எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.

## யோனிப் பொருத்தம்-பருந்து

யோனி பருந்து உதிக்கவே நன்மை
உள்ளதுக் குள்ளவே உறுதி
மானிடர் தனக்கு மாகு கள்ளரும்
மைந்தர்கள் மூன்றுடன் இரண்டாம்

சோனிக மாக்கும் பூமிவெள் ளாமை
சிறப்புடன் விளைவுநன் றெனவே
பூதனில் புகழும் பொருளில்லை என்றே
உரைத்தனர் வாக்குச்செந் தமிழோர். 686
*(796a : 8)*

*(இ. ள்)* பருந்து யோனி உதிக்க நன்மையாகும். உள்ளத்தில் உறுதி உண்டாகும்; கள்ளரால் துன்பம் உண்டாகும். ஐந்து புதல்வர் புதல்வியர் தோன்றுவர். பயிர்த்தொழில் சிறந்து விளைவு பெருகும். இல்லாத சிறந்த பொருள் உலகில் இல்லை என்று சொல்லும் வகையில் செல்வம் மிகும்.

**யோனிப்பொருத்தம்-பூனை**

பூத லத்தில் பூனை யோனி
புனித மாக வருகினும்
வாது சூத வழக்குண் டாகி
வந்த பொருட்கள் நாசமாம்
சேதம் சேதம் மாடு கன்று
புத்தி ராளும் புத்திரி
நாதம் இல்லை இல்லை என்று
நாத னார்வு ரைத்தனர். 687
*(796 : 13)*

*(இ. ள்)* பூனை யோனி எனப்படும் பூனைப் பிறப்பு புனிதம் என்று சொல்லப்பட்டாலும், வீண் வாதங்கள், சூழ்ச்சிகள், வழக்குகள் உண்டாகி, மிகுந்த துன்பமுடன் பொருள் வீணாகும்; மாடு கன்றுகள் அழிந்து போகும். புத்திரர்களும் புத்திரிகளும் மரணமடைவார்கள்.

**யோனிப் பொருத்தம்-சிங்கம்**

சிங்கமே சிறப்பு தனக்கும் வலிக்கும்
செங்கதிர்க் குடையவன் அதிபன்
பொங்குமே செல்வம் பூமிதான் ஆளுவான்
புத்திரர் அஞ்சுடன் மூன்றும்
தங்கமா மயமாய் கேள்கலி ராசன்
தனமுடன் விளைவுமுள் ளவனாய்
லிங்கர அவதா ரெனஉயை அரியால்
உரைத்தனர் வாக்குச்செந் தமிழோர். 688

*(796 : 12)*

*(இ.ள்)* சிங்கப்பிறப்பு சிறப்புமிக்கதாகும். உள்ளத்திலும் உடலிலும் வலிமையுண்டாகும். செங்கதிரவனைப் போன்று அதிகப் புகழுடன் விளங்குவான். புத்திரர் ஐவரும் புத்திரி மூவரும் இருப்பர். பொன் மிகுதியும் பெற்றவனாக அவதாரப் புருஷனாக விளங்குவான் என்று செந்தமிழ் வல்லோர் உரைத்துள்ளார்கள்.

**யோனிப் பொருத்தம் - நாய்**

சுணங்க னென்ற யோனி யாலே
சுத்தி அலைய வைக்குமே
இணக்க மில்லை வணக்க மில்லை
எல்லோர் சொல்லைக் கேட்பவன்
பிணக்கு மில்லை பூமி இல்லை
மாடு கன்றில் லாதவன்
தனக்குத் தானே தலைவ னாவான்
என்று ரைத்தார் வல்லவர். 689

*(796 : 14)*

*(இ. ள்)* நாய் யோனியாக இருந்தால் மிகுந்த அலைச்சல் உண்டாகும். மற்றவர்களுக்கு ஒத்துப்போகமாட்டான்; பிறரால் மதிக்கப்பட மாட்டான்; எல்லோருடைய சொல்லையும்

கேட்கும் சொந்த புத்தி இல்லாதவன்; சொந்தமாகப் பூமி இல்லாதவன்; பிறரோடு சண்டை யில்லாதவன்; மாடு, கன்று போன்ற எந்த செல்வமும் இல்லாதவன்; தனக்குத் தானே தலைவனாகக் கருதும் தன்மையுடையவனாக விளங்குவான் என்று வல்லோர் உரைத்துள்ளனர்.

### யோனிப் பொருத்தம் - நாகம்

நாகமே நன்று நற்குணம் உள்ளோன்
நல்லஊண் தாரமி ரண்டோன்
யோகத் துடையோன் வாணிபம் பூமி
உள்ளமட்டும் உள்ளத்தில் நன்று
தீரகநோய் இல்லான் பெருமைகள் படைப்பான்
சென்றிடம் செல்வனாய் இருப்பான்
ஊகத்தில் சுனங்கன் உள்ளவர்க் கறிய
உரைத்தனர் அவர்க்குச்செந் தமிழோர். 690
*(796 : 10)*

*(இ. ள்)* நாக யோனி எனப்படும் பாம்பு யோனி இருப்பின் நன்மையாகும். நல்ல குணம் உடையவனாக இருப்பான்; நல்ல உணவை உண்ணுபவன்; இரண்டு மனைவியரைக் கொண்டவன்; யோகம் மிக்கவன்; நல்ல வாணிபம் உடையவன்; பூமிக்குச் சொந்தக்காரன்; உள்ளத்தில் உயர்ந்தவன்; நோய் இல்லாதவன்; பெருமைகள் உடையவனாக விளங்குபன்; எங்குச் சென்றாலும் செல்வத்துடன் விளங்குவான் என்று உலகத்தோர் அனைவரும் அறியும் பொருட்டு வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

### யோனிப்பொருத்தம் - எலி

வாலு யோனி வந்து திக்க
வந்து நின்றி டத்திலே
காலுங் கையும் கட்டுப் பட்டு
கால்வி விலங்கு வந்திடும்

நாலு மூலை திரிந்து கெட்டு
நலியும் பிள்ளை பெண்டுகள்
பாலு பாழு பரம னாணை
என்று ரைத்தார் வல்லவர். 691
*(796 : 15)*

*(இ. ள்)* எலி யோனியாக இருந்தால் தீமையாகும். விலங்கு பூண நேரிடும். எந்நாளும் அலைந்து திரிந்து வாழ்வான். இவனுடைய மனைவியும் பிள்ளைகளும் வாடுவார்கள். இது நிச்சயம் என்று வல்லர்கள் வகுத்துள்ளார்கள்.

**யோனிப் பொருத்தம் - யானை**

கரிமுகன் உதிக்க திருமிகு உண்டு
கைலாசம் போலிருந்து வாழ்வான்
சரிவர சகலமும் படைத்திட அறிவார்
சஞ்சரிப் பார்தனக்கு இயமன்
பரவர வானோரின் பத்தமிழுக் கிசைந்தோன்
பராக்கிரம னாகவே இருப்பான்
அருணனைப் பணிந்தோன் என்றிட
அறைந்தனர் அவர்க்குச்செந் தமிழோர். 692
*(796 : 11)*

*(இ. ள்)* யானை யோனி உதிக்க, செல்வம் மிகவும் சேரும். சிறந்து வாழ்வான். எதையும் சாதிக்க வல்லவன்; தீயவர்களுக்கு எமனாக விளங்கக் கூடியவன்; தமிழில் விருப்பம் உடையவன்; தைரியமும் வீரமும் உடையவனாக இருப்பான். சூரியனை வழிபடுபவன் என்று செந்தமிழில் வல்லவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

**யோனிப்பொருத்தம் - முயல்**

அபய னென்ற முயலை யோனி
அம்பனை தன்னில்உ தித்திடுமே
தைய லென்ற பெண்களுக் காகத்
தரித்தி ரத்தைக் காட்டிடுமே

கைகள் மெய்கள் நோய்கள் என்றே
தளுக்கு மெக்கும் இசைதருமே
வைய கத்தில் உடலே வற்றும்
வகுத்து ரைத்தார் வல்லவரே. 693

*(8796 : 16)*

*(இ. ள்) முயல் யோனி உதிக்க, பெண்களுக்கு மிகுந்த தீமையை விளைவிக்கும். அவர்களுக்கு வறுமையை உண்டாக்கும்; கைகளிலும் உடலிலும் நோய்கள் தோன்றி வருத்தும்; உடல் வற்றிப்போகும் என்று வல்லவர்கள் வகுத்துரைத்துள்ளார்கள்.*

**யோனிப்பொருத்தம் - நற்பலன்**

பாரினில் பருந்து அரிகரி நாகம்
பாங்குடன் இவ்வகை யோனி
காரினில் மனைக்கு வந்திட வேனிட
கலியுக சனங்களுக் கெல்லாம்
மாரியும் மணங்கள் கல்வியும் பொருள்கள்
மாடுகள் கன்றுமே வளரும்
நாரிகள் புத்திரர் வாழ்குவர் என்றே
வகுத்தனர் அவர்க்குச்செந் தமிழோர். 694

***(796 : 12)***

***(இ. ள்)** உலகத்தில் மனையில் பருந்து, சிங்கம், யானை, பாம்பு முதலான யோனிகள் வந்தால், கலியுக காலத்தில் வாழும் மக்களுக்கெல்லாம் நல்லமுறையில் திருமணங்கள் நடைபெறும்; நாட்டில் மழை பொழியும். கல்வி கற்றுத் தேர்வர்; பொருள்கள் சேரும். மாடுகள் கன்றுகள் பெருகும். பெண்கள், புதல்வர்கள் நீண்ட ஆயுளைப் பெற்று வளமாக வாழ்வார்கள் என்று செந்தமிழ் நூல் கற்றுத் தேர்ந்த வல்லவர்கள் உரைத்துள்ளார்கள்.*

### யோனிப்பொருத்தம் - தீயபலன்

குப்பை பூனை முயல்சு ணங்கன்
கூட்டி மனையில் வந்திடில்
சப்பைச் சன்னி நோய்கள் அறியும்
சகல பலங்கள் குறைந்திடும்
அப்பை புத்தி இல்லை இல்லை
அழகைப் போக்கி அழிக்குமே
உப்பை என்ற வைப்பும் இல்லை
என்று வகுத்தனர் தமிழோரே. 695

*(736 : 17)*

*(இ. ள்)* மனையில் பூனை, முயல், நாய் முதலான யோனிகள் அமையுமானால், சன்னி நோய்கள் தோன்றும்; பலம் குறைந்து போகும்; அறிவுத்திறன் குறைந்து போகும்; அழகு மாறும்; செல்வம் கையைவிட்டுப் போய்விடும் என்று தமிழோர் வகுத்துள்ளார்கள்.

### யோனிப் பொருத்தம் - பலன்கள்

மன்னே பருந்து அரிநாகம்
யானை நன்று மன்யோனி
என்னே பூனை சுணங்கனுடன்
இயலும் கரிப்பை முயலாகா
நன்னே ராசன் நச்சரவு
சாரு மாட்சி மிகநன்று
பொன்னே வாழ்நாள் அன்பதினுள்
வாழ்நாள் குறைதல் மனைக்காகா. 696

*(886 a : 354)*

*(இ. ள்)* பருந்து, சிங்கம், பாம்பு, யானை ஆகிய நான்கு யோனிகள் இருப்பின் நன்று. பூனை, நாய், எலி, முயல் ஆகியவை தீமையை விளைவிப்பன. நல்ல யோனிகள் நான்கினுள் சிங்க, பாம்பு யோனிகள் மிகவும் நன்மையைப்

பயப்பன; மனைப் பொருத்தங்களில் வயதைக் கணக்கிடும் பொழுது, வயதானது ஐம்பதிற்கும் குறைவாக இருப்பின், மனைக்கு ஆகாது.

## பொது
## பொருத்தம் - யோனி

தோன்றிய கெஜத்தா னத்தினிற் துஜமேற்
துலங்குநித் தியகல் யாணம்
ஆன்றவர் மகிழ்திகழ் கெஜத்தா னத்தவர்
அரியி டபம்நின் றிடிலோ
ஏன்றபுத் திரர்கள் மரணமாம் முன்னம்
இயம்பிய பூசையொடு சுணங்கன்
சான்றவர் இகழும் கர்த்தபம் காகம்
தான்வரிற் பற்பல துயரே. 697

*(886 b : 6)*

*(இ. ள்)* யானை இடத்தினில் பருந்து இருப்பின், தினமும் சுகநிகழ்ச்சிகள் நடக்கும்; யானை, சிம்மம், இடபம் ஆகிய இடங்களில் நிற்க, புத்திரர்களுக்கு மரணம் நிகழும்; பூனை, நாய் இவைகள் இருக்க, இகழ்ச்சி உண்டாகும். கழுதை, காகம் இவைகள் இருக்க, பற்பல துயரங்கள் வந்து சேரும்.

விருத்தியாம் சிம்மத் தலத்தினில் இடபம்
மிளிர்தரு மதகயம் நின்றால்
தரித்திர மோடு பல்லிபத்து முண்டாம்
சாற்றிய இடபதா னத்திற்
பெருத்திடு யானை துஜமுறிற் றனமும்
பெற்றகரு மகவுமுண் டாகும்
அருந்திகோ ளிடபத் தரியுடன் மகவோ
டரும்பொருள் நாசமாம் மாதோ! 698

*(886 b : 10)*

*(இ. ள்)* சிம்மத்தில் இடபம் இருப்பின், நன்மை மிகும். யானை நின்றால், வறுமை உண்டாகும். எருதுவிடத்தில் யானை நின்று அது பருந்திடமாகில் புத்திரபேறு உண்டாகும். எருதுவிடத்தில் சிங்கம் இருப்பின், சேர்த்து வைத்த பொருளுக்கு அழிவு உண்டாகும்.

புகழ்கிழக் காதி யோனிகள் எட்டும்
பொருந்தியே பிர்மதா னத்தை
மகிழ்வுடன் நோக்கும் தத்தம திடத்தில்
வந்திடில் அழகுறு சுபமாம்
பகர்துஜத் தானத் தானத்தரி கெஜமி
பரிந்துரிற் சுபமரித் தானத்
தகமகிழ் துஜமேற் தானியம் தனமும்
ஆயுளும் விருத்திய தாமே. 699

*(886 b : 9)*

*(இ. ள்)* கிழக்கு முதலாக யோனிகள் எட்டும் தங்களது இடங்களில் இருந்து பிரமதானத்தைப் பார்க்கினும் தத்தமது இடத்தில் வந்திருப்பினும் நன்மையாகும். பருந்திடத்தில் சிங்கம், யானை எருது இவை இருப்பினும், சிம்மத்திடத்தில் பருந்து இருப்பினும் தனமும் தானியமும் பெருகும். ஆயுள் விருத்தியாகும்.

## இராசி

ஆய்ந்ததோர் ஏழ்பனி ரெண்டில்
ஆகிய இராசி யாகும்
வாய்ந்தபின் பெருக்கிப் பின்னும்
வருவதுக் கீய்ந்த சேடம்
மீந்தது பலன தாகும்
விரும்புவ தறிந்தோர் மெய்யில்
தோய்ந்தவேல் விழியி னாளே !
வயதுதான் செல்ல லுற்றேன். 700

*(886 a : 49)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைச் சரியாக அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை ஏழில் பெருக்கிப் பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி **இராசியாகும்.** உண்மையான பலனை அறிய விரும்புவோர் இந்த மீதியைக் கொண்டு அறிவார்கள் என்பதை, வேல் போன்ற விழிகளை யுடைய பெண்ணே! கேட்பாயாக.

### இராசிப்பொருத்தம்

இராசியின் பலனை நவிலுவேன் மேடம்
நன்மைதான் இடமுடன் தன்மம்
தேசுயர் ரிஷபம் சம்பத்து மிதுனம்
தீதெனும் கடகமும் விருத்தி
மூசுசிங் கமுமே ஸ்ரீபலன் கன்னி
மூறிய தரித்திரம் துலாமும்
வாசமாம் பலனும் விருச்சிகம் பலனும்
மத்திமம் இதுவென வகுத்தே. 701

*(742 : 121)*

*(இ. ள்)* மனையின் நீல அகலங்களை அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை ஏழில் பெருக்கிப் பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதிக்கு **இராசி** என்று பெயர். மீதியாக ஒன்று வந்தால், **மேட இராசி.** இதன் பலன் தர்மம் செய்தல் உண்டாம்; மீதியாக இரண்டு வந்தால், **இடப இராசி.** இதன் பலன் செல்வம் வந்து சேரும்; மீதியாக மூன்று வந்தால், **மிதுன இராசி;** இதன் பலன் துன்பத்தைக் கொடுக்கும்; மீதியாக நான்கு வந்தால், **கடக இராசி.** இதன் பலன் செல்வம் பெருகும்; மீதியாக ஐந்து வந்தால், **சிம்ம இராசி.** இதன் பலன் செல்வம் கிடைக்கும்; மீதியாக ஆறு வந்தால், **கன்னி இராசி.** இதன் பலன் வறுமை உண்டாகும்; மீதியாக ஏழு வந்தால், **துலாம் இராசி.** இதற்கு நன்மையான பலன்கள் கிடைக்கும்; மீதியாக எட்டு வந்தால், **விருச்சிக இராசி;** இதற்குச் சுமாரான பலன்கள் நடக்கும்.

## இதுவுமது

தனுசுமே செயமாம் மகரமும் பேறு
தக்கதோர் கூட்டமாய்ச் சாத்து
வினவிய கும்பம் உத்தம பலனும்
மீனமே புத்திரவி னாசம்
நினவுள இராசி பலனுள்ள படியே
நிகழ்த்தியே தமிழறிந் தோரும்
மனுவெனும் பின்னோன் மயனுரை இதுவாய்
வகுத்தது அறிவறி வாரே. 702
*(742 : 122)*

*(இ. ள்)* மீதியாக ஒன்பது வந்தால் **தனுசு இராசி.** இதன் பலன் வெற்றியாகும்; மீதியாகப் பத்து வந்தால், **மகர இராசி.** இதன் பலன் புத்திரபேறு கிடைக்கும்; மீதியாகப் பதினொன்று வந்தால், **கும்ப இராசி.** இதன் பலன் மிகுந்த நன்மையாகும். மீதியாகப் பன்னிரண்டு வந்தால், **மீன இராசி.** இதன் பலன் புத்திரர்களுக்கு அழிவு உண்டாகும்.

குறிப்பு: மீதி வரவில்லையென்றால், மீதி பன்னிரண்டு எனக் கொண்டு கணக்கிட வேண்டும்.

## இதுவுமது

நாட்டிய ஆயத்தை நாலில் ஏற்றியே
ஈட்டிமுன் னான்கினுக் கீய நின்றது
கூட்டிய தொன்றதேல் குலவு மேஷமாம்
மீட்டிய இரண்டினில் ரிஷப மாகுமே. 703

*(இ. ள்)* ஆயத்தை நாலிற் பெருக்கிப் பன்னிரண்டிற் கழிக்க, அதற்குள்ளாக வந்த சேடம் ஒன்றுக்கு-மேஷம். அதனால் குடும்ப விருத்தியாம். இரண்டிற்கு-ரிஷபம், அதனால் சகலரும் மதிக்கத்தக்க பெருமை யுண்டாகும். *(சி. நூ. பா. : 44)*

### இதுவுமது

மதித்தமூன் றதில்நிதி மன்றும் நண்டெனிற்
கதித்தநற் செயமரி வசியம் காட்டுமே
துதித்தபெண் ஞானமாம் துலாமும் யோகமாம்
பதித்ததேள் நலம்தரும் பலவும் நன்மையே. 704

*(இ. ள்) மூன்றுக்கு-மிதுனம். அதனால் தனமுண்டாம்.* நாலுக்குக் கடகம். அதனால் ஜெபமுண்டாம். ஐந்துக்குச் சிங்கம். அதனால் வசீகரமுண்டாம். ஆறுக்குக் கன்னி, அதனால் ஞானம் பொருத்தும். ஏழுக்குத் துலாம் அதனால் போக பாக்கியம் உண்டாம். எட்டுக்கு-விருச்சிகம் அதனால் சகலமும் நன்மையாய் நடக்கும். ஒன்பதுக்குத்-தனுசு. அதனால் சுபகரமுண்டாம். *(சி. நூ. பா. : 45)*

### இதுவுமது

நன்மையே மகரம்எந் நாளும் நல்குமே
துன்மையே கும்பமும் தினமும் கூட்டுமே
வன்மையி லாதமீன் வளமை யீயுமென்
தன்மைசேர் மயனிவை சாற்றி னானரோ. 705

*(இ. ள்)* பத்துக்கு-மகரம், அதனால் நாளுக்கு நாள் நன்மையான பயனுண்டாம். பதினொன்றுக்குக்-கும்பம். அதனால் எந்நாளும் துன்பமுண்டாம். பன்னிரண்டிற்கு மீனம், அதனால் சுகமுண்டாமென்று மயனானவர் சொன்னார். *(சி. நூ. பா. : 46)*

### இதுவுமது

அண்ணிய முழத்தை ஏழினிற் பெருக்கி
அதைப்பனி ரெண்டினிற் கழித்து
நண்ணிய சேடம் தன்னையா டாதி
ராசியாக் கொள்ளுக இடபம்

புண்ணிய விருத்தி கடகநற் கன்னி
பூரண ஆயுளுண் டாகும்
திண்ணிய சீயம் துலைகுடம் தனுசும்
செல்வமுண் டாகிடும் இனிதே. 706

*(886b : 17)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை ஏழால் பெருக்கி, பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி இராசி எனப்படும். மேடத்தை முதலாகக் கொண்டு இதனைக் கணக்கிட வேண்டும். இரண்டு (இடபம்) மீதியாக வந்தால், புண்ணியம் பெருகும்; நான்கு (கடகம்), ஆறு (கன்னி) ஆகியவை மீதி எண்களாக வந்தால், பூரண ஆயுள் உண்டாகும். ஐந்து (சிம்மம்), ஏழு (துலாம்), பதினொன்று (கும்பம்), ஒன்பது (தனுசு) ஆகியவை மீதி எண்களாக வந்தால், செல்வம் உண்டாகும்.

குறிப்பு: மீதி இல்லையானால் மீதி பன்னிரண்டு என்றுகொண்டு, பலன் காண வேண்டும்.

## இதுவுமது

இனியவாம் கர்ம புத்திர விருத்தி
இயம்புமீன் மிதுனமத் திமமாம்
தனியுறு மேடம் பிணிபல உண்டாம்
சொல்லிய விருச்சிகம் சிலுகாம்
நனிவரு முழத்தை நான்கினிற் பெருக்கி
நவில்பனி ரெண்டினிற் கழித்தே
குனிதரு சேடம் தனையும்ரா சியெனக்
கொள்ளவும் சிலலரை குவரே. 707

*(886b : 18)*

*(இ. ள்)* மேலும், இனிய கர்மங்களும் புத்திர விருத்தியும் உண்டாகும். பன்னிரண்டு (மீனம்), மூன்று

(மிதுனம்) ஆகியவை மீதி எண்களாக வந்தால் சுமாரான பலன்கள் கிடைக்கும். ஒன்று (மேடம்), மீதியாக வந்தால், நோய்கள் உண்டாகும். எட்டு (விருச்சிகம்) மீதியாக வந்தால், துன்பம் மிகும். மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை நான்கில் பெருக்கி, பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி இராசி என்று சிலர் கூறுவார்கள்.

### இராசி பொருத்தம்-பொது

சாற்றிய உதய இராசி
தன்னைநீ பரிந்து காணில்
போற்றிய மகரம் தீதாம்
புகழ்தரு மத்த தெல்லாம்
மாற்றிடும் மகரம் தன்னில்
மனையினாள் உத்த தாகில்
மாற்றிடும் மனைதான் ஒன்றென்
டறிந்தனர் இராசி நூலே. 708

(886 a : 59)

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைச் சரியாக அளந்து, பெருக்கி வந்த குழித்தொகையை நான்கால் பெருக்கிப் பன்னிரண்டால் வகுக்க, மீதி வரும் எண் இராசியாகும். இந்த மீதியாக வரும் ஒன்று முதல் பன்னிரண்டு வரையிலான எண்கள் முறையே மேஷம் முதல் மீனம் வரை குறிப்பனவாகும். இவற்றுள், மீதியாகப் பத்து வந்தால் வரக்கூடிய மகர இராசி தீமையைச் செய்யக் கூடியது. மற்ற அனைத்து இராசிகளும் நன்மையைச் செய்யக் கூடியவை. மகர இராசியில் மனைகோல, மனைக்கு உரியவன் அவ்விடத்தை விட்டு நீங்குவான்.

### இராசிப்பொருத்தம் - பொது

அகசெனனம் மூன்றும் அஞ்சும்
அரகுறு ஏழும் இன்னும்
பகருமொன் பானும் பத்தும்
பதினொன்றும் நன்மை யாகும்

இகழ்தரும் இரண்டும் நான்கும்
எட்டுடன் ஈராறும் ஆறும்
புகழுறு இராசி தன்னிற்
பொருத்தங்கள் உரைத்த காலே. 709

(இ. ள்) மனையின் குழித்தொகையை நான்கால் பெருக்கி, பன்னிரண்டால் வகுக்க மீதியாக வருவது இராசி யாகும். இவற்றுள் உதயமாகிய ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய இராசிகள் நன்மையைத் தருவனவாகும். இரண்டு, நான்கு, எட்டு, பன்னிரண்டு, ஆறு ஆகிய இராசிகள் வந்தால் இகழ்ச்சியைத் தரும்.

குறிப்பு: மீதி இல்லையானால் மீதி பன்னிரண்டு எனக்கொண்டு, கணக்கிட வேண்டும்.

## அம்சப் பொருத்தம்

அங்கிசப் பலனை அறைகுவேன் ஒன்பது
காண்தஸ்கர அம்சமே நாசம்
தங்குரெண் டதற்கே புத்தியும் தனமாம்
சேர்த்தி மூன்றுயிச் சத்தி
பொங்கிய சுகமாம் நான்குக்குத் தன்னியன்
பொருந்திய தனமுமாம் சுகமாம்
ஆங்கமா கியதோர் நரபதி வயது
அதுவுமே விருத்தியென் றறையே. 710
*(742 : 119)*

(இ. ள்) மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை நான்கால் பெருக்கி ஒன்பதால் வகுக்க வரும் மீதி **அம்சம்** எனப்படும். மீதியாக ஒன்று வந்தால், **தஸ்கர அம்சமாகும்.** இதன் பலன் அழிவு ஏற்படும்; மீதியாக இரண்டு வந்தால், **புத்தி அம்சமாகும்.** இதன் பலன் செல்வம் சேரும்; மீதியாக மூன்று வந்தால், **சத்தி அம்சமாகும்;** இதன் பலன் சுகமாகும்; மீதியாக நான்கு வந்தால், **தான்யாம்சமாகும்.** இதன் பலன் செல்வமும் சுகமும்

பெருகும்; மீதியாக ஐந்து வந்தால், **நரபதி அம்சமாகும்.** இதன் பலன் மனைக்கு உரியவனுக்குத் தீர்க்காயுள் உண்டாகும்.

## வேறு

அறைதரு முழத்தை நான்கினில் பெருக்கி
ஆவிரு ஒன்பதில் அறிந்தே
உறைதரு சேடம் அம்சம தாகும்
ஒன்றுதஸ்க ரம்சம் தீதாம்
முறைவரும் இரண்டு புத்திநல் லறிவர்
மூன்றெனில் சத்திநன் றாகும்
தரைபுகழ் நான்கு தானிய மாகும்
சாற்றரும் நன்மைய தாமே. 711

*(886 a : 19)*

## இதுவுமது

ஆறுக்குக் கிலீபன் கலகமாம் ஏழுக்
கருளிய நிர்பீதி சுகமழிவு
மூறியஎட் டதற்கு நிதனனு மாகும்
திருவே திருமெனும் வாசி
ஏறிய ஒன்பது அதற்குபி ரோசிகன்
எனும்புத்ர விருத்தியு மாகும்
ஊறுமங் கிசத்தின் பலனிது வென்றே
உண்மையாம் மயனுரைத் தனவே. 712

*(742 : 120)*

*(இ. ள்)* ஆறு மீதியாக வந்தால், **கிலீபாம்சம்.** இதன் பலன் கலகமாகும்; மீதியாக ஏழு வந்தால் **நிர்பீதி அம்சம்.** இதன் பலன் சுகம் உண்டாகும்; மீதியாக எட்டு வந்தால் **நிதனனாம்சம்.** இதன் பலன் செல்வம் அழியும்; மீதியாக ஒன்பது வந்தால், **பிரோசிகாம்சம்.** இதன் பலன் புத்திரர்கள் தோன்றுவர். இந்த ஒன்பது அம்சங்களுக்கும் மயன் உரைத்த பலன் இது உண்மையாகும்.

## வேறு

சாற்றுமோ ரைந்து நரபதி விஜயம்
தருமிகு மூன்றெனில் கிலீபம்
தூற்றுறு கலக மாகுமே யென்னிற்
சொல்லுக நிற்சுக மாகும்
மாற்றிடும் இருநான் குற்றிடில் நிதனம்
வறுமையுண் டாக்கிடும் இதன்மேல்
போற்றிய ஒன்பான் பிரசைமற் றதற்கு
புத்தியுடன் நன்மையுண் டாமே. 713

*(886b : 20)*

## இதுவுமது

புத்தி யம்ச மாகி வந்திட
பொன்னும் பொருளும் சேருமே
வித்தை புத்தியும் நித்தம் தருமோர்
வேள்வி தவசுகள் முடியுமோ
சித்தி தந்திடும் தெய்வ காரியம்
சனங்கள் வணங்கவே இசைதரும்
எத்திசை வருதிசை அத்திசை யோகமும்
உண்மை யாக உரைத்தனரே. 714

*(796 : 17)*

(இ. ள்) புத்தியம்சம் வருமானால் பொன்னும் பொருளும் மிகுதியாகச் சேர்ந்திடும். அறிவு வளரும்; தினமும் வேள்வி, தவம் முதலானவற்றை மேற்கொள்வர். அனைத்திலும் வெற்றி கிட்டும்; தெய்வ காரியங்களைச் செய்வர். அனைவரும் வணங்கும் பேறு பெறுவர். புகழ் உண்டாகும். அனைத்து யோகங்களும் கிட்டும் என்று உரைத்துள்ளார்.

## இதுவுமது

தானிய சத்தி அம்சம் வந்திடில்
தரணிலோ கத்தை யாள்வான்
மானியம் பூமி உண்டாகி வாழ்வோன்
மைந்தரும் வாழ்க்கையும் உள்ளவன்
சானிய காலாளும் ஆடுகள் மாடுகள்
சகல சித்தியுண் டாவான்
ஞானிய தருமவான் உதவி உள்ளவன்
என்று உரைத்தனர் தமிழோர். 715
*(796 : 18)*

*(இ. ள்)* தானிய சத்தி அம்சம் வருமானால், அம்மனைக்கு உரியவன் உலகை ஆளக்கூடியவனாக விளங்குவான். புதிதாக நாட்டை உருவாக்குவான்; நல்ல புத்திரர்களையும் நிறைந்த வாழ்க்கையையும் பெற்று விளங்குவான்; வேலையாட்களைக் கொண்டவன். ஆடு, மாடுகள் முதலான கால்நடைகளைக் கொண்டவன்; அனைத்திலும் வெற்றி பெறுபவன்; அறிவு மிக்கவன்; தருமம் செய்பவன்; கேட்டவர்க்கு உதவி செய்யும் நல்ல மனம் படைத்தவன் என்று தமிழ் கற்ற வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

## பொருத்தம் - அம்சம் - பலன்

சுகத்தில் ராச்சிய அங்கு சம்வரில்
சொற்கள் சொன்னதைத் தவறிடான்
யுகத்தில் நித்தமும் தானம் செய்குவான்
அன்னதா னமேயனு தினமும்
செகத்தில் உள்ள வர்தனை வணங்கிட
ஆட்சி அத்தத்தில் வாழுவான்
உலகத்தி லுள்ளவர் அறிய வேண்டிய
உண்மை யாகவே உரைத்தனர். 716
*(796 : 19)*

(இ. ள்) பிரோசிகாம்சம், நரபதி அம்சம் வருமானால், அம்மனையில் வாழ்பவன் சொன்ன சொற்களைத் தவறாதவனாக விளங்குவான். அன்னதானம் முதலாகிய பலதானங்களையும் தினமும் செய்வான். உலகோர் வணங்கிட ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து, செல்வம் மிக்கவனாக விளங்குவான் என்று உலகோர் அறிவதற்காக உண்மையை உணர்ந்த பெரியோர் எடுத்துரைத்துள்ளனர்.

## இதுவுமது

கல்லா லசுரம் தானம்ச மாகில்
கல்லையா துயரத்தை அடைவான்
இல்லாள் மனையில் உள்ளவர்க் கெல்லாம்
ஈளைநோய் சுரம்வந்து தோனும்
மல்லால் மனையில் மனையிடி கருப்பு
மங்கைக்கு வாக்குப்பட் டிருப்பான்
வல்லால் பிளைப்புத் தனம்மட் டெனவே
வகுத்தனர் அவர்க்குச்செந் தமிழோர். 717
*(796 : 20)*

(இ. ள்) தஸ்கர அம்சம் வருமானால், அம்மனையில் வாழ்பவன் சொல்லமுடியாத துயரங்களை அடைவான். அம்மனையில் வாழ்வோருக்குச் சுரம், ஈளை நோய் போன்றவைகள் தோன்றும்; மனை இடியும்; தீமைகள் வந்து சேரும்; செல்வம் குறையும் என்று செந்தமிழில் வல்லவர்கள் எடுத்தோதியுள்ளார்கள்.

## இதுவுமது

இடித்து மனையம்ச மாகில் இடறு
தலையில் இடிவிழுந் தழுகல்
கடித்து விஷங்கள் இறந்தவும் தீரா
கஷ்டநோய் வினைகளால் இல்லை

மடிந்திட மாடு கன்றுகள் சனங்கள்
மக்களும் கூடியே மாயும்
வட்டிகடன் வாரா தென்றுமே அறிய
வகுத்தனர் செந்தமிழ் நூலோர். 718
*(796 : 21)*

*(இ. ள்)* கிலீபாம்சம் வருமானால், மனைக்குரியவன் இடறி வீழ்வான்; தலையில் இடிவிழும், உஷ உயிரினம் கடித்து இறக்க நேரிடலாம்; தீராத கஷ்டங்கள் வந்து சேரும். மாடு, கன்றுகள், சுற்றத்தார், பிள்ளைகள் போன்றோருக்கு அழிவு நேரிடும்; வட்டிக்காகக் கொடுத்த பணமும், கடனாகக் கொடுத்த பணமும் திரும்ப கிடைக்காது என்று செந்தமிழ் வல்லவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

## இதுவுமது

தீதென அறியும் நோயங் கிசத்தை
தினம்தினம் மனையில்வந் துதிக்க
தாதுக ளுடைய தாய்தந்தை இறப்பு
தனக்கிடர் நோய்குறை வில்லை
காதுதான் செவிடு ஆக்கிடு மனையில்
கலகங்கள் கள்ளரால் பீடை
வாதுமே நடக்கும் என்றே அறிய
வகுத்தனர் செந்தமிழ் நூலோர். 719
*(796 : 22)*

*(இ. ள்)* நிர்பீதியம்சம் வருமானால், மனைக்கு உரியவனின் தாய் தந்தையருக்கு மரணம் நேரிடும். மனைக்குரியவனுக்குத் துன்பம் மிகும்; நோய்கள் உண்டாகும்; காதுகள் செவிடாகும். கள்வரால் துன்பங்கள் ஏற்படும். வீட்டில் கலகங்கள் விளையும்; வீண்வாதங்கள் நடக்கும் என்று உலகத்தோர் அறிய செந்தமிழ் நூல் வல்லவர்கள் எடுத்துரைத்தார்கள்.

## இதுவுமது

இடியும் நோய்கள் துக்கம் சுரமும்
இதுகள் மனைக்குத் தாக்கிடில்
அடிகள் தடிகள் வழக்கு நோய்கள்
அரண்ட சொப்பனம் காணும்
ஒடுங்கி நடுங்கி ஓடித் திரிவர்
உன்மத்தம் பிடித்த பேயனாம்
வடிவு குறையும் பூமியே போகும்
என்றே வகுத்து உரைத்தனர். 720

*(796 : 23)*

*(இ. ள்)* நிதனனாம்சம் வருமானால், துக்கம் உண்டாகும்; சுரம் முதலான நோய்கள் தோன்றும்; அடிதடிகள், வழக்குகள் உண்டாகும்; தீய கனவுகள் வந்து அலைக்கழிக்கும். மனைக்கு உரியவர் ஒடுங்கி, நடுங்கி, ஓடித் திரிவதோடு, உன்மத்தம் பிடித்தவர் போன்று இருப்பர்; அழகு குன்றும்; நிலம் கையைவிட்டுப் போகும் என்று வகுத்து உரைத்துள்ளார்கள்.

## இதுவுமது

திருட்டி யுள்ள புத்தி சத்தி
தானியம் ராச்சியம் சுகம்பதி
அஷ்ட லட்சுமி வந்து சேருவாள்
ஆயுசு வளர்ந்து வாழுமே
சிஷ்டருக் குதவி யாகு வானவன்
சேரும் பொருள்கள் மாடுகள்
இஷ்ட லட்சுமி குடியிருக் குமென்று
விரைந்து வகுத்தனர் தமிழோர். 721

*(796 : 24)*

(இ. ள்)' புத்தியம்சம், சத்தியம்சம், தானியாம்சம், நரபதியம்சம், பிரஜாம்சம் என்று சொல்லப்படும் இந்த ஐந்து அம்சங்களும் வருமானால் நன்மைகள் பெருகும். அஷ்ட இலட்சிமிகளும் மனையில் விளங்குவர்; ஆயுள் வளரும்: பெரியோர்களுக்கு உதவுவான்; பொருள்கள் மேன்மேலும் வந்து சேரும்: செல்வங்கள் சேரும்; கால்நடைகள் பெருகும் என்று தமிழ் வல்ல பெரியோர்கள் வகுத்துரைத்துள்ளனர்.

## இதுவுமது

தோகைசேர் குழலாய் ! அம்சம்
கூறிடில் ஒன்றும் ஆறும்
வாதைசேர் ஏழும் எட்டும்
வரும்பிணி மிகபொல் லாது
ஏதரு மத்த தெல்லாம்
இனியவை யாகும் என்க
போதுமே ஒத்தை யாகில்
புகழ்தரு மிகவும் நன்றே. 722

*(886 a : 60)*

(இ. ள்) மயில் தோகையைப் போன்று விரிந்து பரந்து கூந்தலை உடைய பெண்ணே! மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை நான்கால் பெருக்கி, ஒன்பதால் வகுக்கக் கிடைக்கும் மீதி அம்சம் எனப்படும். மீதியாக ஒன்று, ஆறு, ஏழு, எட்டு முதலான எண்கள் வந்தால், அவை முறையே, தினகரனம்சம், சுக்கிரனாம்சம், சனியாம்சம், இராகு அம்சங்களாகும். இவை தீமையைத் தருவன. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஒன்பது முதலான எண்கள் மீதியாக வந்தால், அவை முறையே சோமனாம்சம், குஜனாம்சம், புதனாம்சம், குருவாம்சம், கேதுவாம்சம் ஆகும். இவை நன்மைகளைத் தருவன. அவற்றுள்ளும் ஒற்றைப்படை எண்கள் மீதியாக வந்தால், மிகுந்த நன்மைகள் உண்டாகும்.

### அம்சப்பொருத்தம் - வேறு

சொல்லிய மந்தனிற் சோரிகு ரோதமாம்
புல்லிய ஆயத்தைப் பொருந்தநா விற்செய
துல்லிய நவத்தினிற் தொடர்ந்த காலரும்
நெல்லாங் கிஷமென நிகழ்த்து வார்களே. 723

*(இ. ள்)* ஏழுக்குச் சனிவாரம் நின்றால் அதனால் கலகமும் சோர பயமும் நடக்கும். ஆயத்தை நாலிற் பெருக்கி, ஒன்பதிற் கழிக்க, ஒன்பதுக்குள்ளாக வந்தது அம்சமாகும். *(சி. நூ. பா. : 36)*

நிகழ்த்திய தினகரன் நெற்பொ றாததாம்
புகழ்த்து சோமனும் போகம் குஜனுறில்
விகழ்த்துமா ரோக்கியம் வீசும் தாணியம்
தொடுத்துலா பமெனச் சொல்லு வாரரோ. 724

*(இ. ள்)* ஒன்றுக்கு-தினகரனங்கிஷம். அதனால் எந்நாளும் நிலைபெறாது வாழ்வான்; இரண்டிற்கு-சோமனங்கிஷம். அதனால் போக பாக்கியத்தை அனுபவிப்பான்; மூன்றுக்கு- குஜனங்கிஷம். அதனால் ஆரோக்கிய வசியம். நான்குக்குப் புதனங்கிஷம். இலாபம் தொடர்ச்சியாய் இருக்கும். *(சி. நூ. பா. : 37)*

### அம்சப்பொருத்தம்

நல்லதே நரபதி நல்கும் நற்பயன்
சொல்லிய கலகமும் சோரமு மாகுமே
எல்லலா மிராதொ னடுத்த மத்திமம்
புல்லுமே சிகியெனிற் புகலும் உத்தமம். 725

*(இ. ள்)* ஐந்துக்கு-நல்ல பலன்கள் கிட்டும். கலகம் உண்டாகும். ஆறுக்கு-சுக்கிரனங்கிஷம். அதனால் பலன் நடக்கும். ஏழுக்கு-சனி அங்கிஷம். அதனால் அந்த மனையில் ஜன விரோதமும், களவும் நடக்கும். எட்டுக்கு-

இராகு அங்கிஷம். அதனால் சகலமும் மத்திம பலனாய் நடக்கும். ஒன்பதுக்கு-கேது அங்கிஷம். அதற்குச் சகலமும் உத்தமம். (சி. நூ. பா. : 38)

### வம்சப் பொருத்தம்

புத்தியாம் முழத்தை ஒன்பதிற் பெருக்கிப்
புகன்றிடு நான்கினில் வகுத்துப்
பத்தியார் சேடம் வம்சம்ஒன் றாகிற்
பிராம ணர்மிகு சுகமாம்
சித்தியாம் இரண்டுக் குரியர்சத் திரியர்
சயமதாம் மூன்றுவை சியருக்
கொத்திடு தனமாம் நான்குசூத் திருக்
குற்றதா னியமென விளம்பே. 726
*(886 b : 21)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதால் பெருக்கி, நான்கினால் வகுக்க வரும் மீதி **வம்சம்** எனப்படும். ஒன்று மீதியாக வந்தால், பிராமணர். இதன் பலன் மிகுந்த சுகமும் காரியசித்தியும். இரண்டு மீதியாக வந்தால், க்ஷத்திரியன். இதன் பலன் வெற்றியாகும். மூன்று மீதியாக வந்தால், வைசியர் இதன் பலன் செல்வமாகும். நான்கு மீதியாக வந்தால், சூத்திரர். இதன் பலன் தானியமாகும்.

குறிப்பு: மீதி இல்லையானால், நான்கை மீதியாகக் கொண்டு கணக்கிடவேண்டும்.

### சாதிப்பொருத்தம்

சாதியது நான்கினுக்கே பலனே சொல்வேன்
தக்கதொரு பிரமகுலம் சாற்றக் கேளீர் !
நீதிபெறு யோக்கியமா மன்னர்க் கேதான்
நெறிதவறா கீர்த்தியுண்டு நிலைய தாக

சூதுயர்ந்து வைசயர்க்கே தனமாம் இந்தச்
சூத்திரர்க்கே தானியமாம் சுருதி யென்னும்
ஓதியதோர் தமிழ்கடலை நீந்த வல்லான்
உண்மையெனும் இனியதுவே உரைசெய் தாரே.727
*(742 : 112)*

*(இ. ள்)* மனையின் நீள அகலத்தை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி நான்கில் வகுக்கக் கிடைக்கும் மீதி **சாதி** எனப்படும். மீதியாக ஒன்று வந்தால், **அந்தணர் சாதி**. இதன் பலன் நல்ல நடத்தை; மீதியாக இரண்டு வந்தால், **அரச சாதி**. இதன் பலன் நீதிநெறி மாறாத புகழ் கிடைக்கும்; மீதியாக மூன்று வந்தால், **வைசிய சாதி**. இதன் பலன் செல்வம் வந்து சேரும்; மீதியாக நான்கு வந்தால், **சூத்திரசாதி**. இதன் பலன் தானியம் பெருகும்.

குறிப்பு: மீதி எதுவும் வரவில்லையென்றால், அதனை நான்கு எனக் கொண்டு கணக்கிடவேண்டும்.

## இதுவுமது

முன்னிற்கும் ஆயத்தை ஒன்பதின் மூட்டியே
நன்னிற்குங் குணிதத்தை நான்கினுக் கீயவே
பின்னிற்கும் ஒன்றெனிற் பிராமண சாதியாம்
மன்னர்க்கும் வைசியர் வாழ்சூத் திரர்களே. 728

*(இ. ள்)* ஆயத்தை ஒன்பதிற் பெருக்கி, நான்கில் வகுக்க, நாலுக்குள்ளாக வந்தது-சாதியாம். அதில் ஒன்றாகில்-பிராமண சாதி. இரண்டாகில்-க்ஷத்திரிய சாதி. மூன்றாகில் வைசிய சாதி. இந்த மூன்று சாதிக்கும் சகல காரியமும் வசியமாம். நான்காகில்-சூத்திர சாதியாம். அது எந்நாளும் சுகமில்லாமல் துயரத்தைக் கொடுக்கும். *(சி. நூ. பா. : 39)*

### கணப்பொருத்தம்

கணபலன் புகல்வேன் அசுபதி அத்தம்
கருதிய இரேவதி பூசம்
இணையுறு சுவாதி புனர்வசு மிருக
சீரிட மும்திரு வோணம்
துணையுறும் அனுஷம் ஒன்பதும் தெய்வச்
சுருதிசேர் கனமெனச் சொல்வாம்
இணர்வுளோர் அறிய உத்தமப் பலனாய்
உரைசெய்த மயனமிவ் வுரையே. 729

*(742 : 123)*

*(இ. ள்)* அசுவதி, அத்தம், இரேவதி, பூசம், சுவாதி, புனர்பூசம், மிருகசீரிடம், திருவோணம், அனுஷம் ஆகிய நட்சத்திரங்கள் ஒன்பதும் **தேவகணம்**. இதன் பலன் எல்லா நன்மைகளும் உண்டாகும்.

### இதுவுமது

ரோகணி பூரம் உத்தரம் பரணி
நண்ணுபூ ராடமும் உகந்த
ஏகிய பூரட் டாதிஉத் திராடம்
மிகைஉத்தி ரட்டாதி அறியலாம்
வாகுள திருவா திரையுடன் ஒன்பான்
மருவிய மனுஷ கணமாம்
பாகுயர் தமிழால் உத்தமம் என்று
பகர்ந்தனர் மயனுரை பாரே. 730

*(742 : 124)*

*(இ. ள்)* பூரம், உத்திரம், பரணி, பூராடம், பூரட்டாதி, உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, திருவாதிரை ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் **மனிதகணம்**. இவை நன்மையைத் தரக்கூடியவை.

**இதுவுமது**

கேட்டை மூலம் சித்திரை அவிட்டம்
கிளர்ந்ததோர் மகம்வி சாகம்
நாட்டுகார்த் திகையும் சதயம்ஆ யிலியம்
நவின்றனர் சொல்ஒன் பதுபார்
சேட்டைசேர் நிருதர் கணமென வகுத்துச்
செப்பிய திதுவாம் கேளு !
பாட்டியல் சிறந்த மயனுமிவ் வாறு
பகர்ந்தனர் புவியுள்ளோர் பாரே. 731

*(742 : 125)*

*(இ. ள்)* கேட்டை, மூலம், சித்திரை, அவிட்டம், மகம், விசாகம், கார்த்திகை, சதயம், ஆயிலியம் ஆகிய இந்த ஒன்பது நட்சத்திரங்களும் **இராட்சத கணம்.**

**இதுவுமது**

அனுடமான் தலைவண் டுடன்பரி சோதி
அத்தமி ரேவதி யோணம்
புனர்தமும் தேவ கணமுரோ கணிமுப்
பூரமுத் திரத்திரை யங்கள்
கனிவுறு பரணி ஆதிரை மனுஷ
கணமகம் சித்திரை சதயம்
சினமுறம் அவிட்டம் கேட்டை பாம்பொடு
கார்த்திகை ராக்கத கணமே. 732

*(886 b : 32)*

*(இ. ள்)* அசுவதி, மிருசீரிடம், புனர்பூசம், பூசம், அத்தம், அனுஷம், திருவோணம், இரேவதி, சுவாதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் தேவகணம். உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, திருவாதிரை, பரணி, பூரம், பூராடம், பூரட்டாதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் மனிதகணம். மூலம், அவிட்டம், சித்திரை, சதயம், கேட்டை, மகம், ஆயிலியம், விசாகம், கார்த்திகை ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் **இராட்சத கணம்.**

### இதுவுமது

கணங்களொன் றாக வரின்மிக நலமாம்
கருதிய தேவர்மா னிடரும்
இணங்கிய மத்திமம் இராக்கதவின் ணவரும்
எய்திடில் பகையுள தாகும்
துணங்கற அனையவர்க் காமா னிடருந்
துன்னிடின் மரணம தாகும்
மணங்கமழ் தகரப் புரிகுழல் நெடுவொண்
மதரரி பரந்தவாள் விழியே! 733

*(886 b : 33)*

*(இ. ள்)* மான் போன்ற ஒளிபொருந்திய பெரிய கண்களையும் சந்தன மணம் கமழும் சுருண்ட குழலையும் உடைய பெண்ணே! தேவகணமும் தேவ கணமும் நல்ல பலனைத் தரும்; மனித கணமும் மனித கணமும் நல்லது; இராட்சத கணமும் இராட்சத கணமும் நன்மையானது. தேவ கணமும் மானிட கணமும் மத்திமமான பலனைக் கொடுக்கும். இராட்சத கணமும் தேவகணமும் பகையுள்ளதாகும். மனித கணமும் இராட்சத கணமும் மரணத்தைத் தரும் என்பதை அறிவாயாக.

### நேத்திரப்பொருத்தம்

விளங்குசெங் கதிரோன் கிழமையே முதலாம்
மேவிய கிழமைமட் டெண்ணி
அறந்ததை மூன்றிற் பெருக்கிய தொகையை
அசுபதி முதற்கழித் ததன்மேற்
து...ங்குமொன் பதுநா ளொருகண் மற்றதன்
மேற்சொலும் பனிரண்டு நாளிருகண்
வளம்படு தன்மேல் ஆறுநாள் குருடாம்
திக்கிவை குருடுதீ தாமே. 734

*(886 b : 22)*

(இ. ள்) ஞாயிற்றுக் கிழமை முதல் கணக்கிட வேண்டிய கிழமை வரை எண்ணி அந்த எண்ணை மூன்றால் பெருக்கிய தொகையை அசுபதியை முதலாகக்கொண்டு கழித்து எஞ்சியுள்ள முதல் ஒன்பது நட்சத்திரங்கள் ஒற்றைக் கண்ணைக் கொண்டவை. அடுத்து வரும் பன்னிரண்டு நட்சத்திரங்கள் இரட்டைக் கண்களைக் கொண்டவை; அதனை அடுத்துவரும் ஆறு நட்சத்திரங்கள் குருட்டுக் கண்களைக் கொண்டவை. இவை தீமையைச் செய்வன.

குறிப்பு: **ஞாயிற்றுக்கிழமைக்கு,**

உரோகணி முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக் கண் கொண்டவை. அஸ்தம் முதல் பன்னிரண்டுட்சத்திரங்களும் இரட்டைக் கண் கொண்டவை. பூரட்டாதி முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக்கண் கொண்டவை.

**திங்கட்கிழமைக்கு,**

புனர்பூசம் முதல் ஒன்பது நட்சத்திரங்ளும் ஒற்றைக்கண் கொண்டவை. விசாகம் முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களும் இரட்டைக்கண் கொண்டவை. அசுவதி முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக்கண் கொண்டவை.

**செவ்வாய்க் கிழமைக்கு,**

மகம் முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக்கண் கொண்டவை. மூலம் முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களும் இரட்டைக் கண் கொண்டவை. ரோகிணி முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக்கண் கொண்டவை.

**புதன் கிழமைக்கு,**

அஸ்தம் முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக்கண் கொண்டவை. திருவோணம் முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களும் இரட்டைக்கண் கொண்டவை. புனர்பூசம் முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக் கண் கொண்டவை.

**வியாழக் கிழமைக்கு,**

விசாகம் முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக் கண் கொண்டவை. பூரட்டாதி முதல் பன்னிரண்டு நட்சத்திரங்ரளும் இரட்டைக் கண் கொண்டவை. மகம் முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக் கண் கொண்டவை.

**வெள்ளிக் கிழமைக்கு,**

மூலம் முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக்கண் கொண்டவை. அசுவதி முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களும் இரட்டைக்கண் கொண்டவை. அஸ்தம் முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக்கண் கொண்டவை.

**சனிக் கிழமைக்கு,**

திருவோணம் முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக்கண் கொண்டவை. உரோகணி முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களும் இரட்டைக்கண் கொண்டவை. விசாகம் முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக்கண் கொண்டவை.

இவற்றுள் - ஒற்றைக்கண் சமபலனைத் தருடம்; இரட்டைக்கண் எல்லாப்பலன்களையும் கொடுக்கும்; குருட்டுக்கண் தீமையை உண்டாக்கும்.

## இதுவுமது

ஆதி வாரம் உரோகணி இந்துவுக்
காம்புனற் வசுசேய்க்கு மகமதாம்
ஓதிடும் புதற்கத் தங்குரு வினுக்கோ
ளிற்விசாகம் வெள்ளிடுயர் மூலமாம்
கோதிலாச் சனிவோணம் மிவ்வாரத் திற்கூறு
நாள்முத லொன்பது ஒற்றைக்கண்
நீதிலால் தன்மேற் பனிரெண் டிருகண்
செப்பதற்கு மேலாறுங் குருடீரோ. 735

## இதுவுமது

முன்பதில் அருக்கன் வாரம்[1]
முதலாக மூன்றுக் கிட்டு
அன்புடன் முதல்நாள் கூட்டி
அடவிலே எண்ணி நீக்கி
ஒன்பதுக் கொருகண் ணாறு
உத்தபன் னிரண்டு கண்ணாம்
பின்புறு ஆறு நாளும்
கண்ணில்லை சந்தி ரர்க்கே.[2] 736

*(886 a : 67)*

---

1. ஆதி வாரம். 2. பிரித்துப்பாரே.

குறிப்பு: இரண்டு கண்ணுள்ள நாட்களே சிறப்புடையவை. எனவே, இவ்விதியை உணர்ந்து குருட்டு நாட்கள், ஒரு கண்ணுள்ள நாட்களை நீக்கி மற்ற நாட்களில் மனைக்கு முகூர்த்தம் வைக்க வேண்டும். சந்திரனுக்கு ஒரு கண் இருந்தாலும் சுபகாரியம் செய்யலாம் என்றும் கூறுவர்.

## வேறு

பரிதி முதற்கிழமை பாங்காக முற்றித்து
குதிரை முதலாக போக்கெண்ணி-நிரநிரென
ஒற்றைக்கண் ஒன்பதாம் ஈறா றிட்டைக்கண்
மற்றைக்கண் ணாறுங் குருடு. 737

*(சி. நூ. பா. : 262)*

## சூத்திரப் பொருத்தம்

ஆகிய முழத்தை எட்டினிற் பெருக்கி
ஐந்தினிற் கழித்தது சேடம்
பாகிடு முறையே சூத்திர மாகும்
பாலனே குமாரனி ராஜன்
வாகிடு நலமாம் விருத்தன் மத்திபம்
- மரணமே மிக்ககொடி தாகும்
நாகிள முலையாய் ! மற்றொரு விதமும்
நவிலுவர் முன்னைநூல் வழியே. 738

*(886 b : 23)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை எட்டினிற் பெருக்கி, ஐந்தால் வகுக்கக் கிடைக்கும் மீதி **சூத்திரம்** எனப்படும். ஒன்று மீதியாக வந்தால், **பாலசூத்திரம்.** இரண்டு மீதியாக வந்தால், **குமார சூத்திரம்.** மூன்று மீதியாக வந்தால், **அரச சூத்திரம்.** நான்கு மீதியாக வந்தால், **விருத்த சூத்திரம்.** ஐந்து மீதியாக வந்தால், **மரண சூத்திரம்.** இவற்றுள் பால சூத்திரம், குமாரசூத்திரம், அரச சூத்திரம் ஆகியவை நன்மை பயக்கும். விருத்த சூத்திரம் மத்திம பலனைக் கொடுக்கும். மரண சூத்திரம் மிகவும்

கொடியதாகும். முன்னைய நூலில் கூறியுள்ளபடி மற்றொரு விதமாகவும் இதனைக் கணக்கிடுவார்கள் என்பதை இளமைப் பொருந்திய பெண்ணே! அறிவாயாக.

**யோகம் - ஆதிவாரம்**

இரவிவா ரத்தில் உத்திரத் திரையம்
இரேவதி மூலநல் லோணம்
பரவிய அத்தம் அமிர்தயோ கமெனப்
பகர்ந்திரு மகம விட்டம்
விரவிய அனுடம் கேட்டைவி சாகம்
மேவிடின் மரணமென் றுரைப்பர்
உரமிகு சித்த யோகமற் றையநாள்
ஒண்ணுதல் கருங்குழல் அணங்கே! 739
*(886 b : 25)*

*(இ. ள்)* ஒளி பொருந்திய நெற்றியையும் கரிய கூந்தல் கற்றையையும் உடைய பெண்ணே! ஞாயிற்றுக் கிழமையில் உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இரேவதி, மூலம், திருவோணம், அஸ்தம் ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்**. ஞாயிற்றுக்கிழமையில் அவிட்டம், அனுஷம், கேட்டை, விசாகம் ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **மரண யோகம்**. ஞாயிற்றுக்கிழமையில் மற்ற நட்சதிரங்கள் வந்தால் **சித்தயோகம்** என்று சொல்லுவார்கள்.

**யோகம் - சோமவாரம்**

சோமவா ரத்தின் மிருகசீ ரிடநற்
சோதியோ ணம்புனர் பூசம்
சோமரோ கணியும் அமிர்தமாம் புரட்டை
திகழசு பதியுத்தி ராடம்
வாமவி சாகம் கார்த்திகை மகமும்
மரணமாம் மற்றைய நாட்கள்
காமரு சித்த யோகமென் றுரைப்பர்
கயல்புரை கருங்கணாய் இதையே! 740
*(886 b : 26)*

*(இ. ள்)* திங்கட்கிழமையில் மிருகசீரிடம், சுவாதி, திருவோணம், புனர்பூசம், உரோகணி ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்** . திங்கட்கிழமையில் பூசம், பூராடம், பூரட்டாதி, அசுபதி, உத்திராடம், விசாகம், மகம், கார்த்திகை ஆகிய நட்சத்திரங்கள் வந்தால் **மரணயோகம்.** திங்கட் கிழமையில் மற்ற நட்சத்திரங்கள் வந்தால் **சித்தயோகம்** என்று கயல்மீனை ஒத்த கரிய கண்களை உடைய பெண்ணே ! கூறுவாயாக !

### யோகம் - மங்களவாரம்

மங்கள வாரத்து ரோகணி மூலம்
வயங்குமுத் திரத்திரை யங்கள்
தங்கிடில் அமிர்த யோகமென் றுரைப்பர்
சதயமா திரைபூரட் டாதி
துங்கவி சாகம் சேருமேல் மரணம்
சொற்றிடா நாட்சித்த யோகம்
கொங்கவிழ் நறுந்தேன் ஊற்றிருந் தொழுகும்
கோதையங் குழல்மட மயிலே ! 742

***(886 b : 27)***

*(இ. ள்)* கோங்கு மலர்களில் இருந்து இனிய தேனானது தோள்களில் சிந்த அவற்றைத் தொடுத்து அணிந்த குழலை உடைய மயில் போன்ற பெண்ணே! செவ்வாய்க் கிழமையில் உரோகணி, மூலம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்.** சதயம், திருவாதிரை, பூரட்டாதி, விசாகம் ஆகிய நட்சத்திரங்கள் செவ்வாய்க் கிழமையில் வந்தால் **மரணயோகம்.** செவ்வாய்க் கிழமையில் மற்ற நட்சத்திரங்கள் வரில் **சித்தயோகம்.**

### யோகம் - புந்திவாரம்

புந்திவா ரத்தில் உத்திரத் தொடுமுப்
பூரமும் உத்திரா டமுஞ்சீர்
முந்துகார்த் திகையும் அமிர்தமாம் அத்தம்
மூலமி ரேவதி யவிட்டம்

உந்திய சீரசு வினியும் மரண
முறைதரா நாட்சித்த யோகம்
தெந்துவ ரனையரும் மல்லிதழு ரும்பும்
திதனையந் திரணமுலை யனமே. 743
*(886 b : 28)*

*(இ. ள்)* புதன் கிழமையில் வரும் உத்திரம், பூரம், பூராடம், பூரட்டாதி, உத்திராடம், கார்த்திகை ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்.** புதன் கிழமையில் அஸ்தம், மூலம், இரேவதி, அவிட்டம், அசுவதி ஆகிய நட்சத்திரங்கள் வரில் **மரணயோகம்.** புதன்கிழமையில் மற்ற நட்சத்திரங்கள் வரில் **சித்தயோகம்.**

### யோகம் - குருவாரம்

பொன்னவன் வாரத் தொளிர்புனர் பூசம்
பூசமச் சுவனிசு வாதி
மின்னிய மகமும் அமிர்தமாம் சதயம்
மிருகசீ ரிடத்தோ டுத்திரமும்
மன்னுகார்த் திகையா திரையும் ரோகணி
மரணமாம் மற்றைய நாட்கள்
பன்னிய சித்த யோகமாம் கன்னற்
பாகினும் இனியதேன் மொழியே ! 744
*(886 b : 29)*

*(இ. ள்)* வியாழக்கிழமையில் புனர்பூசம், பூசம், அசுவதி, சுவாதி, மகம் ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்.** சதயம், மிருகசீரிடம், உத்திரம், கார்த்திகை, திருவாதிரை, உரோகணி ஆகிய நட்சத்திரங்கள் வியாழக் கிழமையில் வரில் **மரணயோகம்.** வியாழக்கிழமையில் மற்ற நட்சத்திரங்கள் வரில் **சித்தயோகம்** என்பதை சக்கரைப் பாகைக் காட்டிலும் இனிமையான மொழியையுடைய பெண்ணே! அறிவாயாக.

### யோகம் - சுக்கிரவாரம்

சுக்கிர வாரத்தில் இரேவதி மூலம்
சொல்லுமச் சுவனியோ டத்தம்
மிக்கசீ ரமிர்த யோகமாம் கேட்டை
விளங்குரோ கணிதிரு வோணம்
தக்கஆ யிலியம் மகமொடு பூசம்
சார்ந்திடின் மரணம்மற் றையநாள்
புக்கிடிற் சித்த யோகமாம் சிலம்பு
புலம்புறு பசியமென் கொடியே! 745

*(886 b : 30)*

*(இ. ள்)* அழகான கால்களில் சிலம்புகள் இனிய ஓசையை எழுப்ப, நடைபயிலும் மெல்லிய கொடியைப் போன்ற இடையைக் கொண்ட பெண்ணே! வெள்ளிக் கிழமையில் இரேவதி, மூலம், அசுவதி, அத்தம் ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்.** வெள்ளிக்கிழமையில், கேட்டை, உரோகணி, திருவோணம், மகம், ஆயிலியம், பூசம் ஆகிய நட்சத்திரங்கள் வரில் **மரணயோகம்.** வெள்ளிக் கிழமையில் மற்ற நட்சத்திரங்கள் வரில் **சித்தயோகம்.**

### யோகம் - சனிவாரம்

மந்தவா ரத்திற் கார்த்திகை சதயம்
மகமுரோ கணிசுவா தியுமே
அந்தமாம் அமிர்த யோகமா யிலியம்
அத்தமுத் திரப்பூரட் டாதி
சுந்தர மிகுசித் திரைரே வதியும்
சொல்லிய மரணமாம் இதனுள்
வந்திடா நாட்கள் சித்தயோ கமதாம்
பூணுவாய் மதர்வழி அனமே! 746

*(886 b : 31)*

*(இ. ள்)* பெரிய கண்களையும் அன்னம் போன்ற நடையினையும் உடைய பெண்ணே! சனிக்கிழமையில்

கார்த்திகை, சதயம், மகம், உரோகணி. சுவாதி ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்**. ஆயிலியம், அஸ்தம், உத்திரம், பூரட்டாதி, சித்திரை, இரேவதி ஆகிய நட்சத்திரங்கள் சனிக்கிழமையில் வரில் **மரணயோகம்**. மற்ற நட்சத்திரங்கள் சனிக்கிழமை வரில் **சித்தயோகம்**.

## வயதுப் பொருத்தம்

நவிலும் அசுவதி ஆதியாம் மனையின்
நாள்வரை எண்ணியத் தொகையைப்
புவிபுகழ் ஐந்தில் கழித்துறு சேடம்
பொற்புறு சூத்திர மாமே
அவிர்முழ மதனைமூ வென்பதிற் பெருக்கி
அதையொடு நூறினில் வகுத்துக்
குவிதரு சேடம் ஆயுளை ஐந்திற்
குறைந்திடில் நிஷ்பல மாதோ ! 747
*(886 b : 24)*

*(இ. ள்)* அசுபதி முதலாக மனைக்குச் செல்லும் நாள் வரையிலான தொகையை ஐந்தில் வகுத்து மீதி வருவதைச் **சூத்திரம்** என்று கூறுவோரும் உண்டு. மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை, இருபத்து ஏழால் பெருக்கி, அதனை நூறால் வகுக்க வரும் மீதி **வயது** எனப்படும். இருபத்து ஐந்து வயதைக் காட்டிலும் குறைவாக இருப்பின், நன்மையான பலன் குறைவாக இருக்கும். அறுபது வயதைக் காட்டிலும் அகிகமாக இருப்பின் நன்மையான பலன்கள் பெருகும்.

குறிப்பு: மீதி இல்லையானால் நூறு மீதி எனக்கொண்டு, பலன் கணக்கிட வேண்டும்.

**இதுவுமது**

ஓதுமா யத்தைஏழு வொன்பதில் ஏற்றியே
நீதியாய்ச் சதந்தனிற் கழிக்க நின்றது
சோதிசேர் மனையினுக் காயுள் சேர்ந்ததே
வேதையாம் நாலுபத் தைந்துள் என்பரே. 748
*(சி. நூ. பா. : 47)*

*(இ. ள்)* ஆயத்தை இருபத்தேழிற் பெருக்கி, நூறிற் கழிக்க அதற்குள்ளாக நின்ற சேடம் மனைக்கு ஆயுள். ஒன்று முதல் நாற்பத்தைந்துக்குள்ளாக வந்த வயது எந்நாளும் வேதை யுண்டாம். நாற்பத்தைந்துக்கு மேல் நூறுக்குள் எவ்வளவு உயருகிறதோ அவ்வளவும் விசேஷம் என்பதாம்.

**தாரா பலன்**

இறைநாள் ஆதி மனையின்நாள் அளவுள்
எண்ணிஒன் பான்தனில் வகுத்துத்
தறைசொலும் சேடம் ஒன்றுமுன் முறையே
தாரையாம் சென்மமே பத்தே
அறைதுயர் விபத்தே க்ஷேமமே பிரத்தி
ஆம்உடன் மருவுச தகமே
குறைசெறி வாதயே நிலவுவிர தியமே
சேரிய பரமதேர மாமே. 749
*(886b : 36)*

*(இ. ள்)* மனைக்குரியவரின் நட்சத்திரத்திற்கும் மனை நட்சத்திரத்திற்கும் கண்ட தொகையை ஒன்பதில் வகுத்து, வரும் மீதி தாரை அல்லது தாரா எனப்படும். மீதி ஒன்று வந்தால், **சென்ம தாரை** எனப்படும். இதன் பலன் உடல் நலம் குறையும். மீதி இரண்டு வந்தால், **சம்பத்தாரை** எனப்படும். இதன் பலன் செல்வம் உண்டாகும். மீதி மூன்று வந்தால், **விபதாரை** எனப்படும். இதன் பலன் விபத்து உண்டாகும். மீதி நான்கு வந்தால், **சேமதாரை** எனப்படும். இதன் பலன்

செல்வம் பெருகும்; மீதி ஐந்து வந்தால், **பரதற் தாரை** எனப்படும்; இதன் பலன் காரியநாசம்; மீதி ஆறு வந்தால், **சாதக தாரை** எனப்படும். இதன் பலன் சர்வ சித்தியாகும்; மீதி ஏழு வந்தால், **வத தாரை** எனப்படும். இதன் பலன் தன நாசம்; எட்டு மீதியாக வந்தால், **விரதிய தாரை** எனப்படும். இதன் பலன் சர்வ சித்தியாகும். மீதி ஒன்பது வந்தால், **பரமதேர தாரை** எனப்படும்.

### இதுவுமது

கூறிய தாரை ஐந்துமூன் றேழும்
 கொலைபிணி வறுமையுண் டாகும்
தேறிய ஒன்று இரண்டுநான் காறும்
 திகழிரு நான்குமொன் பானும
மாறிலாச் செல்வம் புத்திர விருத்தி
 மகிழ்தரு வாழ்வுமுண் டாகும்
வீறில்மூ வொன்பான் தாரைவரில் பிணியால்
 மெலிகுவர் எழில்பசுங் கிளியே ! 750

*(886 b : 37)*

*(இ. ள்)* மீதியாக ஐந்து, மூன்று, ஏழு ஆகியவை வந்தால், முறையே பரிதற் தாரை, விபதாரை, வத தாரை எனப்படும். இவற்றிற்குத் தீங்கும் நோயும் வறுமையும் உண்டாகும். மீதியாக ஒன்று, இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது ஆகியவை வரின் முறையே சென்மதாரை, சம்பத்தாரை, சேமதாரை, சாதக தாரை, விரதிய தாரை, பரமதேர தாரை எனப்படும். இவற்றிற்குச் செல்வம், புத்திர விருத்தி, மகிழ்ச்சியான வாழ்வு முதலானவை உண்டாகும். இருபத்ே ஏழாவது நட்சத்திரம் வரில் நோயால் மிகவும் வருந்துவார்கள்.

# பாடல் முதற்குறிப்பு அகராதி


| | பாடல் எண் |
|---|---|
| **அ** | |
| அகசெனனம் மூன்றும் | 709 |
| அகத்தினுக் காகா | 102 |
| அகந்தனை எல்லை | 290 |
| அகம்புக உரைத்த | 498 |
| அகமுறும் சென்ம | 446 |
| அகலத்தை ஒன்ப | 524 |
| அகலத்தோர் பாதி | 145 |
| அக்கினி மீதில் | 34 |
| அங்காரகன் வாச | 199 |
| அங்கிசப் பலனை | 710 |
| அங்கிமே லாடு | 233 |
| அங்கியில் மனையை | 413 |
| அங்கி மிதுனம் | 460 |
| அச்சமான தரையும் | 450 |
| அசுபதி விசயம் | 661,664 |
| அஞ்சமூ வொன் | 624 |
| அஞ்சிலர சாள்வர் | 632 |
| அஞ்சினில் இரண்ட | 151 |
| அஞ்சிலே இரண்ட | 138 |
| அஞ்சுகோல் ஆதி | 618 |
| அஞ்சு மகமும் அனுட | 581 |
| அஞ்சொல் இருப | 623 |
| அடித்தலை இரண்டும் | 97 |
| அடித்ததோர் தேங்காய் | 527 |
| அடித்ததோர் முளையின் | 181 |
| அடியது கீழதாகும் | 131 |
| அடியும் தலையும் | 99 |
| அடுத்தமாம் கும்பம் | 216 |
| அடையும் பூத | 409 |
| அட்டமி உவா | 514 |
| அண்டத்துக் கொத்த | 295 |
| அண்ட முறவே | 152 |
| அண்ணிய முடித்தை | 706 |
| அதிபுக ழோனம் | 669 |
| அத்தியும் ஆலும் | 109 |
| அந்தகண் திக்கு | 35 |
| அந்தக் கிழமை | 425 |
| அந்தணர் தென்திசை | 289 |
| அபய னென்ற | 693 |
| அப்போ தலிந்த | 584 |
| அம்பலம் சிற்றூர் | 114 |
| அரியகுரு வாச | 202 |
| அருக்கன் நின்றது | 63 |
| அருக்கன் அலைகாட்டும் | 429 |
| அருமையாக அறைகின்றேன் | 368 |
| அலவனில் எழுந்த | 493 |
| அவனவன் காலினால் | 313 |
| அளந்ததோர் குழியில் | 26 |
| அழிந்திடுங் கோவில் | 547 |
| அறியதோர் சுவர்கன | 240 |
| அறியும் தெற்கு | 449 |
| அறுநான்காம் அடிய | 343 |
| அறைதரு முழத்தை | 711 |
| அறையும் சிங்கம் | 456 |
| அறையும் இந்திரன் | 46 |
| அனுடமான் தலைவன் | 732 |
| **ஆ** | |
| ஆகக் கிழக்கு | 685 |
| ஆகிய முழத்தை | 736 |
| ஆகுமங் காரகன் | 658 |
| ஆக்கிய குழியை | 27 |
| ஆசாரங் கட்டி | 186 |
| ஆடி ஆவணி | 217 |
| ஆடிகார்த் திகையாம் | 492 |
| ஆடித் திங்களில் | 287, 507 |

| | பாடல் எண் |
|---|---|
| ஆடிய கதவு | 227 |
| ஆடு தனக்கு | 257 |
| ஆடு துலை கன்னி | 459 |
| ஆட்சி யன்றி | 400 |
| ஆட்சி மீனம் | 501 |
| ஆண்டுதான் படியே | 22 |
| ஆதிரை செயம் | 673 |
| ஆதி வாரம் | 735 |
| ஆம்பொருள் கிழக்கு | 539 |
| ஆயுற்று அமையும் | 533 |
| ஆயம் நவ நான் | 626 |
| ஆய உத்திரம் | 401 |
| ஆய்ந்ததோர் ஏழ்பனி | 700 |
| ஆரிய மறைகள் | 312 |
| ஆருடந் தன்னில் | 595 |
| ஆலய முகப்பு | 546 |
| ஆலயம் நகரம் | 7 |
| ஆவணி ஆறு | 259 |
| ஆவணியும் ஐப்பசி | 485,486 |
| ஆறடி அகல நீளம் | 315 |
| ஆறுக்குக் கிலீபன் | 712 |
| ஆறெட்டுப் பன்னி | 588 |
| ஆனதா லரைமா | 467 |
| ஆனதோர் சுவர்வெ | 604 |
| ஆன மகரம் | 534 |
| ஆன அஞ்சில் | 148 |
| ஆன மரங்கள் | 137 |
| ஆன மேஷ | 531 |
| ஆனியுள் நாரி. | 286 |

**இ**

| | |
|---|---|
| இசைமுது தலைகீ | 133 |
| இட்டவெட் டுடைபனி | 616 |
| இடித்து மனையம்ச | 718 |
| இடியும் நோய்கள் | 720 |

| | பாடல் எண் |
|---|---|
| இடுமனை ஒன்றில் | 293 |
| இணங்கிய சுணங்கன் | 94 |
| இந்த நட்சத்திர | 408 |
| இந்தநல் விதமாய் | 298 |
| இந்திரன் கிழக்கில் | 299 |
| இந்திரன் செல்வம் | 42 |
| இந்திரன் திக்கிற் | 412 |
| இந்திரன் மூலை | 33 |
| இயற்று வட திசை | 302 |
| இரண்டு புள்ளின் | 489 |
| இரவி வா ரத்தில் | 739 |
| இராகுதான் வாச | 209 |
| இராசியின் பலனை | 701 |
| இருக்கவே ஆகு | 223 |
| இருங்குரு வெள்ளி | 438 |
| இருந்தது இன்பம் | 462,463 |
| இருந்த மாளி | 469 |
| இருந்த முதுதலை | 134 |
| இருபது அடிய | 338 |
| இருபதும் இரண்டு | 340 |
| இருபதும் எட்டு | 347 |
| இருபதும் ஒன்ப | 348 |
| இருபதும் மூன்றே | 342 |
| இருப்ப தாம்பொருள் | 599 |
| இலகிய மரங்கள் | 101 |
| இலகிய முழத்தை | 659 |
| இலகு சத்துரு | 468 |
| இலங்கு மேவட | 44, 452 |
| இலிங்கதா பர | 430 |
| இல்லறமே செய்ய | 307 |
| இளந்தலை இரண்டும் | 135 |
| இளமணல் சூனி | 56 |
| இறைநாள் ஆதி | 749 |
| இன்சுவை மண் | 73 |
| இனியவாம் கர்ம | 707 |

பாடல் எண்

ஈ

ஈசனார் திசையிற் 43, 421
ஈசன்மேல் மனையெ 420
ஈசானிய மூலை 40
ஈண்டிய தனத்தை 60, 61
ஈராரு அடியதாகில் 325
ஈரைந்தும் ஏழு 334
ஈரைந்தோ டேழு 335
ஈரொன்பதும் ஒன்று 337

உ

உக்கிர முகமும் 245
உதயவா ரூடம் 586
உத்தம சங்கு 478
உத்திரம் இசைப்ப 128
உத்திரம் இசையில் 129
உத்திர திசையின் 69
உத்திரம் நிலமை 665
உத்தரா யணமும் 487
உயிருட னிரண்டு 590
உய்யு நாகவம் 393
உருநான்கு இருப 344
உரைத்த ஆயத்தை 679
உரைதரு முழத்தை 645
உரைத்திடும் ஆவணி 362
உரைத்தி டும்பதி 399
உரைபுகர் வியாழம் 439
உழக்கிய குண்டை 214
உள்ள ராசி 360
உள்ளும் முறைமை 585
உற்றிடு திதியின் 650
உற்றிடு முகூர்த்த 529
உன்னுமேஷம் 451
ஊண்டிய கணபதி 474
ஊர்க்கு அக்கினி 572
ஊனமில் மனையில் 187

பாடல் எண்

எ

எங்கே மாதம் 248
எட்டடி யகல 318, 319
எட்டி தேத்த 105
எட்டினில் பன்னி 617
எட்டுமே ஆறு 328
எட்டுடன் ஆறு 329
எட்டுடன் இருப 346
எட்டுடன் ஒன்றி 615
எட்டுடன் பத்து 328
எட்டுடன் பன்னி 611
எண்டிசையும் கிழக்குமுதல் 41
எண்ணைந்தும் ஒன்றே 353
எத்திசை எனிலும் 249
எமனுட திசையிற் 414
எருக்குடன் அகத்தி 157
எரும்புதான் ஒழுக்கம் 95
என்ப திரண்டு 672
என்னவே எட்டினில் 643
என்னு முன்னாய 651

ஏ

ஏத்தும் சேடம் 149
ஏந்தும் இந்த 673
ஏய கன்னி 466
ஏழஞ்சும் 352
ஏழடி அகல 317
ஏழடி முழமும் 316
ஏழுடன் ஆற 327
ஏழுடன் இருப 345
ஏழுடன் உறும் 326
ஏழினில் மூன்றாம் 139
ஏழொன்பான் ஐந்து 646
ஏறிய பூரணை 654
ஏறுங் கன்னி 461
ஏறுடன் தண்டு 212

| | பாடல் எண் |
|---|---|
| ஏறும் போந்தை | 675 |
| ஏறெனும் இடபம் | 377 |
| ஏற்றம் சித்திரை | 254 |
| ஏற்றிய இரண்டாம் | 263 |
| **ஐ** | |
| ஐந்துக்குச் சத்துரு | 613 |
| ஐயாறு மூன்று | 351 |
| ஐம்பதிற் குறை | 355 |
| ஐம்பத்து மூன்று | 356 |
| ஐம்பதும் ஏழு | 357 |
| **ஒ** | |
| ஒத்த நிலையகல | 237 |
| ஒரு தெண்டுக்கொரு | 484 |
| ஒன்பதாம் அகல | 321 |
| ஒன்பது அகல | 320 |
| ஒன்பது இருப | 349 |
| ஒன்பது நாலாம் | 141 |
| ஒன்பது நான்கு | 142 |
| ஒன்பதும் ஏழு | 495 |
| ஒன்றாகி நின்ற | 193 |
| ஒன்றான சந்து | 559 |
| ஒன்றிரண்டு தனக்கு | 526 |
| ஒன்றுடன் இரண்டு | 314 |
| ஒன்றுநான் இரண்டும் | 655 |
| **ஓ** | |
| ஓடி அடைக்குமே | 235 |
| ஓடியே அடைக்கில் | 234 |
| ஓதிய நிலைநீ | 241 |
| ஓதிய வீடறை | 191 |
| ஓசம் பூமி | 74 |
| ஓதுமா யத்தை | 748 |
| ஓவிய மொன்றி | 629 |
| **க** | |
| கடகமும் சிங்க | 511 |
| கட்டினால் மாட | 454 |

| | பாடல் எண் |
|---|---|
| கட்டினால் மாளி | 75 |
| கணங்க ளொன்றாக | 733 |
| கணபலன் | 729 |
| கண்ட வக்கினி | 538 |
| கண்டுமே இராசி | 458 |
| கண்ணுற்ற மரங்கள் | 100 |
| கதிருக்கு மகமாம் | 577 |
| கதிரெனும் வாரம் | 423 |
| கரி முகன் உதிக்க | 692 |
| கரியகுயில் செய்யமயில் | 92 |
| கரியது காணும் | 53 |
| கருங்கல்லோ டெலும்பு | 589 |
| கருடனே கிழக்காம் | 310 |
| கருதிய ஆண்மர | 104 |
| கருதிய முகூர்த்தம் | 120 |
| கரும்பாலை போலே | 230 |
| கல்நிலை தேவர் | 243 |
| கல்லா லசுரம் | 717 |
| கல்லொரு செங்கற் | 59 |
| களத்திரத் தானம் | 584 |
| கள்ளிவேல் விடத்தை | 112 |
| கற்பமா தாயமுடன் | 609 |
| கனத்த மாரி | 365 |
| கன்னமாங் கோடி | 556 |
| கன்னி மேல்மனை | 415 |
| கன்னிமூ லையிலே | 36 |
| கன்னியரே வாசல் | 231 |
| கன்னியில் வீடுமனை | 381 |
| கன்னியும் துலாமும் | 267 |
| **கா** | |
| காட்டிய ஐந்தினில் | 681 |
| காட்டிய தூப | 121 |
| காணவே மரங்கள் | 98 |
| காணாச் சனிவாசல் | 206 |
| காணுந் துருவம் | 389 |

| | பாடல் எண் |
|---|---|
| காணும் ஐப்பசி | 364 |
| காத்தே தும்பி | 115 |
| காரியும் வாச | 207 |
| கார்த்திகையும் உத்திரமும் | 573 |
| கார்த்திகை மாதம் | 253 |
| காலற்ற நாள் உடலற்ற | 576 |
| காலற்றன உடலற்றன | 574 |
| காலதே வாசல் | 278 |
| காலிடை முன்னம் | 279 |
| காலை கிழக்காகும் | 275 |
| காலை வடக்காகும் | 273,274அ |
| கானகந் தன்னில் | 118 |

**கி**

| | |
|---|---|
| கிடந்தான் மேடம் | 256 |
| கிடப்பதும் இடக்கை | 276 |
| கிரணம் வீசும் | 367 |
| கிளர்த்திய விடையாழ் | 213 |

**கு**

| | |
|---|---|
| குடக்குத் தெற்கு | 569 |
| குடதிசை பிளக்க | 603 |
| குடதிசை வடக்கு | 62 |
| குண்டைமான் குடங்கள் | 261 |
| குப்பை பூனை | 695 |
| குபேரன் தன் திக்கு | 39 |
| குபேரன் வாழ்திசை | 419 |
| கும்பத்தில் வீடுமனை | 386 |
| குருவது வாசல் | 203 |
| குளமது இருந்தால் | 541 |
| குறுகும்செஞ் சேலயன் | 606 |
| குன்றிடா மூன்றினில் | 642 |

**கூ**

| | |
|---|---|
| கூறிய தாரை | 750 |
| கூறிய வாசல் | 551, 554 |
| கூறும் பரணி | 394 |

| | பாடல் எண் |
|---|---|
| கூறும் பூமி | 76 |
| கூறும்விர லால்முகடு | 570 |
| கூனி யானி | 284,506 |

**கெ**

| | |
|---|---|
| கெற்பமா தாய | 601 |

**கே**

| | |
|---|---|
| கேட்டை மூலம் | 731 |

**கொ**

| | |
|---|---|
| கொடி நரி கிள்ளை | 81 |
| கொடியே யாகில் | 683 |
| கொட்டிய முளைபிடுங்கல் | 567 |
| கொட்டு மூலை | 566 |
| கொண்ட வருணன் | 48 |

**கோ**

| | |
|---|---|
| கோடி கிழக்கு | 147 |
| கோடியொடு கோடி | 557 |
| கோல மறியல் | 502 |

**ச**

| | |
|---|---|
| சங்கது போலே | 226 |
| சங்குவின் நீள | 477 |
| சங்குதிர ளும்பருமன் | 479 |
| சட்டமாம் கோவிற் | 555 |
| சந்தனம் தந்தி | 482 |
| சந்திரனின் வாசலிட | 196 |
| சந்திரன் வாசலாகில் | 194 |
| சந்துக்கள் முடுக்கு | 550 |
| சயமிலை சதுர்த்தி | 652 |
| சன்னதி விளக்கு | 560 |

**சா**

| | |
|---|---|
| சாடியோ டெலும்பு | 593 |
| சாணான்கு கோல் | 631 |
| சாதியது நான்கினுக்கே | 727 |
| சாதியா தெனினும் | 625 |

| | பாடல் எண் |
|---|---|
| சாதியும் ஒன்ற | 162 |
| சாத்திய ஏகா | 648 |
| சாமது நிட்சயம் | 282 |
| சாம்பலோ டெலும்பு | 594 |
| சாரமுன் னாயத்தை | 657 |
| சாருமே நண்டு | 465 |
| சாரதசம் பாக்கி | 653 |
| சாலையின் மையம் | 499 |
| சாற்றிய உதய | 708 |
| சாற்றுமோ ரைந்து | 713 |
| **சி** | |
| சிகையுறு மஞ்ஞோ | 4 |
| சிங்கத்தில் வீடுமனை | 380 |
| சிங்கமும் பருந்து | 540 |
| சிங்கமே சிறப்பு | 688 |
| சிங்கம் சனிக்கில் | 218 |
| சித்திரை பத்தாம் | 258 |
| சித்திரை வைகாசி | 251 |
| சிறந்த சாதி | 166 |
| சிறப்புடைத் தேவர் | 222 |
| சிற்பனும் முழக்கோல் | 11 |
| **சீ** | |
| சீதநீர்க் குலைக்காய் | 153 |
| சீரது பெருந் | 374 |
| சீர்பெறும் ஆயத்தை | 636 |
| **சு** | |
| சுகத்தில் ராச்சிய | 716 |
| சுகமிலாச் சேனை | 676 |
| சுகவிரை யங்கள் | 677 |
| சுக்கிரவா ரத்தில் | 745 |
| சுக்கிரன் எதிரே | 515,596 |
| சுணங்க னென்றே | 689 |
| சுத்தமாய் நிறைய | 6 |

| | பாடல் எண் |
|---|---|
| **செ** | |
| செங்கதிரோன் பிறந்தநாள் | 579 |
| செஞ்சிதல் மனையில் | 607 |
| செப்பிடும் மதிசிறந்த | 396 |
| செப்பிடும் சித்திரை | 358 |
| செய்திடும் மனைக்கு | 542 |
| செய்யதோர் பூமி | 600 |
| செய்யபுன் செய்ய | 86 |
| செய்யவாஸ் துவின்தன் | 212 |
| செல்ல உத்தரம் | 403 |
| **சே** | |
| சேதம் மேற்கு | 18 |
| சேரும் உப்பு | 15 |
| **சொ** | |
| சொல்லிய கிணற்று | 565 |
| சொல்லிய மந்த | 723 |
| சொல்லும் கத்தரி | 13 |
| சொல்லும் ஆடி | 361 |
| சொல்லுமே திருவா | 366 |
| சொல்லு மேஷம் | 410,455 |
| சொல்லும் இந்த | 453 |
| சொல்லும் பஞ்சமி | 375 |
| சொல்லும் மேடம் | 455 |
| சொல்லுவேன் நீகுறித்த | 602 |
| சொல்வதே ஒன்றதற்கே | 640 |
| சொற்றதி லேகமா | 680 |
| சொன்னேன் எங்கள் | 644 |
| **சோ** | |
| சோமவா ரத்தின் | 740 |
| **ஞா** | |
| ஞாயிறு அலைய | 428 |
| **த** | |
| தக்கசனனம் நாலு | 432 |

| | பாடல் எண் |
|---|---|
| தக்க அட்டமி | 373 |
| தங்குமே சுகந்தா | 388 |
| தண்டொடு கடகம் | 266 |
| தண்டொடு வரிலயன் | 85 |
| தண்ணீர்த் துறைமுன் | 543 |
| தத்தும் கதிர்சேய் | 513 |
| தத்தும்சித்திரை | 255 |
| தந்தியின் கொம்பு | 480 |
| தந்தியின் மருப்பு | 169 |
| தயிரொடு நெய் தேன் | 72 |
| தரணியில் புவியில் | 294 |
| தருமணி சிறந்த | 497 |
| தலையற்றன உடலற்றன | 575 |
| தலைவிரி மொட்டை | 86 |
| தள்ளிய பின்பு | 9 |
| தனதுநா ளும்பின் | 427 |
| தனுசுமே செயமாம் | 702 |
| தனுவொடு மகரம் | 269 |
| தன்குலத் தோர்கள் | 300 |
| தன்றினுத் துடனே | 2 |
| **தா** | |
| தாக்குடை மூங்கி | 168 |
| தாண்டிய பசுவின் | 57 |
| தாண்டிய வருணன் | 44 |
| தாபரம் முதலா | 165 |
| தாம யோகமும் | 633 |
| தாலவுரி கேதகை | 173 |
| தாழ்விலா மனைநடு | 32 |
| தாளவை ஒன்று | 229 |
| தானிய சத்தி | 715 |
| திங்களில் இராசி | 250 |
| திங்களிற் சோதி | 524 |
| திங்களோர் இராசி | 247 |
| திடமாகிய தென்மனை | 220,221 |

| | பாடல் எண் |
|---|---|
| திண்டுமே எறும்பு | 55 |
| திதிபல னதுகேள் | 647 |
| திருட்டியுள்ள | 721 |
| திருநிறை யோணம் | 666 |
| திருந்துசல இராசி | 437 |
| திருமலி முழத்தை | 649 |
| திருவளர் மனையை | 629 |
| திறமை தெட்சண | 490 |
| **தீ** | |
| தீதென அறியும் | 719 |
| **து** | |
| துங்க பானு | 246 |
| துண்ணிய துவரை | 161 |
| துய்யதோர் வயிற்றில் | 277 |
| துலங்க வே எட்டு | 601 |
| துலங்குமா னான்கு | 164 |
| துலாத்தினில் வீடுமனை | 382 |
| துலாமொடு தேளும் | 509 |
| துளங்கு விரல் கிடகு | 163 |
| துன்னிய அணுவ | 158 |
| துன்னிய அணுஷம் | 160 |
| **தூ** | |
| தூயவோ ரைம்பத் | 443 |
| **தெ** | |
| தெற்கிலிரு குப்பை | 304 |
| தெற்கினிற் குப்பை | 303 |
| தெற்குடன் வடக்கு | 219 |
| தென்புறம் மேற்கு | 122 |
| தென்மேலை மூலை | 521 |
| தென்வடல் வாஸ்து | 272 |
| **தே** | |
| தேக்கதில் சந்து | 103 |
| தேசுயர்ந்த சுக்கி | 435 |

| | பாடல் எண் |
|---|---|
| தேடுமவர் சிந்தை | 535 |
| தேயுமே புரட்டாசி | 363 |
| தேரொடு தெருவொழ | 553 |
| தேவதைத் தானத்தில் | 296 |
| தேவர்க்குப் பட்டு | 175 |
| தேவால யங்களும் | 562 |
| தேளினில் வீடுமனை | 383 |
| **தொ** | |
| தொட்டலக் களத்தில் | 587 |
| **தோ** | |
| தோகைசேர் குழலாய் | 722 |
| தோன்றிய கெஜத்தா | 697 |
| **ந** | |
| நடுமனை கம்ப | 552 |
| நடுவுங் கிழக்கு | 45 |
| நட்டக்கால் பிடுங்கி | 568 |
| நடைதனில் முக்கால் | 265 |
| நண்டதில் வீடு | 379 |
| நண்ணுங் கேட்டை | 404 |
| நல்லதே நரபதி | 725 |
| நல்லதோர் சிற்பனு | 10 |
| நல்லதோர் முகூர்த்தம் | 52 |
| நவமிரு மூவஞ்சும் | 612 |
| நவிலும் அசுவதி | 747 |
| நவிலும் வில்லில் | 457 |
| நன்குலம் அவர்க்கும் | 301 |
| நன்மனை எடுப்போர் | 210 |
| நன்மையாம் பதிநாடி | 406 |
| நன்மையாம் ஆயத்தை | 641 |
| நன்மையே மகர | 705 |
| நன்றாம் ஆரியர் | 77 |
| நன்றாம் கிழக்கு | 305 |
| நன்றென விட்ட | 67 |
| நன்னாளி லும்மனை | 422 |
| நனிகதிர்சேய் ஆலைய | 512 |

| | பாடல் எண் |
|---|---|
| **நா** | |
| நாகமே நன்று | 690 |
| நாடித் தேதியின் | 508 |
| நாடிய பூமி | 21 |
| நாடிய வீதி | 563 |
| நாட்டிய ஆயத்தை | 703 |
| நாட்டும் புகழ்சேர் | 292 |
| நாயகன் இராசி | 211 |
| நாயகன் மனைக்கு | 520 |
| நாலுக்கும் மூன்றுக்கும் | 225 |
| நாலைந்து மொன்று | 339 |
| நாவலும் தேவர் | 224 |
| நாற்பதோ டைந்து | 354 |
| நாற்றிசை நடுவே | 54 |
| **நி** | |
| நிகழ்த்திய தினகரன் | 724 |
| நிருதி மேல்மனை | 416 |
| நிலமது முழம | 28 |
| நிலமனை தனக்கு | 188 |
| நிலைகொண் ஆயம் | 619,620 |
| நிலையக லங்கள் | 244 |
| நிறைந்திரு குடமே | 83 |
| நிறையநீர் வார்த்த | 30 |
| நிறைநெய் இலாத | 136 |
| **நெ** | |
| நெடுத்தகதி ரங்கி | 536 |
| நெய்யுடன் தயிரும் | 19 |
| நெறியும் சுக்கில | 370 |
| **ப** | |
| பகர்தரு முழத்தை | 634 |
| பகர்ந்ததோர் முலைக்கு | 178 |
| பட்டுநூல் கர்ப்பை | 174 |
| பண்ணிய கருப்ப | 494 |

| | பாடல் எண் |
|---|---|
| பண்ணிய சங்கு | 483 |
| பண்ணும் அஞ்சில் | 150 |
| பண்ணும் தலைவாசல் | 184 |
| பண்ணும் பாலவம் | 392 |
| பண்புடன் அகலம் | 144 |
| பத்திகள் பத்தி | 182 |
| பத்துடன் ஆற | 333 |
| பத்துடன் ஆறே | 332 |
| பத்துடன் ஒன்ற | 323 |
| பத்துமே அகல | 322 |
| பத்துமே இரண்டு | 324 |
| பரப்பினிற் பாதி | 143 |
| பரப்பினை ஒன்ப | 523 |
| பரவிய முழத்தை | 628 |
| பரவு திங்கள் பொன் | 441 |
| பரிதிநின்று பகர்மா | 395 |
| பரிதிமுதற் கிழமை | 737 |
| பரிவுடன் முன்னூல் | 1 |
| பரிவுறு முழத்தை | 668 |
| பருது புந்தி | 444 |
| பருதியில் வாசலாகில் | 195 |
| பருத்தி அகத்தி | 156 |
| பருத்தி இலுப்பை | 155 |
| பலபல வழியே | 70 |
| பலமதாம் ஆயத்தை | 670 |
| பலவு யர்ந்த | 146 |
| பல்லிகள் ஓந்தி | 25 |
| பழத்தொடு நெய்பால் | 3 |
| பாங்குடை பகண்டை | 90 |
| பாம்பிரண்டில் வாச | 208 |
| பாரில் அட்டமர் | 50 |
| பாரிற் கும்பம் | 472 |
| பாரினிற் பருந்து | 694 |
| பாருமே குபேரன் | 49 |

| | பாடல் எண் |
|---|---|
| பாரெலாங் கன்னி | 473 |
| பார்க்கும் கிழக்கு | 682 |
| பார்க்குங் கூரொன் | 238 |
| பார்மகன் புகர்பானு | 442 |
| பாலசிங்கம் பகரு | 464 |
| பானுவுறுங் கூறதனில் | 194 |
| **பி** | |
| பிரமனில் எழுந்த | 43 |
| பிறந்தநாள் இரண்டு | 426 |
| **பு** | |
| புகழ்கிழக் காதி | 699 |
| புதன்மதி வாசல் | 185 |
| புத்தி யம்ச | 714 |
| புத்தியாம் முழத்தை | 726 |
| புத்திரத் தான | 591 |
| புந்திவா ரத்தில் | 743 |
| புற்றும் பேரும் | 17 |
| புன்னையின் பூவை | 71 |
| **பூ** | |
| பூச மேவும் | 402 |
| பூதலத்திற் பூனை | 687 |
| பூமலி நான்குசாண் | 635 |
| பூராடம் அதுவே | 663 |
| **பெ** | |
| பெட்டியி லொன்ப | 496 |
| பெருகிய நாலாம் | 264 |
| பெருமையில் இரண்டேற் | 678 |
| பேசிய கதவு | 228 |
| பேசிய உத்தரம் | 674 |
| பேசும்வை காசி | 359 |
| பேந்திரம் கிழக்கு | 68 |
| பேய்துஷ் தானம்தனில் | 297 |
| **பொ** | |
| பொங்கிய புதனே | 504 |

| | பாடல் எண் |
|---|---|
| பொங்குகுரு க்ஷேத்தி | 434 |
| பொருத்தமனை இசையா | 561 |
| பொருந்திய மட்டக்கோல் | 170,171 |
| பொருந்து மந்தணன் | 440 |
| பொல்லா திந்த | 20 |
| பொல்லா தையா | 391,397,411 |
| பொன்னவன் வாரம் | 744 |
| பொன்னுடன் செம்பு | 58 |
| பொன்னும் அஸ்தம் | 398 |
| பொன்னொடு பூனை | 5 |
| **போ** | |
| போல மத்தளம் | 14 |
| போற்றும் ஏமன் | 47 |
| **ம** | |
| மகமது விருத்தி | 662 |
| மகரத்தில் வீடுமனை | 385 |
| மகரமாம் கும்பம் | 510 |
| மங்கள வாரத்து | 742 |
| மங்கை ஞாயிற்று | 503 |
| மட்டநீர் கொண்ட | 66 |
| மட்டமது கோலினை | 172 |
| மட்டுக் கொண்ட | 236 |
| மட்டுறை நிலைநீ | 242 |
| மண்டபம் திருக்ள | 564 |
| மதிக்கு நாலேழு | 597 |
| மதிதனில் காலை | 517 |
| மதித்த மூன்றதில் | 704 |
| மதிமகன் வாச | 201 |
| மதியுதிக்கக் கால்நாட்டி | 518,519 |
| மதுக்குடம் மாங்கி | 79 |
| மத்ததோர் திக்கு | 291 |
| மத்தியில் புத்து | 545 |
| மந்தமாம் வாத | 232 |
| மந்தவா ரத்தில் | 746 |
| மந்திரி ஏழில் | 445 |

| | பாடல் எண் |
|---|---|
| மயன்மரம் வெட்டும் | 119 |
| மரத்தினை முகூர்த்தம் | 127 |
| மருவியே மயனார் | 558 |
| மலர்தரு கற்பம் | 610 |
| மறையவன் தர்ப்பை | 177 |
| மறையும்நல் மறையோர் | 108 |
| மறையொலி ஓமம் | 516 |
| மற்றநாள் கிருஷ்ண | 371 |
| மனைதனில் வந்து | 288 |
| மனைதனை அளந்து | 311 |
| மனையது கோல | 78 |
| மனையது பெயர்த்து | 571 |
| மனையு முழக்கோ | 619 |
| மனையைச் சிறுகோ | 620 |
| மன்றலார் மனையின் | 189 |
| மன்னிய நிறைகுபட | 80 |
| மன்னிய முழமாம் | 630 |
| மன்று மேவும் | 448 |
| மன்னே பருந்து | 696 |
| **மா** | |
| மாடமா ளிகைகள் | 96 |
| மாதவி யாகாதம் | 390 |
| மாமரம் தேவர் | 106 |
| மார்கழி நாசம் | 260 |
| **மி** | |
| மிக்கதோர் ஆனி | 285 |
| மிட்டு மேஷ | 215 |
| மிதுனத்தில் வீடு | 378 |
| **மீ** | |
| மீனத்தில் வீடுமனை | 387 |
| மீனமும் ஆடும் | 270 |
| மீனொடு ஆடும் | 271 |
| **மு** | |
| முச்சதுரான பூமி | 23 |

| | பாடல் எண் |
|---|---|
| முடிபருத்து வட்டமிடில் | 525 |
| முடுக்கு வீதிகள் | 549 |
| முதுதலை இரண்டும் | 134 |
| முத்தத்து நீர்கள் | 306 |
| முந்திய முழத்தை | 627 |
| முப்பதும் ஒன்று | 350 |
| முப்புரிய தாயொடு | 176 |
| முளைதனை இடக்கை | 180 |
| முளையது சொல்லிற் | 179 |
| முன்பதில் அருக்கன் | 736 |
| முன்னிய முகூர்த்தம் | 522 |
| முன்னிற்கும் ஆயத்தை | 728 |
| **மூ** | |
| மூங்கிலிற் செய்த | 167 |
| மூங்கிலுடன் ஆச்சா | 107 |
| மூடிரண் டாக | 530 |
| மூவேழம் ஒன்று | 341 |
| மூவைந்து அகல | 330,331 |
| **மெ** | |
| மெள்ளவே பங்குனி | 369 |
| **மே** | |
| மேசத்தில் வீடுமனை | 376 |
| மேட மிடபம் | 447 |
| மேய வாஸ்து | 281 |
| மேல்பால் மனையோ | 65, 309 |
| மேலும் புதன் வாசல் | 200 |
| மேவிடு மனுஷம் | 405 |
| மேவிய ஒன்றி | 614 |
| மேவியசீ ரிலக்கன | 433 |
| மேவும் உத்திர | 488 |
| மேஷவை காசி | 491 |
| **மை** | |
| மையமே மனைகள் | 130 |

| | பாடல் எண் |
|---|---|
| **யோ** | |
| யோனியது எட்டதற்கே | 684 |
| யோனி பருந்து | 686 |
| **ரோ** | |
| ரோகனி பூரம் | 730 |
| **வ** | |
| வக்கனா வாகை | 111 |
| வருத்திடும் துலாம் | 471 |
| வஞ்சி கேளும் | 51,470,608 |
| வடக்கொடு கிழக்கு | 126 |
| வடபா லீசன் | 537 |
| வடபால் மனை ஓங்கி | 64 |
| வட்டமாம் பரிவே | 583 |
| வட்டமுக் கோணம் | 24,548 |
| வட்டமுங் கொடிய | 582 |
| வண்டுடன் அரணை | 93 |
| வத்திப்போய் சிறுக்கில் | 31 |
| வந்ததோர் மனையின் | 192 |
| வந்திக்கும் கதிர்க்கும் | 580 |
| வரவு சொல்லும் | 16 |
| வருங்கடக மகர | 436 |
| வருணனாம் மேற்கு | 37 |
| வருணன்மேற் றிசையிற் | 417 |
| வருமே சதயம் | 407 |
| வருமே வகுக்க | 399 |
| வரும்பெரும் செல்வம் | 308 |
| வலமிகச் சொலினும் | 88 |
| வளவது வாசல் | 183 |
| வளையொடு விட்டம் | 12 |
| வன்னி கன்னி | 113 |
| **வா** | |
| வாங்கிய நேங்காய் | 528 |
| வாணமாம் சுவரில் | 605 |
| வாத்துவின் கிடைய | 280 |

| | பாடல் எண் |
|---|---|
| வாத்து புருடன் | 283 |
| வாலு யோனி | 691 |
| வாயு மேல்மனை | 418 |
| வாயுமூலை தன்னி | 38 |
| வாரநற் திதிநாள் | 431 |
| வாரநாள் கொள்ளும் | 660 |
| வாரமது ஏழுக்கு | 656 |
| வாழ்வுறும் மனையில் | 544 |
| வாரது கேளாய் | 87 |
| வாறிட்டார் துவிதிகை | 372 |
| வானமாம் சுவரி | 605 |
| வானரம் சுனங்கன் | 82 |
| வானுடய தேவர் | 481 |

**வி**

| | |
|---|---|
| விசையம் தரும்பிணி | 667 |
| விண்ணோங்கும் இலவு | 154 |
| விருப்பதை ஒன்பதாய் | 190 |
| விரிகதிர் மாமகம் | 578 |
| விருத்தியாம் சிம்மம் | 698 |

| | பாடல் எண் |
|---|---|
| வில்லினில் வீடுமனை | 384 |
| வில்லொடு மகரம் | 268 |
| விழுந்திடும் மரத்தின் | 125 |
| விளங்குசெங் கதிரோன் | 734 |
| வெட்டிய மரத்தின் | 123 |
| வெட்டிய வாயில் | 124 |
| வெல்லிடும் யோகம் | 639 |
| வெள்ளிதனில் வாசல் | 204 |
| வெள்ளிய புறா | 89 |
| வெள்ளியும் வாச | 205 |
| வெள்ளிவி யாழன் | 500 |

**வே**

| | |
|---|---|
| வேதநான் மறைக | 2 |
| வேணுவோர் எட்டது | 159 |
| வேந்தன் சிங்கம் | 532 |

**வை**

| | |
|---|---|
| வைத்த சுவர்கன | 239 |
| வையதோர் வியாழம் | 505 |

## பின்னிணைப்பு -2

### உதிரிப் பாடல்கள்

அடுத்தமனை சுவரதுவும் வகையில் லாட்டால்
அறம்புறமும் கோபத்தில் சேத்துப் போடு
விருத்த இதற் கப்பாலே போனால் குற்றம்
வீறாகும் மனைபாழாம் விரும்பி செய்யே. 1

*(886 c : 31)*

ஒன்றிய தெருக்கள் இருவீதி நடுவெல்லை
கண்டிரு பத்தேழு பனிரெண்டு நவபாகம்
கொண்டு சரியான மனையுமங் குணமதாகும்
துண்டுகுறை சேருவது சூழம்மனை பாழே. 2

*(886 c : 33)*

நாற்றிசை தெருக்கள் சந்து
நடுபட்ட மனையொ ழுங்கை
பாத்து ஒன்பது குறக
பகர்ந்திரு மனைசே ராமல்
சாத்திய வரையிக் குள்ளே
சரிமனை மிகவும் நன்றாம்
சேர்த்திடு மனைகள் சேரில்
சிதைந்திடும் மனை பாழாமே. 3

*(886 c : 24)*

மேவுமா திரையே நண்டில்
இல்லற மனையில் சேயில்
ஏவிய கோண நான்கும்
எட்டியின் முனையை நாட்ட
தீமிரு கங்கள் வீட்டில்
எலிகளும் நாவாய் தானும்
தாவிடார் மனையில் சாரார்
சாருமே மரணம் தானே. 4

*(886 a : 165)*

நல்ல மனையில் சுவருக்கன
திசையில் பிள்க்கில் நாசம்சேர்
அல்லல் அறும்பொன் சாவுபுதன்
அழகாம் புகர்மேல் ஆக்கமதாம்
கொல்லுங் காரி மதிநேயம்
கூத்தன் பாம்பாம் எனக்கொள்க
வெள்ளை அருக்கன் சேய்குருமால்
புகர்சுன் பதிபாம் பெண்டிசைக்கும் 5

(886 a : 181)

அரியதோர் சுவர்க் கனத்தை
ஆறது கூறு செய்து
நிலைப்பாக நின்ற கூறில்
நிலையது மையம் தன்னில்
சரிவர இலக்க வேண்டாம்
சாஸ்திரப் படியே நீதான்
பரிவாக ஒன்று தள்ளி
பாங்குடன் வைக்க நன்றே. 6

(886 c : 48)

மூன்றுநிலை எதிராகி முன்கம்பம் பின்னழியும்
தூன்றுநிலை நாலாகில் சுகமுண்டாம்- வேண்டி
எதிராக நிலைவைத்தால் ஏணிப் படிபோல
முதிராமல் முன்னுயர வே. 7

(886 c : 28)

ஒத்தைதான் ஒத்தொகை ஒத்தேயோடேத்தவரி
ஒத்தே பிளாச்சு குடியெட்டும் - மெத்தநல்ல
ஒத்தேநிலை அனுகூலம் நேர்கம்பம் உத்திரமும்
நத்தைபட லாகாது காண். 8

(886 c : 27)

ஊர்தல் மரைகள் சாதி
உகந்த மன்நவர் திசைகள்
சார்பு பலகணி வாசல்
தக்கதோர குழியில் காணார்
நீர்விடல் மண்ணி வித்தம்
நீள்மனை பேத்துக் கட்டல்
வேர்தரு உழவு மிக்க
திருப்பிடம் அனைத்தும் சொல்வாம். 9

(886 a : )

ஓதுபொன் புகரொா துங்க
ஒண்டொடி கர்ப்ப மேய
மேதகு முனைகள் செய்ய
விளங்கிய கர்ப்பக் கேடாம்
சீதவெண் மதியம் போலும்
சிறப்புள்ள முகத்தி னாளே !
மாதவன் அறியச் சொன்னோம்
மனைவிக்கே மரணம் காணும் 10

(886 a : 189)

தெற்கொடு கைதெற் குணுப்பு
தேவா லயத்து மதிளுக்குமின்
ஊர்க்கும் அக்கினி எமன்நிருதியில்
ஊர்கு ளங்கள் உத்தித்திலிடில்
பார்க்கவே விவரப் புகுத்தல்
பார்வைநார் பதடி தீரும்
தாற்குள் வரவு செல்வமுடன்
சம்பத் துண்டாம் மனைசெய்யே. 11

(886 c : 46)

வாசமாம் பூமி தன்னில்
வகுத்துநாற் கூறு செய்து
பேசிமா நிதிபூ தங்கள்
பெரியதோர் வித்தை செல்வம்

ஈசனார் கண்டம் தன்னில்
இன்மனை எடுக்க வேண்டில்
ஓதினார் தமிழி னாலே
உத்தமம் இதுவே என்றார். 12

*(886 a : 133)*

நன்குலம் தானவர்க்கும் நாவிலயன் பூனவாகம்
தென்திசையும் மேல்திசையும் இருவர்வை சியருக்கும்
பொன்குலவு மேலவை பூதல மலர்க்கு
வன்குல வடதிசையும் கீழ்த்திசையு மாகும். 13

*(886 a : 173)*

## நடுமனை

## மனையின் அமைப்பு

பட்டமாங் குறுகி நீளம்
பார்வையாய் ஏத்தி மூன்றில்
முட்டவே தொகையைக் கட்டில்
மூன்றுக்கு ஈந்த சேஷம்
திட்டமாம் ஈசன் மூலை
சிறக்கமுன் வைத்தும் எண்ணி
நட்டமில் லாது வந்த
நடுமனை அதுவென் பாரே. 14

*(886 a : 134)*

## கதவு குணம்

உத்திரத்துப் பத்திதனை ஒன்பது கூறுசெய்து
பித்துவலம தாக்கிப் பிறப்பட்ட பத்திதனை
அத்துகை நடுவைத்து அகலத்தை துயர்நீக்கி
ஒத்துமத் துயரமில்லை ஒள்ளிய னுரைத்தநூலை. 15

*(886 a : 174)*

முனைக்கிந்திரன் சிலரீசான முதலாக வைத்து
தனச்செலவாம் துர்ப்பலம் தநலாபம் தருமுத்தமம்
நினைக்கும் தனமும் சவுரியம் குரோதம் நீடுபயம்
தனக்கும்ப மாமுலை மாதே ! தரவெட்டுஞ் சாத்துகவே.

*(886 a : 229)*

எண்ணும் வடக்குச்சுவர் வாய்வுமூலை இடமுதலாய்ப்
பண்ணிய பாரிக்கிச் சேதமும்துற் பலமானியுடன்
வெண்ணிருந் தானியம் பொருள்வரத் தாகுமிகு சம்பத்து
கன்னியே வீதிவுட னாற்பத்தெட்டும் கதவுக்கென்னே. 17

*(886 a : 228)*

சேயுதிக்க மண்பூசி தினகாணில பூசித்துத்
தாய்சனிக்குக் கதவு தாளிட்டு - ஆய்மனைக்குள்
வாசலுக்குள் மாதே மாளிகைக்குள் நாயகமே
பூசித்து நித்தம் புகழ். 18

*(886 a : 187)*

கடுகுடுங்கு கொத்து மருதம் வசம்பு
கனமொடு குக்கில் வகைதான்
சுடுசுக கெருக்குள பமிதுக் குத்து
கடீர்புடலோ மனையில் கடிமிக்க தூற
மிருதேள் முசுட்டைக் குமியசவ மகாவிடம்
முதற்பேய்கள் தனதானியங்கள்
மிகுமென்பார் மேன்மை யவரே. 19

*(886 a : 190)*

காலில் நீளமிரு நாலுசெய்து கதவின்
படிகநடு அறதை சேஷபாகம் நவபாகம்செய்து சீழும்
நாலுயன் மதன்மேல் அஞ்சதாம் ஆதி
அத்தமோ ரத்துசெய்து அதிலெட்டறைய கண்டதாம்
ஓதுமோதும் விரலொன்றும் மூன்றரையும்
உண்மையாறு விரலொக்குமே. 20

*(886 a : 176)*

அங்கார கன்மத் தானத்துக்
கதிபனை தாகுருவே
தன்காத லுடனோக்கு நீர்அவர்
தங்களைச் சாரில்

இங்காசை யினுதைய செயில்
வருவார்முன்ன மிறைசேர்
செங்கார் புரிசெண் டனதிகையுங்
குருத்தொய்தே. 21

(886 a : 203)

**யாத்திரை**

இலகதிகள் சூலம்போல மூன்றுங் கீறி
இடமாக யாத்திரைநாள் நடுவே வைத்து
வலமாக இவைகளெல்லாம் தொட்டே எண்ண
வழிபோறவன் பிறந்தநாள் நடுவே யாகில்
பலமிகவே உம்டாகும் பயனங் கண்டீர்
பக்கத்தில் ஈராறும் பயமுண் டாகும்
தலையான கடைச்சூலச் செதிரே யாகில்
தலையரிவன் உயிர்விடுவன் சாவாங் கண்டீர்
தப்பாது சிவனறியச் சாத்தி னோமே. 22

(886 a : 222)

காலின் நீளம் ஈரைந்து
கூறு செய்து கவின்படிக்கு நடு வாறரை
மூல சேட மோரேழு
செய்து மூன்று கூறாக்கு படிக்கனம்
நாலு கூறது மேல்தேகம்
நவின்று மூன்று மொடுகீழதே. 23

(1005 a)

**ஆயுள்**

பொருத்ததில் வந்த ஆயுள்
பொருந்திய கு......காகும்
பொருத்தமச் சுக்கு மூன்றும்
பிறங்குமண் டபத்துக் கைந்தாம்
திருத்தமாங் கருக்க வலுக்கு
செப்புஈ ரைந்தாம் கல்லு
உரைத்திடும் உச்சி மூடில்
ஒருநூறு பங்க தாயே. 24

(886 c)

**சீவன் பார்க்க**

உத்ததோர் துரகம் பத்தும்
உதிரியாய் பூர்ம சீவன்
கத்தோர் றேஷப ணும்
காட்சியாய் அர்த்த சீவன்
மெத்ததோர் வாழ்வுண் டாகும்
வினையொரு தீதும் இல்லை
அத்ததோர் புரட்டை மூன்றும்
அரிதியாய் உறைசெய் தாரே. 25

*(886 b : 44)*

**பஞ்சத் துருவம்**

மிருத்துவுக்கு நால தாமே
மிகுமக்கினிக்கு பனிரெண் டாகும்
நத்திய ராஜன் பத்து
நலமில்லாச் சோறாம் எட்டாம்
சித்தியில் லாத ரோகம்
தெசமிபஞ் சமியும் சேர்த்து
பத்தியாய் உலகில் யார்க்கும்
பஞ்சகத் திருவம் கூட்டே. 26

*(886 b : 43)*

**மனைக்கு வயது**

மனையில் வந்ததின் முதலாய்
மாமுதல் வறையில் எண்ணி
இனித்துடன் நாலிற் கீந்து
இருந்ததே நூறில் வெத்தி
பனிக்கடல் சூழும் இந்தப்
பாருள்ளோர் மனைத னக்குக்
கனிவுடன் வயதாம் என்று
கருதியே மயனார் சொன்னார். 27

### வாசல் வைக்க

தலக்கடை புறக்கடை தான்சம னாகிடில்
தான்பெறும் செல்வம் தாழ்வது மில்லையே
தலக்கடை உயர்ந்து புறக்கடை தாழ்ந்திடில்
தான்பெறும் செல்வம் தாழ்வதும் இல்லையே
தலக்கடை தாழ்ந்திடில் தாழ்வது வந்திடும்
புறக்கடை உயர்ந்திடில் புலப்படும் துன்பமே.28

(886 b : 52)

### கரணம்

சதிர மாந சமனெறுநீ ளத்தை
பதிர மாய்பணி ரெண்டாய்ப் பகர்ந்துபே
முதிர ஐந்துமுன் நீளத்தைக் கூட்டியே
மதிர மாயன் மதித்தார் கரணமே. 29

(886 : 51)

### வருஷம், மாதம்

ஏய்ந்திடு முழத்தை இணங்கியே இருபத்
தேழினில் பெருக்கிய தொகையை
வாய்ந்திடும் அறுபதி னிற்கழித் திடவே
வரும்பிரப வாதியாம் வருடம்
ஆய்ந்திடு மதலையாங் கினிற் பெருக்கி
ஆறிரண் டினிற்கழிப் பதுதான்
தோய்ந்திடு மாதம் சொல்லுவ ரன்னோர்
சுரிகுழற் பனைமுலை மாதே ! 30

(886 c : 46)

கருதிய பூமி தன்னில்
கனத்தநீர் கிழக்குத் தெற்கு
பெருகிய செல்வம் உண்டாம்
பிறம்பிக்கும் வடக்கு மேற்கும்

உருகிய உறைநீர் தாழ்தல்
　　உத்தமம் மேல்நீர் காண
மருமலர்க் குழலாய் கேளாய்
　　மனைவிதி இடந்த தென்றே. 31

(886 a : 152)

### பலகணி

வடசார் தென்சார் மருவும்
　　தென்சார் வடசார்
ஊவே கீழ்சார் மேல்சாரம்
　　உற்ற மேல்சார் கீழ்சாராம்
போதவே வலமாம் பெருக்கப்
　　பேணிப் பலகணி தாந் விட்டால்
தீதுவே நீங்கும் குற்றமில்லை
　　செய்து வார்கோளு மிக்கோரே. 32

(886 a : 84)

### பொது

காசினியில் மூவோர்க்குக் கடுறுகத்தை
　　துளையாக்கிக் காலி மாய
தேசமுடன் அடுத்தறியன் நெல்லுத் தீயன்
　　திகழ்ச்சிஇலாக் கொழு முனையைக் கள்ளர் கொள்வார்
மொழிதன்னை மரண மாகும்
　　வசையுடனே இவையறிந்து விரும்பு வீரால்
ஈசனுடைய ஈராறும் உழவாம் என்று
　　இக்கரு மனல்புலவோர் இயம்பு வாரே. 33

(886 a : 220)

பருதிநின்ற நாள்தன்னை மைந்தின்
　　பகர்ந்திட்ட நாளுடனே ரெண்டும் சேர்த்து
விருதமுடன் நேர்கிழக்கு மூன்றும் வன்னி
　　வீட்டிலிரு மூன்றப்பால் ஐந்தே யாகும்

நிருதிதனி நேமூன்று மேற்கு ஐந்து
நிலைவாய்வு மூன்றுடனே வடக்கு ரெண்டாம்
அருதருந்து யோச்சூறல் மூன்று நான்கு
ஆகாது மத்தெல்லாம் ஆகும் தானே ! 34

*(886 a : 221)*

அண்டு கிழமை யதுதனக்கு
அஞ்சாங் கிழமை ஓரைந்தாம்
ஒண்டுக் கிரண்டரை நாழிகைதான்
உதிக்கு மதற்கா ளுங்கிழமை
மண்டில் அருக்கன் புகர்புந்தி
மதியும் சனியும் சேர்பலன்கள்
பொண்டு மனமும் எப்போதும்
புகழ்ச்சி மனையில் புகற்கலையே. 35

*(886 a : 76)*

ஆரணங்கே பூரம்வகை கேட்டை மூலம்
அரவம்வி சாகம்அனு சம்சா மென்றார்
இராசியுடன் மூவிருத்தை தசைசாலும் உறவு
அதுலேவரு கினண்ட செம்பொன்மதி மேதை
வெள்ளி வருகின்ற வாரமதிலே புரமுந்து கோயில்
நகரங்கள் வீடுபுக நன்றதாகும் இதுவே. 36

மங்கைமுதல் மூளனாவி யின்தலை கிழக்காம்
மன்னுசிலை ஆதிகரம் உண்டுதலை தெற்காம்
பொங்குதலை மேற்குமுதல் மீனமுதல் மூன்றில்
பொத்துமீது னத்தினொடு மீண்டது வடக்காம்
மங்கய்கு தெற்கோடு வடக்குமா கிரகச்
சொள்லுநிலை வீடுசெய் வதனையாகும்
செங்கிரண் வண்டிசை மேற்குமுக மாகில்
செய்யவினி தாய்மனைகள் தெற்கொடு வடக்கே. 37

*(886 a : 196)*

அடுப்புடன் ஐந்தும் அனுஷமுதல் நான்கு
முடிப்பிரிப்ப தாகில் இம்மூன்று-நடுகடலில்
கோல்போட்ட நாளும் கொடியபூ ரட்டாதி
நூல்கொண்டு போடாத நாள். 38

*(886 a : 70)*

மிஞ்சுநவம் கார்த்திகையும் மிக்கெட்டு ரோகணியும்
மிஞ்சுநான்கு உத்திரமும் மின்னாளதனில் நட்சத்திர
முந்தியும் பிரிபோட னாளதனில் மனைகோலில்
துஞ்சுவா னாண்டுரெண்டில் சொல். 39

*(886 a : 69)*

பாய்ந்து வாயு தெற்கு
பரிவுடன் ஈசன் மேற்கு
ஆய்ந்ததோர் வடக்கு அங்கி
அவன்தலை நிருதி ..... கால்
வாய்ந்தஇம் மூன்றே மூக்கால்
வாஸ்துவின் கிடக்கும் வாறே. 40

*(1005b)*

காலமே சிவந்த வர்ணம்
கனகமாம் உச்சி நேரம்
சோலையோர் அந்தி வர்ணம்
சுரிகையாம் சொக்க மாகும்
பாலனார் இருக்கும் வர்ணம்
பன்னிரண் டிருந்து பார்ப்பீர். 41

*(1005 b )*

ஏழடு பிடிதிருவு ஒன்பது என்னு பின்னமும்
பதிமூன்றடி பதினாலடி மனையளக்கக் கேடு
பாழதாம் பதினஞ்சடி பதினேழடியும் குலைத்திடும்
பதினெட்டுக்கும் குடியோட்டுமே இருபத்து மூன்று
விலங்கிடும்

சூழவே இருபத்து நாலடி ஆக்கமெய்து மிலலையே
தண்டயே இருபத்து அஞ்சடி தொல்லை
சூழவினை எய்திடும் மறமான இருபத்து ஆறடி
அத்தையென் மரணமென்றுமே மாகமா
இருபத்து எட்டடி ஆகாதென்று மொழிந்திட்டேனே. 42
*(886 a : 92)*

ஆறு நூறு பலன்கள் தன்னை
அறியச் செய்யும் அமிசம்
ஏறு மாறு நடத்தை கொடுக்கும்
யோக மாந யோனியில்
பாறு பாறு யிதுப பலன்கள்
பார்பார் பதியின் அருளினால்
வாறு வாறு குறிப்புச் சொல்ல
விரைந்து வகுத்து உரைத்தனர். 43
*(796 : 26)*

எண்ணரவு முகத்தினால் மூன்றுந் தியன்
இதில் கழுத்துத் தான்மூன்றும் இகல்வெள்ளத் தழிவு
உண்ணுமுடல் ஈராறு வயர்மூ லங்கள்
ஓங்கியே நெல்விளையும் உத்ததுயர் தீரும்
கண்ணெணவே இடவெட்டு ஆறு நாளும்
கதிர்ச்சாவி போகுமெனக் காண லாகும்
தன்னளவே வால்தனிலே மூன்று நாளும்
தாள்சாவி யாய்போகும் தான்கண்டீரே. 44
*(886 a : 217)*

அணிமுடி ஏழு நாளும்
வாஸ்துவின் கிழக்கு நோக்கும்
இனிசதயம் ஏழு நாளும்
இயல்புடன் வடக்கு நோக்கும்
தனிப்புறு ஆவணி யாலும்
தனித்துடன் மேற்கு நோக்கும்
மணிமக மேழு நாளும்
வாஸ்துமன் தெற்கு நோக்கும். 45
*(886 a : 121)*

எட்டிவெகு ராச்சியம் இயல்பான பத்தடிதான் பாக்கியமாகும்
இன்பமிக எய்திடுமே பதினொன்றடி
திட்டமான பனிரெண் டடிதான் செல்வமுண்டு பிளவாயில்லையாம்
தீர்க்கமாக வெகுநன்மை யுண்டு வாச செப்பலாம் பதினாறடி
முட்டவே பதினொன்ப தாம்படி கிளைகூட்டு மென்று
மொழிந்திட முன்போ லிருந்து ஓரடிகிளை
கூட்டு மென்று மொழிந்திட்டேன் பட்டமாம் இருபதடியும்
ரெண்டு பலனுண்டு எதிரி யஞ்சுவாம் பார்க்கின்
மேலிருபத் தேழடியும் ரெண்டு பாக்கிய முப்பதடி பகருமே. 46

*(886 a : 91)*

வாஸ்துமன் தலையி லேரில்
வஞ்சமாய்ப் போரா மண்டோர்
பார்த்தவன் எதிரே காணில்
படபாடன நடுங்கி வீழ்வன்
பூத்தொழில் மாலை மார்பன்
புருஷனைக் கிடப்பா னாகில்
வேத்துடன் நடுங்கி வீழ்வான்
வேணுமே லோகத் தோரே. 47

*(886 a : 120)*

அடர்ந்ததாய் மனையி ருக்க
அதன்கிளை மனையே செய்தால்
தொடர்ந்துகீழ் பானுக் குமேல்
சுவர்கள் முதலாம் தச்சுப்
படர்ந்தகோ லால்அ ளந்து
பதினொரு முகூர்த்தம் பார்த்து
குடந்தையில் மாதம் தன்னில்
கோலவும் மயனும் சொன்னார். 48

*(886 a : 104)*

தென்வடல் கிழக்கு மேற்கு
திரும்பவும் மனையே செய்தால்
முன்னுள தாய்ம னைக்கு
முளைத்தனால் சுவர்க னத்தை

தொன்னகோல் கொண்ட ளந்து
துகைவகை நலம தாக
உன்னிய மனைகள் கோல
உத்தமம் மிகுதி என்றார் 49

(886 a : 105)

ஆதிநாள் ஏழ தாகும்
அருஞ்செவ்வாய் ஆற தாகும்
வேதியர் அஞ்ச தாகும்
மிகுபுதன் நால தாகும்
சாதியாய் வெள்ளி மூன்றே
சனிமூன்று திங்கள் ஒன்று
நீதியாய் இராவு காலம்
நித்தமும் அறிந்து கொள்ளே. 50

(886 a : 214)

வெய்யவன் ஒட்டி ரெட்டி
இதுவரை செவ்வாய் நாலு
பையவே சமனாம் புந்தி
பார்ப்பான்கால் பளிங்கு முக்கால்
ஐயமே சனியொன் றெட்டு
ஆநதோர் கிழமை தன்னில்
தையமா வாசை வந்தால்
சாத்தினோம் தரணி யோர்க்கே. 51

(886 a : 215)

காரதொண் மனைக்கு ரெண்டு
கருதுவாய் உரைக்கில் பத்து
மால்கொண்ட மனைக்கி ரெண்டு
வழிப்போக்குக் கைந்து
சேல்கொண்ட பிரதிட்டைக் காறும்
மயிர்வினை முடிசீ மந்தம்
மேல்கொண்ட நாம்இன் னூல்
கேட்டிடம் அசுத்தம் என்னே. 52

கிடந்த பதியை நாலேழாய்க்
    கீறி யதன்மேற் பரிவைத்து
இடங்கொள் அவனா ழின்டமட்டும்
    இருக்கும் அக்கினி பந்தமதாம்
குடந்தை சலமும் சூரியனும்
    சோம னுதிப்ப எனவுரையே
நடந்து சோமன் சலத்தினும்
    நல்ல மனைகள் தனைக்கோலே. 53

(886 a : 128)

உரைசேர் அக்கினி பந்தமதில்
    உஷ்ணம் வலுக்கும் உள்வினையாம்
வரையான் சலத்தில் வாழ்உண்டாம்
    வறுமை காணும் சூரியனில்
விரைசேர் குழலாள் ! மதிவாழ்வு
    விரித்த படியே மண்டலத்தில்
பரியா மனைக்கத் தொடுத்துவைத்த
    பந்தம் ஏத்தம் பார்த்துரையே ! 54

(886 a : 129)

தேனாரும் இறையா றெட்டுத்
    திருந்திய முழோ ரெண்டு
சாணாலு அடியேழ் பாதி
    தனதுனா அளந்து மையக்
கோலினால் கொண்ட ளந்து
    கண்டகுழி நாள்ராசி செய்வம்
வாழும்நாள் கருப்பம் அயவியம்
    மகத்துவம் யோனி மாதே. 55

(886 a : 133)

தென்திக்கில் அக்கினி ஆதியாகச் சிவதாக்கு
மன்திஷ்டி வாசல்விட மத்திபமும் வருத்தமுடன்
தன்துற் பயமும்தன லாபதானிய லாபமுடன்
குன்தன் சுகமும்வியாதி யந்துர்ப்பலம் கூறுகவே. 56

(886 a : 230)

முழஞ்சான் பிடிகளிறு முழமிரண் டாழிவிரல்
வழஞ்சேர் மூவெட்டாங் குலமாம் - குழஞ்சேர்
பத்துவது பார்த்துப் பாசியுடன் சாணொடுநாள்
பத்தமே மத்திபத்தில் ஆழி முழவரை இரண்டே. 57

*(886 a : 403)*

தலைநரி பதியுங் காரி
கலந்துடன் இருப்ப தென்றால்
சிலையது கருங்கல் காணும்
செங்கல்லும் கூடி நின்றால்
வலைசெறா வெங்கலம் பித்தளை
...... ...... யோ டெலும்பு
தலமதில் காணும் என்று
தாழ்சடை முனிவர் சொன்னார். 58

*(1005 b)*

வந்துயர் கருப்ப முத்தால்
மயிர்தனை சவரம் செய்யில்
முந்துருக் கருப்பம் கேடாம்
முடிந்தபின் பிதாவுக் கெய்து
மந்தாய சென்ம நாலில்
இறக்கலாண் பெண்சே யானோர்
நந்துமக் கருமஞ் செய்யில்
நாசமும் பயமு மாமே. 59

*(886 a : 201)*

**பொது**

புதியஆடை அணியும் நாட்கள்
அத்தஞ்சே ரவிட்டமுடன் நலத்திருவை அடையும்
அசுபதிசேர் புனர்பூசம் அரசமலத்தம்
உத்திரங்கள் மூன்றினொடு ரோகணியும் நன்றாம்
உயர்பூசம் சுவாதிநன்றாய் புத்திரனுண் டாகும்
சித்தரைநாள் பலவிதமாய் கூறையுண் டாகும்
திருந்துசெய்யும் செய்யுமணி சாகமுமிப் படியே
எழிலாடை உடுப்பநாள் இயம்பினார்முன் னோரே.

*(886 a : 227)*

மங்கைதன் செனை மரண
    மூன்றுபத் தாறு மன்னும்
திங்களைச் செல்லாய் வந்து
    சேர்ந்திடிற் கிரந்து நோக்கிற்
பொங்குசீர் மலம யன்றே
    புகழ்ந்தமூப் பிளமை யன்றே
தங்கிடுங் குப்பம் பூவா
    தக்கவர் ...............னாரே. 61

*(886 a : 200)*

வித்தவேணு மென்றால் வெள்ளிநின்ற நால்முதலாய்
அத்தமிரு மூன்றும் ஆகாது - மெத்த
வினையுளம் யீராறும் மேலாறும் நெல்சாலி
அழியுமே ஐம்மூன்றுந் தான். 62

*(886 a : 218)*

**நட்சத்திர பலன்**

ஓதும் அஸ்தம் உறையும்உ ரோகணி
நீதி யாமவிட் டஞ்சதை யங்களும்
கோதி லாமிருக சீரிடம் பூசமும்
தீதி லாத்திரு வோணமும் நன்மையே. 63

*(886 c : 42)*

நந்மை யாஞ்சோதி நாட்டும் அனுஷமும்
துன்மை இல்லாத் துடர்சித் திரையுடன்
வன்மை ரேவதி வளமுத்தி ரட்டாதி
பன்மை உத்திரை டம்பார்க்கச் சுபமிதே. 64

*(சி. நூ . பா. 537)*

பார்க்க உத்திரம் பகரும்நட் சத்திரம்
ஏர்க்க வேபதி னான்கும் சுபம்தரும்
தீர்க்க மாஞ்சிற்ப நூலாய்த் திரட்டியே
மார்க்க மாமயன் வகுத்துரை சொன்னதே. 65

*(சி. நூ. பா. 538)*

குறிப்பு: இந்தப் பதினான்கு நட்சத்திரங்களில் மிருகசிரிடம், சித்திரை, அவிட்டம் ஆகியவை உடலற்ற நாட்களாகும். உத்திரம், உத்திராடம் ஆகிய இரு நட்சத்திரங்களும் காலற்ற நாட்களாகும். இவை மங்கலமானகாரியங்கள் செய்யும்பொவுது விலக்க வேண்டும் என்று இதே நூலில், கூறப்பட்டிருப்பது இங்குச்சுட்டத்தக்கதாகும்.

### வாசல் விடுகிற இராசிப்பொருத்தம்

கயல்கனி பார்த்த வாசல்
கல்வியும் பொருளும் உண்டாம்
இயல்பென எமனை நோக்கில்
எண்ணொணாத் துயர மாகும்
வயல்வடக் கதிக புத்தி
வாயுவால் வழக்குச் சண்டை
புயல்பல மறியும் கும்பம்
புண்ணியம் புகழுண் டாமே. 66

*(சி. நூ. பா. 599)*

## 796 மனையலங்காரம்

### கடவுள் வாழ்த்து

சக்தியுடன் சிவன்கரந்தாள் சகலமனை யலங்காரம்
இத்தலத்தில் சண்முகனார் எனக்குரைத்தார் நித்தநித்தம்
பத்திபத்தி வித்தைதரு பாலமுர்தம் பசியாற
சித்திஒத்தைக் கொம்பன் சீர்பாதம் காப்பாமே. 67

### சிற்பநூல்

உத்ததோர் வள்ளி நாடன்
உயர்தரு மாந்தை வேந்தன்
கத்ததோர் சிற்ப நூலைக்
கலைகளும் பலவும் காணப்
பெத்ததோர் பெருமாள் மைந்தன்
பிச்சைசொற் தமிழைப் பேச
கத்ததோர் அறிவிப் பார்தன்
கழலிணை தலைமேற் கொள்வாம். 68

சராசரம் முதலாய் எங்கும்
தானவ னான ரூப
சிரமைந்து விழிமூ வைந்து
திகழ்கரம் இருப தாகி

பரநுதல் விழியிற் றென்றும்
　　பரப்பிரம விசுவன் என்ற
விரவுவன் ஐந்து பேத
　　வியரத்தை விளம்ப லுற்றேன். 69

*(இ. ள்) சரமாகிய அசைவும் அசரமாகிய நிலைய்யும்* இருவகையிலும் கூடிய தொகை என்பது இலட்சம் சீவராசி. இதிலே எங்கும் தானவனாய் விளங்கிய வஸ்துவாகிய பராபரன் ரூபம் பஞ்சமுகமும் பதினைந்து கண்ணும் இருபது புயத்தொடும் கூடி விளங்கிய ஆண்டவனுடைய அக்கினி கண்களிலே உற்பத்தியாகி பரப்பிரமவிசுவன் என்னும் பேராகியவர் மகவாகிய மனு, மயன், தொஷ்டன், சிற்பன், விசுவக்கியா என்னும் ஐந்து பேர்களுடைய இலட்சணங் களைச் சொல்வாம்.

**மனுப்பிர்மா**

மனுப்பிர்மா கற்கே பராசக்தி கிலியும்
　　வளர்திரு கோணகுண் டமுமாம்
கனமெனும் ருக்கு வேதமும் வானோர்
　　கருதிய வெக்கிய மதுவாம்
தினநலந் துய்ய வெள்ளிமுன் நூலும்
　　திருந்திய தெண்டுவெள் ளியுமாங்
கனமெனும் வேத மேகவா கனமும்
　　கருதுவன் மனுவது தனக்கே. 70

(742-3)

*(இ. ள்)* மனுப்பிர்மாவுக்கு பராசக்தியினுடைய உபாசனையும் திருவென்னும் மூன்று கோண ஓம குண்டமும் முதலாகிய இருக்கு வேதமும் தேவதை எக்கியமும் வெள்ளி எக்கிநோப விதமும் வெள்ளித்தெண்டும், வேத மேக வாகனத் தொடும் கூடி விளங்கிய மனுப்பிர்மா.

**மயப்பிர்மா**

மயப்பிரம மதற்கே ஆதி சத்தியின்
　　கைவரு திருசூ லமுஞ்சதிர்
நம்பெறு குண்டம் பேசுறு வேதமுமாம்
　　நவில்பிதுர் எக்கிய மதுவாம்

கயமுறை வனச முன்னூ லதுவாம்
கருதிய கழையெனும் தண்டாம்
செயமுறு துரோண மேகவா கனமும்
செப்புவன் மயனது தனக்கே. 71

*(742-4)*

*(இ. ள்)* ***மயப்பிர்மா இலட்சணம்:*** *ஆதிசக்தி உபாசனையும் சதிரச ஓம குண்டமும் இரண்டாவதாகிய யசுர் வேதமும் பிதுர்களுடைய எக்கியமும் தாமரை நூலாகிய முன்னூலும் மரமூங்கில் தெண்டுமது பேரான மேக வாகனத்தோடும் கூடி விளங்கிய மயப்பிரம்மா.*

## தொஷ்டப் பிர்மா

தொஷ்டப்பிர மனுக்கே ஞானசக் தியின்கை
தொடு திரு சூலமும் விருத்த
இஷ்டமாம் ஓம குண்டமும் சாம
வேதமும் மனுஷரெக் கியமும்
புஷ்டிதாம் புரமுன் நூலுடன் தண்டு
புகலது தாம்பிர மதனால்
லஷ்கா சமுமாஞ் சலனமேக வாகன
மதுதொஷ்ட பிர்மனுக் காமே. 72

*(742 -5)*

*(இ. ள்)* *தொஷ்டப் பிர்மா இலட்சணம். ஞான சக்தி உபாசனையும் விமுதாசரமாகிய ஓம குண்டமும் மூன்றாவதாகிய சாமவேதமும் மனுவிர் எக்கியமும் தாம்பிர முன்னூலும் தாம்பிரதண்டும் சலன மேக வாகனத்தொடும் கூடி விளங்கிய தொஷ்டப் பிர்மா.*

## சிற்ப பிர்மா

மேவிய சிற்ப பிர்மனுக் கிச்சாச
சக்தியின் சூலமும் விரும்பு
தூவிய உயர்ந்த சஷ்டிகோண குண்டலமுமாம்
உகந்ததோர் வேதசாத் திரங்கள்

தாவிய ரிஷி எக்கியமுடன் பருத்தி
தகமைமுன் னூலுமண் தண்டு
ஆவியாம் பிரம்பு தூமமே கமுமா
அறைவன வாகன பதுவே. 73

*(742-6)*

***(இ. ள்) சிற்பப் பிர்மா இலட்சணம் :*** *இச்சா சக்சி உபாசனையும் அறு கோண ஓம குண்டமும் வேதம், ஆகமம், சாஸ்திரம், புராணம் ரிஷி எக்கியமும் பருத்தி முன்னூலும் பிரப்பந் தண்டும் தூமமேக வாகனத்தோடுங் கூடி விளங்கிய சிற்பப் பிர்மா.*

### விசுவப் பிரமா

விசுவப்பிர மனுக்கே கிரியாசக்தி சூல
மேவிய அஷ்டகோ ணமுமா
இசைமிகு குண்டம் அதர்வண வேதமுமாம்
இயலதாம் பூதாக் கிரியமும்
நிசமுயர் பொன்னின் முன்னூலுடன் தண்டு
நேருயர் சொர்ணமு மதுவாம்
திசைதமோ மேக வாகன மதுவாய்ச்
செப்பினன் விசுவனுக் கிதுவே. 74

*(742 -5)*

***(இ. ள்) விசுவப்பிர்மா இலட்சணம்:*** *கிரியா சக்தி உபாசனையும் எட்டுக் கோணமாகிய ஓம குண்டமும் நாலாவதாகிய அதர்வன வேதமும் பூத எக்கியமும் சொர்ண எக்கினோஞாப விதமும் சொர்ண தண்டு தமோமேக வாகனத்தோடும் கூடி விளங்கிய விசுவப்பிர்மா.*

### காலத்தை நிர்ணயித்தல்

நாழிகை குளிகன் ஓரை
நல்லதோர் அருக்கன் சூலம்
சூழிய திக்கு யோனி
சுக்கிரன் இராசி மாதம்

வீழிலா வாஸ்து வின்றன்
விடமுறும் பக்க நாட்கள்
ஏழியல் வார முகூர்த்தம்
தியல்டினன் நிமித்தம் சொல்வாம். 75

*(886 a : 74)*

*(இ. ள்)* நாழிகை, குளிகன் உதயம், ஓரை உதயம், அருக்கன்றிலை, சூலநிலை, திக்கு நிலை, யோனிநிலை, சுக்கிரநிலை, இராசி நிலை, மாத நிலை, வாஸ்து புருஷன் நிலை, விஷகடிகை, பக்கம்,ாட்கள், வாரம் முகூர்த்தம் முதலானவைகளை இனிச் சொல்லத் தொடங்குவோம்.

**நாழிகை கூறல்**

சுட்டியை முட்டி நின்று
சூரியன் வலம தாக
ஒட்டியே விரலே ழக்கு
முரியதோர் நிழலைப் பார்த்து
மிட்டிய விரலொன் றிற்கு
மேவிய இரண்ட தாகக்
கட்டிய பெருமை கண்டு
கடிகையாய்ந் துரைசெய் வீரே. 76

*(சி. நூ. பா. 290)*

*(இ. ள்)* சூரியனை வலமாக வைத்து வலது சுண்டுவிரலை நடுவாக வளைத்து இரண்டு பெருவிரலுந்தவிர மற்றுண்டான ஏழு விரல்களையும் நேரே ஒட்டிப் பார்க்கில், ஓடின நிழலை ஒருவிரல் விட்டு நின்றால், இரண்டு நாழிகை சென்றது. முழுவதுமிப்படியே பொழுது சொல்லத்தக்கது.

**வேறு**

சுட்டுவிரல் மடக்கிச் சூரியர்க்குப் பக்கமதாய்
நட்டுவிரற் கிரயண்டு நாழிகையாய் -பாட்டில்
அடியாளக்க வேண்டாம் அலகுவைக்க வேண்டாம்
நொடியளவில் நாழி நுவல்.

## இரவில் நாழிகை பார்க்கும் முறை

உச்சமா மீனைப் பாரத்து
உறும்பூச முதலாய் எண்ணி
இச்சையாய் இரண்டே காலில்
ஏற்றிய தொகையின் கூறை
முற்சொன்ன மாதத் தைந்து
மொழியாறு தெய்தி கொண்டு
நிச்சய மதனைத் தள்ளி
நின்றது கடிகை யாமே. 77

(சி. நூ. பா. 291)

(இ. ள்) உச்சத்தில் நின்ற நட்சத்திரத்தைப் பார்த்து, பூச நட்சத்திரம் முதலாக நின்ற நட்சத்திரமளவும் எண்ணிக் கொண்டு இரண்டேகாலில் பெருக்கி, நின்ற தொகையைச் சித்திர முதலாகச் சென்று போன மாதத்தைக் கணக்குப் பார்த்து மாதமொன்றுக்கு ஐந்துபோக ஆறுக்கொன்று தள்ளி நின்ற சேடம் நாழிகையாம்.

## குளிகன் அறிதல்

அந்தக் கிழமை தனைதொட்டு
ஆடும் சனியன் மட்டெண்ணி
முந்தி மூன்றே முக்காலில்
முறையே பெருக்க வருங்குளிகன்
இந்தவேளை மனையெடுக்க
ஏர்க்கால் நாட்டல் ஊரேற்றல்
தந்தி நரவா கனமேற
தானிய மெடுக்க மிகநன்றே. 78

(886 a : 75)

(இ. ள்) எந்தக் கிழமையில் குளிகைக் காலம் பார்க்க வேண்டுமோ அந்தக்கிழமை முதலாக சனிக்கிழமை வரையிலும் கணக்கிட்டு வந்தத் தொகையேயை மூன்றே முக்காலிற் பெருக்கிக் கண்ட நாழிகையைக் குளிகை காலமாக்கிக் கொண்டு, மனைகோல, ஏர்க்கால் நாட்ட, ஊரேற்ற, யானை, பல்லக்கில் ஏற, தானியங்களெடுக்க மிகவும் நன்றாகும்.

### பகற் குளிகன்

ஞாயிறு முகூர்த்தம் ஏழாம்
நன்மதிக் காறாம் செவ்வாய்க்
கேயவைந் தாகும் புந்திக்
கீரிரண் டாம்பொன் மூன்றாம்
தூயநற் புகர்க்கி ரண்டாம்
சுன்னுனுக் கொன்ற தாகும்
ஆயயின் முகூர்த்தத் தோடே
அற்றிடும் குளிகன் எல்லில். 79

### இராக்குளிகன்

கதிரவன் தனக்கு மூன்றாம்
கவின்மதிக் கிரண்ட தாகும்
சதிர்பெறு செவ்வாய்க் கொன்றாம்
சாற்றியே புகர்க்கே ழாகும்
மதிவளர் பொன்னுக் காராம்
மன்புகர்க் கைந்தாம் நான்கு
கதிர்மகற் கரமு கூர்த்தம்
காட்டிய பகற்போற் கொள்ளே. 80

### பொது
### கண்ணுள்ள கண்ணற்ற திதிகள்

சந்தித்த பிற்பக் கத்தின்
தசமிவிட் டதன்பின் னைந்தும்
முந்துள்ள வாதி நான்கும்
குருடுபின் ஒருமூன் றோர்கண்
பிந்திய வாறுங் காணும்
பின்னின்மூன் றொருகண் தானும்
சிந்தித்த வாறுங் காணும்
செப்புமூன் றொருகண் காணே. 81

*(சி. நூ. பா. 151)*

(இ. ள்) அமரபட்சத்து ஏகாதசி முதல் ஐந்து திதிகளும், பூர்வபட்சத்துப் பிரதமை முதல் நான்கு திதிகளும் **குருட்டுத் திதிகளாகும்.** பூர்வபட்சத்து பஞ்சமி முதல் மூன்று திதிகளும் சதுர்த்தசியும் பூரணையும் அமரபட்சத்துத் பிரதமையும் அஷ்டமி முதல் மூன்று திதிகளும் **ஒரு கண் உள்ள திதிகளாகும்.** பூர்வ பட்சத்து அஷ்டமி முதல் ஆறு திதிகளும், அமரபட்சத்துத் துதிகை முதல் ஆறு திதிகளும் **இருகண்கள் உள்ள திதிகளாகும்.**

குறிப்பு: பூர்வபட்சத்துப் பிரதமை, துதிகை, திருதிகை, சதுர்த்தி, அமரபட்சத்து ஏகாதசி துவாதசி திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை ஆகிய ஒன்பது நாட்களும் குருட்டுத் திதிகள். பூர்வபட்சத்துப் பஞ்சமி, சஷ்டி, சப்தமி, சதுர்த்தசி, பௌர்ணமி அமரபட்சத்துப் பிரதமை, அஷ்டமி, நவமி, தசமி இந்த ஒன்பது நாட்களும் ஒரு கண்ணுள்ள திதிகள். பூர்வபட்சத்து அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, அமர பட்சத்து துதிகை, திரிதிகை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, இந்த ஒன்பது நாட்களும் இரண்டு கண்ணுள்ள திதிகள்.

## நட்சத்திரங்களும் இராசிகளும்

அசுபதி பரணி கார்த்திகை பாதங்கால்
அங்கே கொண்டது ஆமது மேஷமாம்
முசியும் கார்த்திகை முக்காலும் ரோகணி
மிரு சீரிடத் தரையது காளையாம்
மிருக மாந்தலை பின்னரை ஆதிரை
மீண்ட புனர்பூசம் முக்கால் மிதுனமாம்
பொசியும் பிண்டகால் பூசமோ டாயிலியம்
போத கொண்டது வேகற கடகமே. 82

*(2027b : 12)*

(இ. ள்) அசுவதி, பரணி, கார்த்திகை முதற்பாதம் கொண்டது **மேடஇராசி.** கார்த்திகை பின் முக்கால் ரோகணி, மிருகசீரிட முன்னரை கொண்டது **இடபஇராசி.** மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் கொண்டது **மிதுன இராசி.** புனர்பூசம் பின்கால், பூசம், ஆயிலியம் கொண்டது **கடகஇராசி.**

புகழ்மகம் பூரம் பங்குனி காலும்
போத கொண்டது வேயது சிம்மமாம்
சிகளுத் திரமுக் காலுடன் அஸ்தமும்
சேர சித்திரை முன்னரை கன்னியாம்
மகிளுரா சித்திரை பின்னரை சுவாதியும்
வண்மை விசாகத்து முக்கால் துலாமது
நிகழவே விசாகம் கால்அ னுஷமும்
நேரும் கேட்டையும் கொண்டது தேளதே. 83

*(2027 b : 13)*

*(இ. ள்)* மகம், பூரம், உத்திரத்தின் முதற்கால் கொண்டது **சிம்மஇராசி**. உத்திரம் பின் முக்கால், அஸ்தம், சித்திரை முன்னரை கொண்டது **கன்னி இராசி**. சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முதல் முக்கால் கொண்டது **துலாம் இராசி**. விசாகம் கடைசி கால், அனுஷம், கேட்டை கொண்டது **விருச்சிக இராசி**.

கொண்ட மூலம் பூராடம் உத்தி
ராடக்கால் கோன்குரு தனுசது வாநது
பின்றி லங்கு உத்திராடம் முக்காலும்
பழமைசோ னைப்அரை அவிட்டம் மகரமாம்
மண்ணுவிட் டத்தின் பின்னரை சதயம்
மருவு செக்கு முக்கால் கும்பமாம்
பின்புரட்டை கடைசி காலுடன் தானும்
முரசு ரேவதி கொண்டது மீனமே. 84

*(2027 b : 14)*

*(இ. ள்)* மூலம், பூராடம், உத்திராடம் முதற்கால் கொண்டது **தனுசு இராசி**. உத்திராடம் பின்கால், திருவோனம், அவிட்டம் முன்னரை கொண்டது **மகர இராசி**. அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முதல் முக்கால் கொண்டது **கும்ப இராசி**. பூரட்டாதி கடைசி கால், உத்திரட்டாதி, இரேவதி கொண்டது **மீன இராசி**.

## திசைகள்

திகழும் அசுவனி மகமுடன் மூலம்
கேசேழு வருசம் தாகும்
புகழுறு பரணி பூரம்பூ ராடம்
புகரிருப தாண்டே யாகும்
சுகவெரி நாளுத் துரமுத் திராடம்
சுடர்திசை ஆறுவரு சமுமாம்
மகிழ்ரோகணியத் தம்திரு வோணம்
மதிதிசை பத்துவரு டமுமே. 85

(886 b : 39)

*(இ. ள்)* அசுவனி, மகம், மூலம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல் திசை **கேதுதிசை**யாகும். இது ஏழு ஆண்டுகள் நடக்கும். பரணி, பூரம், பூராடம் ஆகிய நட்சத்திரங்கள்ளில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **சுக்கிரதிசை**யாகும். இது இருபது ஆண்டுகள் நடக்கும். கார்த்திகை, உத்திரம், உத்திராடம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்தகளுக்கு முதல்திசை **சூரியதிசை**யாகும். இது ஆறு ஆண்டுகள் நடக்கும். உரோகணி, அஸ்தம், திருவோணம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **சந்திரதிசை**யாகும். இது பத்து ஆண்டுகள் நடக்கும்.

ஏசு மான்தலை சித்திரை அவிட்டமும்
சேய்பெறு திசைவருடம் ஏழாகும்
ஈசநாள் சோதி சதயமி ராகு
வின்திசை வருடம் ரொன்பான்
தேசுயர் புமர்த்தம் முறம்பு ரட்டையும்
பொன்திசை பதினாறு வருடமாம்
பூசம் அனுடம் மன்னன் சனிதிசை
பொருந்துபத் தொண்பதான் டாமே. 86

(886 b : 40)

*(இ. ள்)* மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **செவ்வாய்த் திசையாகும்**. இது ஏழு ஆண்டுகள் நடக்கும். திருவாதிரை,

சுவாதி, சதயம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **இராகுதிசையாகும்**. இது பதினெட்டு ஆண்டுகள் நடக்கும். புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **குருதிசை** யாகும். இது பதினாறு ஆண்டுகள் நடக்கும். பூசம், அனுடம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **சனிதிசை**யாகும். இது பத்தொன்பது ஆண்டுகள் நடக்கும்.

ஆயில்யம் கேட்டை இரேவதி புதன்திசை
மற்றது பதினேழு வருஷமாம்
தூயகேந் திரத்தோ டுயர்திரி கோணம்
துகளறு தனமொடு இலாபம்
நேயவித் தானம் களினதி பதிகள்
நிறைதிசை உத்தம மாகும்
பாயநன் கிலதாய் வருந்துர்த்தா னாதி
பதிகளின் திசைகள்மத் திமமே. 87

*(886 b : 41)*

*(இ. ள்)* ஆயில்யம், கேட்டை, இரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **புதன்திசை** யாகும். இது பதினேழு ஆண்டுகளாகும். கேந்திரம், திரிகோணம், இரண்டாமிடம், பதினோராமிடம் ஆகியவற்றன் அதிபதிகள் இருந்து திசை நடத்த அந்தத் திசைகளில் நன்மைகள் மிகுதியாக உண்டாகும். மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகியவற்றின் அதிபதிகள் இருந்து திசை நடத்த அத்திசைகளில் மத்திமமான பலன்கள் கிடைக்கும்.

## பொருத்தம்

### செவி

முன்னுள முழத்தை ஆறினில் பெருக்கி
முந்துமுன் நான்கினிற் கழிக்க
துன்னறு சேடம் இரட்டையே யாகில்
சொல்லுவர் செவியிரண் டெனவே

பின்னுமொன் றாகில் ஓர்செவி யாகப்
பேசுவர் சிற்பநூல் புலவர்
நண்ணுதல் கருங்கட் வள்வாய் செந்தேன்
நறுபூங் குழற்கனி மொழியே ! 88

*(886 a : 203)*

*(இ. ள்)* நல்ல நெற்றியையும் கரிய கண்களையும், ஒளி பொருந்திய பற்களைக் கொண்ட வாயினையும், செந்தேனைச் சொறியும் பூக்களைச் சூடிய கூந்தலையும் கொண்ட இனிய மொழியைப் பேசும் பெண்ணே ! மனையின் நீள அகலத்தைச் சரியாக அளந்து, பெருக்கி வந்த குழித் தொகையை ஆறால் பெருக்கிப் பன்னிரண்டால் வகுக்கக் கிடைக்கும் மீதி, செவியாகும். மீதி இரட்டைப் படை எண்களாக இருப்பின், **இரண்டு செவி** என்பர். மீதி ஒற்றைப்படை எண்களாக இருப்பின், **ஒரு செவி** என்பர். இதனை சிற்ப நூல் வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

## திசைகள் விபரம்

கார்த்திகை உத்திரம் உத்திரா டமுமே
கருதிய பானுவின் திசையாம்
ஏத்திய அஸ்தம் ரோகணி வோணம்
இயல்தரு இந்துவின் திசையாம்
மாத்திய அவிட்டம் சித்திரை மிருக
சீரிடமும்சே வருகுசன் திசையாம்
போத்திய சதயம் சுவாதிதிரு வாதிரை
புகழுயர் ராகுவின் திசையே ! 89

*(742: 126)*

*(இ. ள்)* கார்த்திகை, உத்திரம், உத்திராடம் ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குச் சூரியதிசை முதல்திசை. அஸ்தம், திருவோணம், உரோகணி ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குச் சந்திரதிசை முதல்திசை. அவிட்டம், சித்திரை, மிருகசீரிடம் ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குச் செவ்வாய்திசை

மு தல்திசை. சதயம், சுவாதி, திருவாதிரை ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இராகுவின் திசை முதல்திசையாகும்.

### திசைகள் விபரம்

புனர்வசு விசாகம் பூரட்டா தியுமே
பொருந்தி பிரகஸ்பதி திசையாம்
மௌஉத்தி ரட்டாதி பூசமும் அனுஷம்
மேவிய சனிதிசை யதுவாம்
தினவுயர் கேட்டை ஆயிலியம் ரேவதி
நிறைபுதன் திசையென நிகழ்த்தாய்
தனமுயர் மகமும் அசுபதி மூலம்
தருகேது திசையெனச் சாற்றே. 90

*(742: 127)*

*(இ. ள்) புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குக் குருதிசை முதல்திசை. உத்திரட்டாதி, பூசம், அனுஷம் ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குப் புதன்திசை முதல்திசை. மகம், அசுபதி, மூலமம் ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குக் கேதுதிசை முதல்திசை.*

### திசைகள் விவரம்

பூராடம் பரணி பூரமும் இயல்சேர்
பொருந்திய சுக்கிரன் திசையும்
நேராது திசையின் பலனது சொல்வேன்
நிறைசனி மத்திமம் இராகு
ஏறாத் தீது கேதுமத் திமமாம்
இயல்குசன் இரவியும் தீதாம்
போரான மற்ற நாலும்நன் மையுமாம்
பெருமய னுரைசெய்த பேச்சே. 91

*(742: 128)*

(இ. ள்) பூராடம், பரணி, பூரம் ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குச் சுக்கிர திசை முதல்திசை. ஆக ஒன்பது கிரக திசைகள். இவற்றுள் சனிதிசை மத்திமம். இராகு திசை தீது; கேதுதிசை மத்திமம்; செவ்வாய், சூரியதிசை இரண்டும் தீயவை; சந்திரன் திசை, புதன்திசை, குருதிசை, சுக்கிரதிசை ஆகியவை நன்மையானவை.

**சந்திர பலன்**

நன்றிகோ ளிறைவன் ராசிமுன் மனையில்
நன்மதி இராசிமட் டெண்ணி
ஒன்றுமூன் றாறோ டேழ்பத்து பதினொன்
றிற்சுகம் பூர்வம் தனக்கு
துன்றிரண் டைந்தொன் பான்சுபம் அமரம்
துன்னுபன் னிரண்டுநா லெட்டும்
வென்றிசேர் சுபமாம் மற்றவை தீதாம்
விளங்கிய சந்திர பலனே. 92

*(886 a : 33)*

(இ. ள்) சென்ம இராசி முதல் அன்றைய தினம் சந்திரன் இருக்கின்ற இராசி வரைக்கும் எண்ணிக்கொண்டு வந்த தொகையில் ஒன்று, மூன்று, ஆறு, ஏழு, பத்து, பதினொன்று ஆகிய இராசிகள் இருபட்சங்களிலும் சுபத்தைக் கொடுக்கும். பூர்வ பட்சத்தில் இரண்டு, ஐந்து, ஒன்பது சுபத்தைத் தரும். அமரபட்சத்தில் பன்னிரண்டு, நான்கு, எட்டு ஆகிய இராசிகள் நன்மையைத் தரும். மற்ற இராசிகள் தீமையைத் தருவன.

குறிப்பு: பூர்வபட்சத்தில் நான்கு, எட்டு, பன்னிரண்டு ஆகிய மூன்று இராசிகளும், அமர பட்சத்தில் இரண்டு ஐந்து. ஒன்பது ஆகிய இராசிகளும் தீமையைத் தருவனவாகும்.

### பொது
### கோள்களும் குணங்களும்

கடல்புடை யுடுத்த மாநில வரையிற்
கணவே ளைகளும் உரைப்பாம்
தொடர்மதி குருவும் சத்துவ மாகும்
சுக்கிரன் சேய்ரா ஜதமாம்
பசர்செழுங் கதிரோன் சனிபுதன் மூன்றும்
பகர்ந்திடும் தாமத குணமாம்
விடமெனக் கொடிய சுடரிலை வடிவேல்
விழிஅடி கியநடை மயிலே! 93

*(886 a : 34)*

*(இ. ள்)* நஞ்சினைப் போன்று கொடியதாகிய ஒளிபொருந்திய இலைபோன்று வடிவமைக்கப்பட்ட வேலை ஒத்த கூரிய விழிகளையும். அழகிய நடையையும் கொண்ட மயில்போன்ற சாயலையுடைய பெண்ணே! சந்திரனும் குருவும் **சாத்வீகமான கோள்க**ளாகும். சுக்கிரன், செவ்வாய் ஆகியவை **இராஜத குணம் உடைய கோள்கள்.** சூரியன், சனி, புதன் ஆகிய மூன்று கோள்களும் **தாமத குணமுடைய கோள்கள்.**

### பொது
### குருட்டு, செவிட்டு, முடவன் இராசிகள்

இனிய சிங்கம் எருதாடு
இரவி யுதிக்க குருடாகும்
கனியும் தண்டு நண்டுமுதல்
கங்குற் பொழுதில் குருடாகும்
தனுசு மகரம் இராச்செவிடு
தராசும் தேளும் பகல்செவிடு
மனிதன் கும்பம் பகல்முடவன்
மருவு மீனம் இராமுடவன் 94

*(சி. நா. பா. 21*

*(இ. ள்)* சிங்கம், எருது, ஆடு ஆகியவை சூரியன் வந்தால் குருடாகக் கூடிய **பகல் குருட்டு இராசிகளாகும்.** மிதுனம், கற்கடகம் ஆகியவை **இரவுக் குருட்டு இராசிகளாகும்.** தனுசு, மகரம் ஆகியவை **இரவில் செவிடாக உள்ள இராசிகளாகும்.** துலாம், விருச்சிகம் ஆகியவை **பகலில் செவிடாக உள்ள இராசிகளாகும்.** கும்பம் **பகல் முடவன் இராசி.** மீனம் **இரவு முடவன் இராசி.**

குறிப்பு: இரவு விழிப்பு இராசிகள் மேடம், இடபம், மிதுனம், கடகம், தனுசு, மகரம் என்னும் ஆறு இராசிகளாகும். பகல்விழிப்பு இராசிகள் சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம், மீனம் என்னும் ஆறு இராசிகளாகும். இப்பாடலில் இராசி விழிப்புகள் குறித்து மாறுபட்டக் கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

## பொது
## கண்ணுள்ள, கண்ணற்ற நாட்கள்
## (சூரி,சந்திர திருஷ்டி)

ஒருகண்ணுண் டெனினும் திங்கட்
குத்தமம் கதிரோற் காகா
இருகண்ணுன் டானாற் பக்கம்
யாவர்க்கும் இன்பம் எய்தும்
இரு கண்ணும் இல்லா நாளில்
இயற்றிய கருமம் எல்லாம்
விரவிய சுற்றத் தோடும்
கெடுமென விளம்பி னாரே. 95

*(சி. நூ. பா. 152)*

*(இ. ள்)* சந்திரனுக்கு ஒரு கண்ணிருந்தாலும் உத்தமம். சூரியனுக்கு ஒரு கண்ணிருந்தாலும் ஆகாது. இரண்டு கண்ணுள்ள நாட்களில் சுப காரியம் செய்யலாம்.

## இரவு, பகல், கண்விழிப்பு

விளம்பிய மேடம் குண்டை
வீணைமக ரங்கடகம் வில்லும்
இளம்பிறை தனது மாறும்
இரவுகள் காணும் என்க

கொளுந்திரு மரிகோல் கன்னி
குடங்கயல் தேளும் மெல்ல
வளப்படும் அருக்கன் கூறாய்ப்
பகல்விழி உடைய மன்றோ! 96

*(சி. நூ. பா. 153)*

*(இ. ள்)* மேடம், ரிஷபம், மிதுனம், மகரம், கடகம், தனுசு இவ்வாறும் சந்திரன் கூடும். இதுக்கு இரவு கண் விழிப்பு. துலாம் சிங்கம், கன்னி, கும்பம், மீனம், விருச்சிகம் இவ்வாறு சூரியன் கூடும். இதற்குப் பகல் கண் விழிப்பாம்.

### பொருத்தம்

### கண்ணுள்ள, கண்ணற்ற நாட்கள்

### (சந்திரன் திருஷ்டி)

இரவி வார முதல்வாஸ்து வாரமட்
டெண்ணி மூன்றில் பெருக்குதொகை தன்னை
பரவும் அசுவனி முதலாக வெண்ணி
பகரும் ஒன்பது ஓர்கண் ணதுக்குமேல்
விரவு நாள்பனி ரெண்டுமே இரட்டைகண்
மேலதற்கு மேலொறு நாளந் தகமாம்
துரிசிலா மனைஆ லயம்சத் திரம்சோ
தித்தர்க்கு இவையே சோம திருட்டி. 97

*(686 ௳ : 52)*

*(இ. ள்)* ஞாயிற்றுக்கிழமை முதல் மனைகோலும் நாள் வரை சென்ற கிழமையை மூன்றில் பெருக்கி, வந்த தொகையை அசுவதி முதலாகக் கழித்து நின்ற நட்சத்திரத்தில் ஒன்பது நட்சத்திரங்கள், சந்திரனுக்கு **ஒரு கண் பார்வையுடைய நாட்கள்** என்றும், அதற்கு மேல் பன்னிரண்டு நட்சத்திரங்கள் **இருகண் பார்வையுடைய நாட்கள்** என்றும் அதற்குமேல் ஆறு நட்சத்திரங்கள் **குருட்டு நாட்கள்** என்றும் அறிந்துகொள்க.

**வேறு**

அருக்கனார் கிழமை யாதி
சென்றவக் கிழமை ஆய்ந்து
பெருக்கிமூன் றதனின் பேற்றை
மாமுதற் கழித்துப் பின்னை
இருக்குநா ளொன்பா னோர்கண்
பன்னிரண் டிருகண் காணும்
தருக்கிலாப் பின்னாள் ஆறும்
குருட்டுநாட் சந்தி ரர்க்கே. 98

***(சி. நூ. பா. 150)***

**கண்ணுள்ள, கண்ணற்ற நாட்கள்**

**சூரிய திருஷ்டி**

வாஸ்து வாரம் ஆதியாய் பானுவின்
வாரமட் டெண்ணி மூன்றிறஅ பெருக்கியே
யாத்திடும் பரணிமுத லாகவே எண்ணி
பகரும் ஏழ்நாள் ஓர்விழி யாகுமால்
சேர்த்த ஒன்ப திருகண் அதன்மிசைச்
செப்பு மேலொடு கண்ணும் அதறஅகுமேல்
நீத்த நான்குநாள் அந்தகம் என்பார்கள்
நிலவுபே ரோணிச் சூரிய திருஷ்டியே. 99

*(886 C : 53)*

*(இ. ள்)* சூரியன் நின்ற நாளை, ஞாயிற்றுக் கிழமை முதல் சென்ற கிழமையை மூன்றில் பெருக்கி, வந்த தொகையை பரணி முதலாகக் கழித்து நின்ற நட்சத்திரத்தில் ஏழு நட்சத்திரங்கள் சூரியனுக்கு **ஒருகண் பார்வையுடைய நாட்களாகும்** என்றும், அதற்குமேல் ஒன்பது நட்சத்திரங்கள். **இருகண் பார்வையுடைய நாட்களாகும்** என்றும், அதற்குமேல் ஐந்து நட்சத்திரங்கள் குருட்டு **நாட்களென்றும்** அறிந்துகொள்க.

குறிப்பு: இப்பாடலில் கூறப்பட்டுள்ள கணக்கீட்டு முறையினும் முற்றிலும் மாறுபட்டதாக சூரிய திருஷ்டியைப் பற்றி சில நூல்களில் கூறப்பட்டுள்ளன.

## பொது
## கண்ணுள்ள, கண்ணற்ற நாட்கள்
## (சூரியதிருஷ்டி)

மேதகு கதிரோன் நின்ற
நாளுமற் றதன்மேல் மூன்றும்
கோதறு பின்னின் மூன்றும்
குருட்டுநாள் என்று கொள்க
ஓதிய அதற்குப் பின்முன்
நான்குநாள் ஒருகண் காணும்
ஏதமில் நின்ற நாட்கள்
இருகண்ணுண் டருக்கர்க் கென்றே. 100.

*(சி. நூ. பா. 149)*

*(இ. ள்)* சூரியன் நின்ற நாளுக்கு முன் மூன்று, பின் மூன்று நாட்களும் குருட்டு **நாட்களாகும்.** அதற்கு முன் நான்கு பின் நான்கு நாட்களும் ஒரு **கண் பார்வையுள்ள நாட்களாகும்.** மற்ற நாட்கள் **இரு கண் பார்வையுள்ள நாட்களாகும்.**

## பொது
## இராசிகள்

தனுவிடை ஆடு கன்னி
தலையிலே நாகம் உண்டு
மனுஅரி படியாள் கும்பம்
மத்தியில் விஷமே உண்டு
சினவிய மகரம் மீனம்
தேளாகும் நண்டு தானும்
கனவிய பண்டு நின்று
கடைதனில் துண்ணு மென்றே. 101

*(1005 a )*

*(இ. ள்)* தனுசு, ரிஷபம், மேடம், கன்னி இந்த நான்கு இராசிகளுக்கும் தலையிலே விஷம்; சிம்மம், துலாம், மிதுனம், கும்பம் இந்த நான்கு இராசிகளுக்கும் இடையிலே விஷம்; மகரம் மீனம், விருச்சிகம், கற்கடகம் இந்த நான்கு இராசிகளுக்கும் கடைசியிலே விஷம்.

## பொது

### கண்ணுள்ள, கண்ணற்ற நாட்கள்

நல்லதோர் வியாழம் வெள்ளி
நற்புதன் இருகண் ணாகும்
வல்லதோர் இரவி திங்கள்
வருமொரு கண்ண தாகும்
கல்லவே சுமமு கூர்த்தம்
கருணையாய்ச் செய்வா யென்று
சொல்லினார் உமைக்கு ஈசர்
சுகமுள நாளீ தென்றே. 102

*(சி. நூ. பா. 146)*

*(இ. ள்)* குருவாரம், சுக்கிர வாரம், புதவாரம் இந்த மூன்று நாட்களும் இரண்டு கண்ணுள்ள நாட்கள். ஆதிவாரம், சோம வாரம் இந்த இரண்டு நாட்களும் ஒரு கண்ணுள்ள நாட்கள். இந்நாட்களில் இரு கண்ணுள்ள நாட்கள் விசேடம். அந்நாட்களில் சுப காரியங்கள் செய்யலாமென்று பரமசிவன் பார்வதிக்கு உபதேசித்தார். ஆகையால், நாளும் கோளும் நட்சத்திரமும் பார்த்து சுபகாரியங்கள் செய்ய உத்தமம்.

### இதுவுமது

புந்தி வியாழன் புகர்ான் இருகண்ணாம்
இந்து அருக்கன் இவர்ஒரு கண் - சந்ததமாம்
செந்தழல் மைந்தான் சேய்குரு டாகும்
சந்ததமும் என்றே அறி. *(886 C : 52)*

*(இ. ள்)* புதன், வியாவன், வெள்ளிக்கிழமைகளுக்கு இரண்டு கண்கள்; ஞாயிறு, திங்கட்கிழமைகளுக்கு ஒரு கண்; சனி, செவ்வாய்க்கிழமைகளுக்குக் கண்ணில்லை.

### குருட்டு வாரம்

மற்றதோர் சனிசெவ் வாய்கள்
வந்திடும் இரண்டு நாளும்
குற்றமே உள்ள தான
குருட்டுநாள் இதுவே யாகும்

நற்றமிழ் சனிசெவ் வாய்கள்
வந்திடும் இரண்டு நாளும்
குற்றமே உள்ள தான
குருட்டுநாள் இதுவே யாகும்
நற்றமிழ் தேர்ந்தோர் இன்னாள்
நல்லதோர் சுபமு கூர்த்தம்
உற்றபேர் செய்ய மாட்டார்
ஒருகண்ணும் இல்லா நாளே! 103

*(சி. நூ. பா. 148)*

*(இ. ள்)* சனிவாரம், மங்கள வாரம் ஆகிய இந்த இரண்டு நாட்களும் குருட்டு நாட்கள் என்பனவாகும். இந்நாட்களில் கணித முணர்ந்த மேலோர்கள் சுபமுகூர்த்தம் செய்ய மாட்டார்கள் என்பதாம்.

## பொது
## மாதங்களும் விலங்களும்

சித்திரை மூன்று மாதம்
சித்தெலி பூனை யாகும்
மற்றொரு மூன்று மாதம்
வருமுயல் நாய தாகும்
அற்பசி மூன்று மாதம்
அத்தியும் ஆளி யாகும்
தையதே மூன்று மாதம்
சர்ப்பமும் கெருட னாமே. 104

*(1005 b)*

*(இ. ள்)* சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மூன்று மாதங்களுக்கும் எலி, பூனை ஆகியவையாகும்; ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய மூன்று மாதங்களுக்கும் முயல், நாய் ஆகியவையாகும்; ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மூன்று மாதங்களுக்கும் யானை, புலி ஆகியவையாகும்; தை, மாசி, பங்குனி ஆகிய மூன்று மாதங்களுக்கும் பாம்பு, கருடன் ஆகியவையாகும்.

## பொது

### இராசி நாழிகை

அரிமிதுனம் தேள்மகரம் அஞ்சே காலாம்
வரியலவன் வில்லுடனே அஞ்சரையாம் பெரிய
எருதுகுடம் நாலேமுக்கால் எழிற்கன்னி கோலஞ்சு
பருமீனோ டாடுடனே பகர்கடிகை நாலேகால். 105
*(1005 b)*

**(இ. ள்) மேஷம் $4\frac{1}{4}$, ரிஷபம் $4\frac{3}{4}$, மிதுனம் $5\frac{1}{4}$, கற்கடகம் $5\frac{1}{2}$, கன்னி 5, சிம்மம் $5\frac{1}{4}$, துலாம் 5, விருச்சிகம் $5\frac{1}{4}$, தனுசு $5\frac{1}{2}$, மகரம் $5\frac{1}{4}$, கும்பம் $4\frac{3}{4}$, மீனம் $4\frac{1}{4}$ ஆக இராசி பன்னிரண்டிற்கும் நாழிகை அறுபது.**

### இராசி விழிப்பு

மேசமுடன் எருது மிதுனமுடன் கடகம்
தனுசுடன் மகரம் ராவிழிக்கு மென்பர்
சிங்கம் கன்னி கோல்தேள் குடமீனும்
மமாங்கு ளன்றாப் பகல்வி ழிக்குமதே. 106
*(1005 b)*

**(இ. ள்) மேடம், ரிஷபம், மிதுனம், கடகம், தனுசு,** மகரம் ஆகிய ஆறு இராசிகளும் **இரவு விழிக்கும் இராசிகள். சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம், மீனம் ஆகிய** ஆறு இராசிகளும் **பகலில் விழிக்கும் இராசிகள்.**

## பொது

### ஆடு மாடு விலைக்கு வாங்குதல் விற்றல்

உத்திரம் மூன்றி னோடு
உரோகணி ஓணத் தோடு
சித்திரை மகத்தி னோடு
சிறந்தசீ ரவிட்டத் தோடு
கொத்துடன் ஆடு மாடு
கொள்ளுவீர் விற்பீ ராகில்
அத்திடும் காலி யெல்லாம்
ஆண்டொன்றில் மாண்டு போமே. 107
*(885 a : 219)*

(இ. ள்) உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, சித்திரை, மகம், அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் ஆடு மாடுகளை வாங்கவோ விற்கவோ கூடாது. அவ்வாறின்றி வாங்கி விற்க, கன்றுகாலிகள் ஆண்டொன்றில் இறந்து ஒன்றுமில்லாமல் போய்விடும்.

## பயன்படுத்திய நூல்கள்


1. சாரஸ்வதீய சித்ரகர்ம சாஸ்திரம், கே. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி (பதிப்.), தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, முதல் பதிப்பு, 1960.

2. சிலப்பதிகாரம், உ. வே. சாமிநாதையர் (பதிப்.), கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு.

3. சில்ப ரத்தினம், க. கணபதி சாஸ்திரி, கே. சாம்பசிவ சாஸ்திரி (பதிப்.), தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, முதல் பதிப்பு, 1960.

4. சிற்ப சாஸ்திரமென்னும் மனையடி சாஸ்திரம், அமரம்பேடு இராஜரத்தின முதலியார் (பதிப்.), மலர்மகள் விலாச அச்சுக்கூடம், சென்னை-1962.

5. சிற்ப நூலனெனும் மனையடி சாத்திரம்................. வித்யாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை 1932.

6. சிற்ப ரத்னாகரம், சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி, ப. வ. கிருஷ்ணசாமிப்பிள்ளை (பதிப்.) மனோரஞ்சனி அச்சுக்கூடம், சென்னை, 1927.

7. சீவகசிந்தாமணி, ஞா. மாணிக்கவாசகம் (உரை), அருணா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-1965.

8. மயநூல் என்னும் மனையடி சாஸ்திரம், பூ. சுப்பிரமணியம் (பதிப்.) பாவை அச்சகம், சென்னை, முதற்பதிப்பு-1995.

9. மயமதம், பாகம்-I, கே. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி (பதிப்.) தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், முதல் பதிப்பு, 1966.

10. மயமதம், பாகம்-II, கே. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி (பதிப்.) தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், முதல் பதிப்பு, 1968.

11. மனைநூல், பூ. சுப்பிரமணிய சாஸ்திரி (பதிப்.), உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, முதல் பதிப்பு, 1981.

12. மனையடி சாஸ்திரம், 4. முனுசாமி நாயுடு அச்சகம், சென்னை, 1917.

13. மனையடி சாஸ்திரமென்னும் பெரிய சிற்ப சாஸ்திரக் களஞ்சியம், B. இரத்தின நாயக்கர் ஸன்ஸ், சென்னை, ஆண்டு இல்லை.

14. வாஸ்து வித்யை, தேதியூர். எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி (பதிப்.), தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, முதல் பதிப்பு, 2005.

15. வில்லி பாரதம், ஆறுமுகநாவலர் (பதிப்.) வித்யாநுபாலனயந்திரசாலை, சென்னை, பதினோராம் பதிப்பு, துந்துபி வருஷம்.

16. விஸ்வகர்ம வாஸ்து சாஸ்திரம், கே. வாசுதேவ சாஸ்திரி, எம். பி. தத்ரே, தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, முதல் பதிப்பு, 1958.

---- ❄ ----

# பயன்படுத்திய சுவடிகள்

| | | சுவடி எண். |
|---|---|---|
| 1. | சில்ப சாஸ்திரம் | 739 |
| 2. | ,, ,, | 742 |
| 3. | ,, ,, | 878b |
| 4. | சில்ப சார சுருக்க சிந்தாமணி | 886b |
| 5. | சிற்ப சாத்திரம் | 1005a |
| 6. | ,, ,, | 1411b |
| 7. | மயனூல் | 797 |
| 8. | மயனூல் | 886a |
| 9. | ,, | 886c |
| 10. | மயனூல் சாத்திரம் | 2027b |
| 11. | மனை சாத்திரம் | 1568d |
| 12. | ,, ,, | 1569 |
| 13. | மனையடி சாத்திரம் | 1005b |
| 14. | ,, ,, | 1411b |
| 15. | ,, ,, | 2027a |
| 16. | மனையலங்காரம் | 796 |

